# வேதப் பழமையா னசௌரா ஷ்ட்ரம்

ஆசிரியர் : தெஸ்மா . T.R. பா ஸ்கர்
183/8, 2வது அக்ரஹா ரம்,
சேலம் # 636 001.
Ph : (0427) 2250894
http://palkar-41.tripod.com
E-Mail : desvanbhaskar@yahoo.co.in

பொ ருளடக்கம்


| | பக்கம் எண் |
|---|---|
| முன்னுரை | 2 |
| ஆசிரியர் உரை | 4 |
| மொ ழி என்பது என்ன? | 10 |
| சௌரா ஷ்ட்ர மொ ழியின் பழமை | 15 |
| வேதத்தில் சௌரா ஷ்ட்ரம் - குறிப்புகள் | 21 |
| வரலா ற்றில் சௌரா ஷ்ட்ரம் - குறிப்புகள் | 21 |
| சௌரா ஷ்ட்ரா இலக்கண நூ ல்கள் | 26 |
| சௌரா ஷ்ட்ர இலக்கிய நூ ல்கள் | 28 |
| வரலா ற்று ஆதா ரங்கள் | 37 |
| சிந்து சமவெளி நா கரிக கா லம் | 41 |
| வருட வா ரியா க சௌரா ஷ்ட்ரத்தின் ஆட்சியா ளர்கள் | 44 |
| கிருஷ்ணர் கா லத்திய ஜனநா யக ஆட்சி நிர்வா க முறை | 48 |
| உபர்கா ட் கோ ட்டை | 51 |
| ஸ்வா மி விவேகா நந்தரை எழுச்சி கொ ள்ளச் செய்த சௌரா ஷ்ட்ரம் | 55 |
| சௌரா ஷ்ட்ர தபா ல் தலைகள் | 80 |
| வரலா ற்று நிகழ்வுகள் | 81 |
| சிந்து | 91 |
| சௌரா ஷ்ட்ர நா டோ டிக் கதை | 94 |
| சௌரா ஷ்ட்ர பழமொ ழிகள் | 96 |
| சமஸ்கிருத சௌரா ஷ்ட்ர வா ர்த்தை ஒப்பீடு | 101 |
| புதையுண்ட நா கரீகம் | 104 |
| சௌரா ஷ்ட்ரத்தின் பிரபலங்கள் | 109 |
| சௌரா ஷ்ட்ர மொ ழியின் எழுத்துருவங்கள் | 118 |

# முன்னுரை

பலரால் சௌராஷ்ட்ரம் என்ற ராஜ்யம் இருந்தா? என்று கேள்வி கேட்கப்படுகிறது அக் கேள்வி எழுப்பப் படுவதற்கேற்ப சூழ்நிலையும் பிறவும் சந்தேகத்திற்கு இடம் கொடுக்கும் வகையில் உள்ளது எனவே பலரும் சௌராஷ்ட்ரம் என்றால் தங்களுக்கு தோன்றிய வகையில் பொருள் கொள்கின்றனர்.

சௌராஷ்ட்ரம் என்றால், "100 மொழிகள் கலந்த மொழி' என்று கூறுவாறும், சௌராஷ்ட்ரம் என்றால், "100 சமஸ்தானங்கள் இணைந்த பகுதி" என்று கூறுவாறும் உள்ளனர். ஏனெனில் காலம் செய்த கோலம் அது எனினும் வரலாற்றின் துண்டான சில பக்கங்களை இணைத்தால் சௌராஷ்ட்ரத்தின் முழுமையான வரலாறும், அதன் தற்கால நிலையும் எளிதில் அறிந்து கொள்ளும் படியும் உள்ளது

தமிழகத்தில் உள்ள சௌராஷ்ட்ர மக்கள், தமது சௌராஷ்ட்ரத்துடன் எந்த தொடர்பும் இல்லாத வாழ்க்கையை பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். இதற்குக் காரணம், நாடோடிகளாக இடம் பெயர ஆரம்பித்த காலமுதல் தாம் சென்றடையும் பிரதேச ராஜா, மந்திரிகள் போன்றோர்களுக்கு அரசவை நெசவாளிகளாகவே பெரும்பாலும் பணியாற்றினர். பின்னர் காலம் மாற மாற அரசர்களின் ஆதரவு குறைந்ததால், சாதாரண நெசவாளிகளாக ஆகிவிட்டனர்.

தமிழகத்திற்கு சௌராஷ்ட்ரர்கள் மூன்று குழுக்களாக வந்தவர்களென அறியப்படுகிறது கஜினி முகமது படையெடுப்பின் போது இடம் பெயர்ந்தவர்கள். சத்ரபதி சிவாஜியின் அரசாங்க வேலையில் சேர்ந்து அதன் காரணமாக தமிழகம் வந்தவர்கள், மேலும் விஜயநகர பேரரசில் வேலை செய்து அவரது காலத்தில் தமிழகம் வந்தவர்கள். இது போக ஸ்தல யாத்திரை செய்து பிரபாஸ் பட்டினம், சோமநாதேஸ்வரர் தொடங்கி மதுரை சோமசுந்தரேஸ்வரரை காண வந்து இங்கு தங்கியவர்கள், என பல்வேறு காலகட்டங்களில் தமிழகம் வந்ததாக அறிகிறோம்.

பெரும்பாலானவர்கள் குப்தர் காலம் முடிவுற்ற பின்னர், சௌராஷ்ட்ர பிரதேசத்திலிருந்து இடம் பெயர ஆரம்பித்தனர் என்பதை வரலாற்றின் பக்ககளிலிருந்து நாம் அறிய முடிகிறது படிப்பறிவற்ற, நெசவுத் தொழிலை மட்டுமே நம்பி வாழுகிற நிலை இன்னும் பெரும்பாலான தமிழக சௌராஷ்ட்ர மக்களிடையே நீடிக்கிறது ஏழ்மை, அறியாமை காரணமாக பலர் அவதியுறும் நிலையும் காணக் கிடைக்கிறது ஆனாலும், பலரது உந்துதலால், சௌராஷ்ட்ரத்தின் முழுமையான வரலாற்றை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை பிறந்தது இதன் விளைவே இப்புத்தகம்.

பழைய ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்றான சௌராஷ்ட்ரம் என்ற பகுதியின் எல்லை எது? அத் தேசத்தை ஆட்சி செய்தவர்கள் யார்? யார்? அப் பிரதேச மொழி எது? மற்றும் பல்வேறு வட்டார வழக்குகள், வாழ்க்கை முறை, ஆகியவற்றை பற்றி அறிய ஆதாரங்கள் எவை? என்று தேடித் தொகுக்கப்பட்டது

வேதம், புராணங்கள், வரலாற்று நூல்கள், மற்றும் உண்மைச் சம்பவக் கதைகள், சௌராஷ்ட்ர பிரதேசத்தில் வாழ்ந்த அறிஞர்கள், அவர்களின் கண்டுபிடிப்புகள், சாதனைகள் மற்றும் தமிழக சௌராஷ்ட்ர மக்களின் பழமொழிகள், ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது

## ஆசிரியர் உரை

சௌராஷ்ட்ர பிரதேச வரலாறு என்று தேட ஆரம்பித்தால், குஜராத்தின் ஒரு பகுதியான சௌராஷ்ட்ரத்தையே பலரும் கைகாட்டினார்கள். அங்கு சென்று ஆராய்ந்த போது வரலாறு முழுமையாகக் கிடைக்கவில்லை. பின்னர் ஒருவரின் ஆலோசனையைப் பெற்றேன். அதாவது முன்பு சௌராஷ்ட்ர மாநிலம் என்று ஒரே மாநிலமாக இருந்தது அது தற்போது குஜராத், மஹாராஷ்ட்ரா என இரண்டாக பிரிந்துள்ளது எனவே மும்பை சென்று சௌராஷ்ட்ர வரலாற்றைப் பற்றி தேடுமாறு தகவல் கிடைத்து ஆனால் மும்பையிலும் சரிவரக் கிடைக்கவில்லை.

ஆயினும் யுவாங் சுவாங் குறிப்பின்படி சௌரசேனி ராஜ் என்பது மதுரா முதல் ஹிமாலயா வரை சௌராஷ்ட்ர ராஜ்யம் இருந்தது என நாம் அறிந்திருக்கிறோம். அவ்வளவு பெரிய எல்லையான சௌரசேனி ராஜ் என்ற தேசமானது மக்கள் தொகை பெருகப் பெருக ஆங்காங்கே பிரிந்து பல தேசங்களாக ஆகிவிட்டது. யுவாங் சுவாங் குறிப்பிட்ட எல்லை பல்வேறு மாற்றங்களைக் கண்டுள்ளது அவற்றின் பூரண வரலாற்றை எழுதுவது தற்போது சாத்தியமில்லை. எனவே தற்கால தமிழக சௌராஷ்ட்ர மக்களின் மொழி மதம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை பெரும்பாலும் ஒத்ததாக இருக்கும் வடபாரதப் பிரதேசத்தின் வரலாற்றை மட்டும் எழுதினால், தமிழக சௌராஷ்ட்ர மக்களின் அங்கீகாரத்தைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை. இதன் முன்முயற்சியாக ஆங்கிலேயர் காலத்தில் இருந்த "சௌராஷ்ட்ர மாநிலம்" என்ற எல்லையை எடுத்துக் கொண்டுள்ளேன். அதாவது யுவாங் சுவாங் குறிப்பிட்ட எல்லையில் நாற்பது சதவீதமே நான் எடுத்துக் கொண்டது ஆயினும் யுவாங் சுவாங் குறிப்பிட்ட எல்லையையும், அதற்கு முற்பட்ட ஜொராஷ்ட்ரர் காலத்தில் ஈரான்(பாரசீகம்) வரை பரவியிருந்ததையும் கோடிட்டுக் காட்டியுள்ளேன். முழு எல்லையையும் விவரித்தால் புத்தகம் மிக விரிந்துவிடும். இப்புத்தகத்தில் குறிப்பிடப்படும் சௌராஷ்ட்ர மாநிலமானது தற்போதைய குஜராத், மஹாராஷ்ட்ரா, மத்திய பிரதேசின் ஒரு சிறிய பகுதி, மேற்கு ராஜஸ்தான் ஆகியவற்றை உள்ளடக்கியது.

சுதந்திர பாரதத்தில் தற்போதைய நிலவரப்படி "சௌராஷ்ட்ரா" என்ற பெயர் குஜராத்தின் ஒரு பகுதியை மட்டுமே குறிக்கும். எனினும் குஜராத்தின் மற்ற பகுதி மக்களும், மகாராஷ்ட்ர மக்களும் தங்களது மாநிலம் முன்பு சௌராஷ்ட்ர மாநிலமாக இருந்தது என்பதை அறிந்தே வைத்திருக்கிறார்கள்.

மேற்கண்ட பெரிய எல்லை கொண்ட சௌராஷ்ட்ரம் சுருங்கி விட்டதா?

இல்லை. சௌராஷ்ட்ர மக்களாலேயே பெயர் மாற்றம் செய்யப் பெற்று விட்டது ஹூணர் படையெடுப்பின் போது பஞ்சாபின் மேற்பகுதியிலிருந்து குஜ்ஜார் என்ற ஹிந்து

பழங்குடி மக்கள் சௌராஷ்ட்ரத்தில் தஞ்சம் அடைந்தனர். அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து தனியாக ராஜ்ய நிர்வாகம் செய்து கொள்ளுமாறு சௌராஷ்ட்ர ராஜ்யம் கூறிவிட்டது குஜ்ஜார்கள் 'கூர்ஜர்' என்ற பெயரில் தமது எல்லையை வரையறுத்துக் கொண்டனர். ஆனாலும் சௌராஷ்ட்ரம் என்ற பெயரே வெளிநாட்டவர் முதல் உள்நாட்டவர் வரை அனைவருக்கும் தெரிந்த பெயராக பல காலம் நீடித்தது

இந்நிலையில் முஸ்லீம் படையெடுப்பானது பாரத நாட்டை நாளுக்கு நாள் தாழ்த்திக் கொண்டே இருந்தது இதன் விளைவாக மக்களின் கோபம் ஒரு பக்கம் பொங்கிக் கொண்டே இருந்தாலும், வலிமை மிக்க முஸ்லீம் ராஜ்யத்தை ஹிந்துக்களுக்கிடையே இருந்த ஒற்றுமையின்மையால் எதிர்க்க முடியவில்லை. மேலும் ஹிந்து தர்மப்படி க்ஷத்திரியர்கள் மட்டுமே போரிட வேண்டும் என்ற விதி இருந்ததால், மீண்டும் மீண்டும் அனைத்து போரிலும் க்ஷத்திரியர்கள் மட்டுமே போரிட்டனர். எனவே க்ஷத்திரியர்களின் எண்ணிக்கை குறைந்தது எனவே நாட்டிற்கு போராடும் வீரர்களின் எண்ணிக்கை குறைந்ததால் ஆங்காங்கே சிறு சிறு குழுக்கள் ஆளத் துவங்கின. முஸ்லீம்கள் இந்துக்களின் குறுநில மன்னர்கள், மற்றும் பல போர்க் குழுக்களைதங்களோடு இணைத்துக் கொண்டு பாரதத்தை வெற்றி கொண்டனர். இதன் விளைவாக பாரதத்தின் பொருளாதார, மத, தனிமனித, சமுதாய சுதந்திரமானது முஸ்லீம்களின் கொடுங்கோலாட்சியில் சிறிதளவு கூட தலைதூக்கிக் கூட பார்க்கவில்லை. தேச துரோகிகள், மற்றும் முஸ்லீம் கூட்டணி நாட்டை ஆண்டு வந்தது தேச பக்தர்களோ துன்புற்ற நிலையில் இருந்தனர். எப்படியாவது தேச துரோகிகள், மற்றும் முஸ்லீம்கள் சேர்ந்த முஸ்லீம் ஆட்சியை பாரதத்திலிருந்து அகற்ற வேண்டும் என ஏங்கிக் கொண்டு இருந்தது

அவர்களின் ஏக்கம், கனவுகள் மஹாராஷ்ட்ர பிரதேசத்தில் உண்மையாக ஆரம்பித்தது சத்ரபதி சிவாஜி பூரண ஹிந்து ஸ்வராஜ்யம் என்ற தேசபக்தர்களின் ஆட்சியை நிறுவினார். ஆயினும் சிவாஜிக்குப் பின்னர் அந்த ஆட்சி தடுமாறும் நிலை ஏற்பட்டது

காலங்காலமாக சௌராஷ்ட்ரமானது வெளிநாடுகளுடன் வியாபாரம் செய்து நல்ல செல்வ வளம் பெற்றிருந்தது இதன் காரணமாகவும், சுகவாழ்க்கை வாழ விரும்பிய பெரும்பாலான மக்களின் மனநிலை காரணமாகவும் சிறுபான்மை முஸ்லீம்களைக் கூட எதிர்க்கும் பொறுப்பை யாரும் சரிவர ஏற்கவில்லை. ஏதாவது அதிசயம் நடந்தால் தான் உண்டு இல்லையெனில் நாமனைவரும் நம்மிடமுள்ள பணம் தீரும் வரை கப்பம் கட்டி வாழ்வோம். பணமெல்லாம் தீர்ந்தபின் முஸ்லீமாக மாறிவிட வேண்டியது தான் என புலம்பியபடியே வாழ்ந்திருந்தனர்.

இந்நிலையில் இங்கிலாந்தின் மேற்கிந்திய கம்பெனி வியாபாரம் செய்யும் நோக்கோடு இந்தியா வந்ததுஅவர்களிடமிருந்த துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் நமக்குப் புதிது முஸ்லீம்களை எதிர்க்கத் தக்க பலம் துப்பாக்கியில் உள்ளது என சௌராஷ்ட்ர மக்கள் உணர்ந்து கொண்டனர். எனவே சோதனை முறையாக இந்தியாவில் முதன் முதலாக சூரத் நகரின் நிர்வாகப் பொறுப்பை ஆங்கிலேயருக்கு குத்தகைக்கு விட்டனர்.

அதாவது நாங்கள் இவ்வளவு வரியை செலுத்தி விடுகிறோம், நீங்கள் எங்களை ஆட்சி செய்யுங்கள் என்று தாமாகவே முன்வந்து ஆங்கிலேயரிடம் சூரத்தை ஒப்படைத்தனர்.

தங்களை ஆளும் முஸ்லீம் ராஜ்யம், பல தேச துரோக ஹிந்துக் குழுக்களின் ஆதரவிலேயே ஆளுகிறது மற்ற தேச பக்த ஹிந்து குழுக்கள் தோல்வி கண்டதால் பாரதம் முஸ்லீம்வசம் போய்விட்டது தோல்வியடைந்த மற்ற ஹிந்துக் குழுக்கள் குமுறிக் கொண்டிருந்தனர். தற்போது ஆங்கிலேயர் ஆதரவுடன், முஸ்லீம் மதவெறி ஆட்சியை அகற்ற ஆங்கிலேயரை துணைக் கொண்டனர். இதன் விளைவு இந்தியா ஆங்கிலேயருக்கு அடிமை ஆகிவிட்டது ஆனாலும் ஆங்கிலேயரிமிருந்து துப்பாக்கியின் தொழில் நுட்பம், மற்றும் புதிய சில கண்டுபிடிப்புகளின் தொழில் நுட்பங்கள் அவர்கள் மூலமாகவே பாரதம் வந்தது முதன் முதலில் சௌராஷ்ட்ர பிரதேச சமஸ்தான அரசர் ஒருவரே தனக்கென தனியாக ஒரு தண்டவாளம் அமைத்து ரயில் நிலையம் அமைத்தார். அந்த அளவுக்கு வசதி (இன்றைய நிலைமையிலும் இந்தியாவின் நெ.1 பணக்காரராலும் ரயிலை சொந்தமாக வாங்க முடியாது) இது போன்ற சில காரணங்களினால் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிர்ப்பு சிலகாலம் இல்லாதிருந்தது

தேச பக்த ஹிந்துக்களின் குழு ஒன்றிணைந்து கொள்ள சில காலம் பிடித்தது அக்கால கட்டமே ஆங்கிலேயர் நம்மை ஆண்டது முஸ்லீம் ஆட்சியை அகற்றப் போராடிய சௌராஷ்ட்ரமானது ஆங்கிலேய ஆட்சியை அகற்ற ஒரு பிள்ளையை பெற்றது அது மகாத்மா காந்தி ஆம்! மகாத்மா காந்தி சௌராஷ்ட்ரத்திலுள்ள போர்பந்தரில்தான் பிறந்தவர். அவரின் தலைமையில் சர்தார் வல்லப் பாய் படேல் மற்றும் பலர் போராடி சுதந்திர ஆட்சியை அடைந்தனர்.

ஆனாலும், பன்னெடுங்கால முஸ்லீம் ஆட்சியால், கட்டாய மதமாற்றம் நடை பெற்றது இதனால் பல இந்துக்கள் முஸ்லீமாக மாறிவிட்டனர். இதனால் முஸ்லீம்கள் தனியாரு குழுவாக இருந்து ஆங்கிலேயரை எதிர்த்துக் கொண்டிருந்தனர். ஹிந்து தேசபக்தர்களின் மனநிலையை உணர்ந்த காந்தி, முரட்டுதனமும், நியாய தர்மமும் பார்க்காத முஸ்லீம்களின் உதவியும் பாரதம் சுதந்திரம் அடையத் தேவை என்று கருதினார். எனவே முஸ்லீம்களைகாங்கிரசில் சேருமாறு அழைத்தார். இதன் பின்னரும் முஸ்லீம்கள் தேசபக்த ஹிந்து மக்களுடன் சரிவர இணையவில்லை. எனவே போராட்டத்தின் இறுதியில் கிடைத்த சுதந்திரத்தில் முஸ்லீம் பங்கு என்று தனியாக வேண்டும் என முஸ்லீம்கள் கலவரங்கள் நிகழ்த்தினர். மதத்தின் பெயரால் பாகிஸ்தான் பிரிக்கப்பட்டது அப்போது புராதன சௌராஷ்ட்ரத்தின் ஒரு பகுதியான சிந்து மாகாணம் பாகிஸ்தான் நாட்டிற்கு சொந்தமாகி விட்டது

சுதந்திர பாரதமானது நேரு 1967ம் ஆண்டு மொழிவாரி மாநிலமாக பிரிக்கப் பட்டது அப்போது ஒன்றாக இருந்த சௌராஷ்ட்ர மாநிலமானது குஜராத், மஹாராஷ்ட்ரா என இரு மாநிலமாக பிரிக்கப்பட்டது

இதன் காரணமாக சௌராஷ்ட்ரா என்ற பெயர் குஜராத்தின் ஒரு சிறு பகுதியின் பெயராக மாறி விட்டது மக்கள் அரசின் நிதியுதவி பெற ஒரு ஆயுதமாக மாநில பிரிப்பு போராட்டம் நடத்தினர். இதில் வெற்றியும் அடைந்தனர். ஆனாலும் மாநிலங்களின் பெயர்

மாற்றமானது சௌராஷ்ட்ரத்தின் பழைய எல்லை எது என்பதை முடிவு செய்ய அறிஞர்களே தடுமாறும்படிச் செய்து விட்டது. ஜாதி அரசியலின் பங்கும் இதில் உண்டு.

மாநில பிரிப்பின் பின்னணியில் உள்ளது மோசமான அரசியலே. அதாவது தனி மாநிலமாகப் பிரிந்தால், மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு அதிகமாகக் கிடைக்கும் என்பதன் காரணமாகத்தான் சௌராஷ்ட்ர மாநிலமானது இரண்டாகப் பிரிக்கப்பட்டது. சௌராஷ்ட்ர மாநிலத்தை பிரிப்பதாக அரசிற்கு எண்ணம் இல்லை. ஆனால் மத்திய அரசின் சலுகைகளை அடைய வேண்டி, சௌராஷ்ட்ர மாநில மக்களில் ஒரு பிரிவினர், திடீரென தங்களை குஜ்ஜார் மக்களின் வாரிசுகள் என அறிவித்துக் கொண்டு, குஜராத் மாநிலம் பிரிக்க வேண்டும் என போராடினர். அரசின் தடியடி, போன்ற பல பிரச்சனைகளுக்குப் பிறகு பிரிக்கப்பட்டது. இதன் காரணமாக சௌராஷ்ட்ரா என்ற பெயர் மறைந்து விட்டது.

ஆயினும் குஜராத், மஹாராஷ்ட்ரா ஆகியவை தற்போதைய துடிப்பான பழைய சௌராஷ்ட்ர தேசத்தின் தற்போதைய பிள்ளைகள். குஜராத்தியும், மராட்டியும் சௌராஷ்ட்ர மாநிலத்தின் இரு வேறு வட்டார வழக்குகள். இவ்வரலாற்றை தொகுத்து வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்படிக்கு<br>டி.ஆர்.பாஸ்கர்.

மொழி என்பது என்ன?

மொழியப்படுவது மொழி. அதாவது பேசப்படுவது மொழி. ஒலியை அடிப்படையாக உடையது மொழி. செயற்கையாகப் பல ஒலிகளை மனிதன் ஒலித்துத் தன் கருத்தைப் பிறருக்கு அறிவிக்கிறான். பிறர் கருத்தைத் தானும் அறிகிறான். எழுத்து என்பது ஒலியின் வரி வடிவ அடையாளமே ஆகும். அந்த அடையாளத்தைக் கண்டவுடன் இந்த அடையாளத்திற்கு இந்த ஒலியை உச்சரிக்க வேண்டும் என நாம் கற்றுக் கொள்கிறோம். உலகின் பெரும்பாலான மொழிகள் எழுத்து வடிவம் பெறாமல் இன்னும் பேச்சு வழக்கிலேயே உள்ளன.

மொழி ஒன்றேயானாலும் அது வட்டாரத்திற்கு வட்டாரம், அதாவது இடத்திற்கு இடம் சில மாறுபாடுகளை அடைந்து காணப்படும். இம்மாறுபாடுகள் பேசும்போது ஏற்படும் மாறுபாடுகள் மற்றும், உள்ளூர் வழக்கத்திற்கு ஏற்பவும் மாறுபடும். ஆனால் பெரும்பாலும் மூலமொழியிலிருந்து மாறுபடுவதில்லை. இம்மாறுபாடுகள் அதிகமாகிவிட்டால் அது தனி மொழியாக ஆகிவிடும். இந்த வட்டார வழக்குகளை (dialects) என்று ஆங்கிலத்திலும், பிரதேச மொழி என்று தமிழிலும் குறிப்பிடுவது வழக்கம். மலையாளம் தமிழின் திசை மொழி. நாளாவட்டத்தில் அடர்ந்த காடுகள், மலைகள், ஆறுகள் இவற்றால் போக்குவரத்து அருகி வேற்றுமை பெருத்துவிட்டதால் இத் திசை மொழிகள் தனிமொழியாகி விட்டது.

தொன்மையான மொழிகளில் சில மிக கடினமானதாக இருப்பதை காணலாம். ஆனால் அதன் வட்டார வழக்குகளே மிக எளிமையானதாக இருப்பதைக் காணலாம்.

தமிழ் மொழியை மலையாளத்துடன் ஒப்புநோக்கும் போது மலையாளம் எளிமையானதாக இருக்கிறது

சமஸ்கிருத்துடன், அதன் வட்டார வழக்குகளை ஒப்பு நோக்கினால் வட்டார வழக்குகள் எளிமையானதாக இருக்கிறது

உலக மொழிகளில் 85 சதவீத மொழிகளைப் பேசுவோரின் மக்கள் தொகை என்ன தெரியுமா? சிறு சதவீதம்தான். ஆனால் 15 சதவீத மொழிகளையே பெரும்பாலான மக்கள் பேசுகின்றனர்.

இன்று உலக மக்கள் பேசும் மொழி 10 மொழிக் குடும்பங்களாக பிரிக்கப்படுகிறது 1) இந்தோ-ஐரோப்பியன் மொழி 2) செமிடிக்-ஹெமிடிக் இன மொழிகள் 3) சைனா-திபெத்திய மொழி 4) திராவிட மொழிகள் 5) யூரல்-ஆல்டாய் மொழிகள் 6) மலேய - போனேஷிய மொழிகள் 7) ஆப்பிரிக்க - நீக்ரோ மொழிகள் 8) அமெரிக்க-இந்திய மொழிகள் 9) காகசீயன் மொழிகள் 10) பல கூட்டு மொழிகள்.

இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் ஒரு பிள்ளையான ஹிந்தி மொழி உலக அளவில் பேசுவோரின் எண்ணிக்கையின் வைத்து அடிப்படையில் 3வது இடத்தை வகிக்கிறது முதலிடம் சைன மொழியும், இரண்டாமிடம் ஆங்கிலமும் பெறுகிறது

மொழி எவ்வாறு தோன்றியது?

மொழியின் தோற்றத்திற்கு மூன்று கோட்பாடுகள் கூறப்படுகின்றன. முதல் கோட்பாடு 'பௌ-வௌ' கோட்பாடு அல்லது பொருளைக் குறிப்பிடும் விதத்தில் சொற்களை அமைத்தல். அதாவது பூனையைக் குறிக்க மியா, மியா, காக்கையை குறிக்க கா கா, நாயைக் குறிக்க லொள், லொள், வாத்தைக் குறிக்க க்வாக், க்வாக் என்று ஒலி எழுப்புவது

இரண்டாவது கோட்பாடு "ஃபூ ஃபூ' கோட்பாடு எனப்படுகிறது இது உணர்ச்சிகளின் வெளிப்பாடாக மொழி தோன்றியது என்கிறது கோபம், அச்சம், ஆச்சர்யம், பயம், வலி முதலிய உணர்ச்சிகளை அனுபவிக்கும்போது நாம் தாமாகவே ஒலி எழுப்புகிறோம். வலிக்கும்போது 'ஐயோ' என்கிறோம். ஆச்சரியத்தால் 'ஆ' என்கிறோம்.

மூன்றாவது கோட்பாடு "யோ-ஹியோ" கோட்பாடு. இதில் சைகை செய்து ஒலி எழுப்புகிறோம். குழுவில் உள்ள அனைவரும் சைகை செய்யும்பொழுது ஒலியின் குறிப்பை புரிந்து கொள்வர். நாளாவட்டத்தில் எல்லோருக்கும் இது நன்கு புரிந்தபின் சைகை செய்யாமலேயே ஒலியெழுப்பி அதன் பொருள் அனைவருக்கும் புரிந்து விடும். கையை நம் பக்கம் அசைத்து வா என்றும், நமக்கு எதிர்த்திசையில் அசைத்து போ என்று கூறுவது போல் செயல்களைச் செய்து கொண்டே ஒலியெழுப்பி பின்னர் வெறும் ஒலிக்கே செயலின் பொருள் விளங்கி விடும்படி பயிற்சி செய்துகொள்வது

ùN[Wôx hW YWXôß : @±ØLØm NôWØm

தற்கால நவீன பாரத நிர்வாக நிலப்பிரிவின்படி "சௌராஷ்ட்ரம்" என்ற பகுதி குஜராத், மஹாராஷ்ட்ரா என்ற இரு மாநிலங்கள் சேர்ந்த பகுதியாகும். ஆங்கிலேயர்

காலத்தில் ஸௌராஷ்ட்ரா மாநிலம் என்பது தற்போதைய குஜராத், மஹாராஷ்ட்ரா என்ற இரு மாநிலங்களையும் குறிக்கும். பிற்காலத்தில் 1967ல்- நேரு மொழி வாரி மாநிலம் என இந்தியாவை பிரித்த போது சௌராஷ்ட்ரத்தை குஜராத், மஹாராஷ்ட்ரா என இரு மாநிலமாக பிரித்தார். எனவே சௌராஷ்ட்ரத்தின் வரலாறு என்று தேடத் துவங்கினால் ஆதாரங்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. மேலும் இந்த இருபதாம் நூற்றாண்டில் சௌராஷ்ட்ரம் என்ற நாடு, குஜராத் மாநிலத்தில் உள்ள ஒரு சில மாவட்டங்களே என்று அறியப்படுவதால், சௌராஷ்ட்ர பிரதேசத்தின் வரலாறு குஜராத் மாநில வரலாறு என்ற பெயரிலேயே தேட வேண்டியிருக்கிறது. சௌராஷ்ட்ரமானது குஜராத்திலிருந்து அரபியா வரை சமஸ்கிருதத்தின் பேச்சு வழக்கு மொழியாக பரவியிருந்தது. பின்னர் அது பலப்பல வட்டார வழக்கு மொழிகளாக மாறி விட்டது. இப்புத்தகத்தில் நாம் பாரத எல்லைக்குள் உள்ள சௌராஷ்ட்ர வரலாறு பற்றியே முக்கியமாக காணப்போகிறோம்.

மேலும் தற்காலத்தில் குஜராத் மாநிலத்தில் பேசப்படும் "குஜராத்தி" மொழிதான் தூய்மையான குஜராத்தி என்றும் சௌராஷ்ட்ரம், கட்ச் ஆகிய பகுதிகளில் பேசப்படும் குஜராத்தி மொழி வட்டார வழக்காகவும், பிற மொழிக்கலப்புள்ளதாகவும் கருதப்படுகிறது. இது சரியா? இல்லையா? என்பதை நாம் சௌராஷ்ட்ரத்தின் வரலாற்றை ஆழ்ந்து படித்தோமானால் புரியும். மேற்கூறிய கருத்து மிக மிக தவறான ஒன்று. ஏனெனில் இதிகாச, புராணங்கள், வேதங்களில் சௌராஷ்ட்ரம் என்ற தேசம் பற்றிய விவரங்கள் வருகிறது. ஆனால் குஜராத், மஹாராஷ்ட்ரா என்ற தேசங்களைப் பற்றிய குறிப்புகள் வேத, இதிகாச, புராணங்களில் இல்லை. பழைய வரலாற்றாசிரியர்கள், பயணிகள், வெளிநாட்டு வியாபாரிகளின் குறிப்புகள் ஆகியவற்றில் "சௌராஷ்ட்ரம்" என்று குஜராத், மகாராஷ்ட்ரா ஆகிய மாநிலத்தில் உள்ள பல்வேறு ஊர்களைக் குறிப்பிட்டு தத்தமது பயண காலத்தில் எழுதிய புத்தகங்களில் உள்ளது நினைவு கூரத்தக்கது.

கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்கு பிறகு "குஜ்ஜர்" என்ற மக்கள் அகதிகளாக சௌராஷ்ட்ரத்தில் குடியேறினர். அவர்களின் பெயரால் தற்போது குஜராத் என்ற மாநிலம் உள்ளது. குஜராத் என்பது பின்னால் வந்த பெயர் என்பதை கவனித்தால், தற்கால குஜராத்திகள் தங்களின் முன்னோடிகள் சௌராஷ்ட்ரர்கள் என்று அழைக்கப்பட்டனர் என்பதை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

பாரத அரசாங்கம், மற்றும் குஜராத் மாநில அரசாங்கத்தால் உலகம் முழுவதும் பல்வேறு புத்தகங்கள், ஆராய்ச்சியாளர்கள் வாயிலாக குஜராத் என்ற பெயரிலேயே சௌராஷ்ட்ரத்தின் ஒரு பகுதி வரலாறு எழுதி வெளியிடப்பட்டு விட்டது. எனவே சௌராஷ்ட்ரம் என்றால் அதன் தற்காலப் பெயர் குஜராத் என்று நாம் புரிந்து கொண்டு இந்த புத்தகத்திலுள்ள ஆதாரங்களைப் படிக்க வேண்டும்.

உலகின் மிகப் பழைய நகரங்களில் ஒன்றான சிந்து சமவெளி நாகரிக காலத்திய குடியிருப்புகள் எங்கே உள்ளது? தற்கால குஜராத்தில் சௌராஷ்ட்ர பிரதேசம் என்று அழைக்கப்படும் மேற்கு குஜராத்தில் தான் அமைந்துள்ளது. ஹரப்பா குடியிருப்புகளும் சௌராஷ்ட்ர பகுதியில்தான் அமைந்துள்ளது. மிகச் சமீப காலமாக பத்திரிக்கைகளில் வெளிவந்த கடலில் மூழ்கிய பெரு நகரம் ஒன்றும் சௌராஷ்ட்ர பகுதியில்தான்

கண்டறியப்பட்டுள்ளது அந்நகரம் சிந்து சமவெளி எகிப்து நாகரிகத்தை விட பழமையானது என்பதால், “உலகின் முதல் நாகரிகம்” சௌராஷ்ட்ரத்தின் பகுதியில் அமைந்துள்ளது என்பதை உணரலாம்.

தற்கால தென்பாரத சௌராஷ்ட்ர மக்கள் தங்கள் பூர்வீகம், மற்றும் தங்களது பழங்கால வரலாற்றினை அறியும் வண்ணம் இந்நூல் வெளியிடப்படுகிறது.

இந்நூலுக்கு ஆதரவு தெரிவித்து பயனடையுமாறு வேண்டுகிறோம்.

ஸௌராஷ்ட்ர மொழியின் பழமை

மொழி என்பது பிறருடன் தொடர்பு கொள்ளும் சாதனம். ஆதி மொழியாகிய சமஸ்கிருதம், தமிழ் ஆகியவைகளிலிருந்து பிரிந்ததே பாரதத்தின் இரு பெரும் மொழிப் பிரிவுகள். சமஸ்கிருதம் பராசக்தியால் ஏற்படுத்தப்பட்டது தமிழ் சிவபெருமானால் உருவாக்கப்பட்டது என்கிறது புராணங்கள். காலப் போக்கில் சமஸ்கிருதமும், தமிழும் பலவேறு பேச்சு வழக்கு மொழிகளாக மாறின. அவைகளில் ஒன்று சௌராஷ்ட்ரம். சமஸ்கிருதம் பேசப்பட்ட காலத்திலிருந்தே ஸௌராஷ்ட்ர மொழிக்கு நீண்ட வரலாறு உண்டு. சமஸ்கிருதத்தின் பேச்சு வழக்கு மொழிகள் எவை? எவை? அம்மொழிகளுக்கும், சௌராஷ்ட்ர மொழிக்கும் என்ன தொடர்பு? என்பதை பார்ப்போம்.

தற்காலத்தில் தமிழானது சேரநாடு என்ற கேரளத்தில் மலையாளம் என்ற பெயரில் பேசப்படுகிறது. தமிழ்நாட்டிலும் கொங்குத் தமிழ், திருநெல்வேலித் தமிழ், இலங்கைத் தமிழ் என பிரதேச வாரியாக சற்றே மாற்றி பேசப்படுவதைப் போல சமஸ்கிருதம் பல பேச்சு வழக்குகளாக வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு காலகட்டத்தில் பேச்சு வழக்கில் இருக்கிறது அவைகள் எவை? அதில் சௌராஷ்ட்ர மொழியானது எப்பிரிவில் கீழ்வருகிறது எனவும், பார்ப்போம். முதலில் சமஸ்கிருதம் 3ஆக பிரிந்த காலத்திலிருந்து தொடங்குவோம்.

<u>பேச்சு வழக்கு மொழி</u> <u>பேசப்பட்ட காலம்</u>

1) தூய சமஸ்கிருத மொழி - கி.மு 900 கி.மு வருடம் வரை பேசப்பட்டது

2) பிபாஷா என்ற சமஸ்கிருதப் பிரிவு - கி.மு 700 வருடம் வரை பேசப்பட்டது

3) பிராகிருத சமஸ்கிருதப்பிரிவு-கி.மு 700 லிருந்து தற்காலம் வரை

2) பிபாஷா :

பிபாஷா என்ற சமஸ்கிருத மொழியின் பேச்சு வழக்கு நாளடைவில் மூன்று பெரிய பகுதிகளில் 3 விதமாக மக்களால் பேசப்பட்டது மக்கள் வாழ்ந்த பகுதிகளின் திசைகளை அடிப்படையாக கொண்டு 3 விதங்களில் பிபாஷா பிரிவு சமஸ்கிருதம் கீழ்காணும் பெயர்களை அடைந்தது அவை,

அ) உத்தரி பிபாஷா (வடக்கு மாநில மக்களால் பேசப்படும் பிபாஷா பிரிவு சமஸ்கிருத மொழி

ஆ) மத்ய பிபா ஷா (மத்திய மா நில மக்களா ல் பேசப்படும் பிபா ஷா பிரிவு சமஸ்கிருத மொ ழி)

இ) தக்ஷின பிபா ஷா (தெற்கு மா நில மக்களா ல் பேசப்படும் பிபா ஷா பிரிவு சமஸ்கிருத மொ ழி)

3) பிரா கிருதி :

பிரா கிருதி என்ற சமஸ்கிருத மொ ழியின் 3வது பிரிவு அது இந்த இருபதா ம் நூ ற்றா ண்டிலும் வழக்கிலுள்ள சமஸ்கிருதத்தின் பேச்சு வழக்கு அந்த பிரா கிருதி என்ற சமஸ்கிருத பேச்சு வழக்கு மொ ழியா னது மேலும் 4 வட்டா ர மொ ழிகளா கப் பிரிந்தது அவை,

அ) மத்ய பிரகிருதி (மத்திய மா நில மக்களா ல் பேசப்படும் பிரா கிருதி பிரிவு சமஸ்கிருத மொ ழி)

ஆ) பூர்வ பிரகிருதி (கிழக்கு மா நில மக்களா ல் பேசப்படும் பிரா கிருதி பிரிவு சமஸ்கிருத மொ ழி)

இ) தக்ஷின பிரகிருதி (தெற்கு மா நில மக்களா ல் பேசப்படும் பிரா கிருதி பிரிவு சமஸ்கிருத மொ ழி)

ஈ) உத்தர பிரகிருதி (வடக்கு மா நில மக்களா ல் பேசப்படும் பிரா கிருதி பிரிவு சமஸ்கிருத மொ ழி)

பிபா ஷா என்ற சமஸ்கிருதத்தின் 2வது பிரிவு பேசப்பட்ட இடங்கள்: பஞ்சா ப், உத்தரபிரதேஷ், பீஹா ர், ரா ஜஸ்தா ன். கி.பி 1ஆம் நூ ற்றா ண்டு முதல் இப்பிரிவு பெங்கா ல், ஒரியா ஆகிய இடங்களிலும் பேசப்பட்டது

சமஸ்கிருதத்தின் உடனிருந்த பிற அங்க மொ ழிகள்

சௌரா ஷ்ட்ர மொ ழி மற்றும் அதன் பிரிவுகளா ன கன்னோ ஜி அயோ த்தி, கரிபோ லி, புந்தேலி, பா க்ஹலி, போ ஜ்புரி ஆகியவை சமஸ்கிருதத்தின் அங்க மொ ழிகள் ஆகும். சமஸ்கிருத மொ ழி கா லப்போ க்கில் வளர்ந்த விதம் தரப்பட்டுள்ளது சமஸ்கிருதத்தின் பல்வேறு பேச்சு வழக்குப் பெயர்களை கா ண்க. சமஸ்கிருதத்தின் வளர்ச்சி இந்தியா விலிருந்து ஐரோ ப்பா , ரஷ்யா வரை விா பித்திருந்தா லும், நா ம் இங்கு கா ணப்போ வது இந்திய எல்லைக்குள் உள்ள மொ ழிகளைப் பற்றிய விவரங்கள் மட்டுமே. விளக்கத்தை கீழுள்ள அட்டவணையில் கா ண்க.

பேச்சு வழக்கு அட்டவணை

சமஸ்கிருத மொ ழி (3 பிரிவுகள்)

| ©Tô ` ô©¬Ü | ©Wô ¡ Ú§ ©¬Ü#ùUô¯ IùTVo | RtLôX ©¬Ü#ùTVo |
|---|---|---|
| அ)மத்ய பிபா ஷா (ஸமக்கிருதத்தின் பேச்சு வழக்கு) (கி.மு 700 வரை) | உத்தர பிபா ஷா<br>ùN [ WúN ² (கி.மு 700 க்குப் பிறகு)<br>அவந்தி<br>பா ஞ்சா லி | கா ந்தா ரி, கன்னோ ஜ்<br>மேவா டி<br>மா ர்வா ரி<br>கரிபோ லிஎன்கிற)ஹரியா னி<br>கோ ஹலி<br>போ ஜ்புரி<br>கன்னோ சி |

| | | |
|---|---|---|
| | | அயோ த்தி |
| | | மா ல்வி |
| | மகதி | மகஹி |
| ஆ)பிரா சிய பிபா ஷா | வா ங்கி,கௌடி | பெங்கா லி |
| (ஸமஸ்கிருதத்தின் | ஓட்ரி | ஓரியா |
| பேச்சு வழக்கு | கா மருபி | அஹோ பி,அசா மி |
| | அங்கி | அங்கிகா |
| | மதிலி | மிதிலி |
| இ)தக்ஷின பிபா ஷா | மஹா ரா ஷ்ட்ரி | மரா ட்டி |
| சமஸ்கிருதத்தின் | விதர்பி (மஹா ரா ஷ்ட்ரா மா நில பகுதி) | வர்ஹடி |
| பேச்சு வழக்கு) | ùN[Wôxh¬ | Ï_Wôj§ |
| | ஆந்திரி | ஆந்திரி (தெலுங்கு) |
| | கர்னா டி | கன்னடம் |

-----------------------------------------------------------------------------------------------

(அடிக்கோ டிட்ட மொ ழியை கவனிக்கவும்)

அட்டவணையை நோ க்கும் போ து சமஸ்கிருதமா னது இரு பெரும் பேச்சு மொ ழியா க பேசப்பட்டது தெரியவரும். அவை “பிபா ஷா ”, மற்றும் “பிரா கிருதி”. மேலும் சமஸ்கிருதமா னது பல பேச்சு வழக்கா கப் பிரிந்ததை, நா ம் எளிதா கப் புரிந்து கொ ள்ள வேண்டுமெனில், அட்டவணையில் “தற்கா ல பிரிவு பெயர்” என்கிற பகுதியில் இருந்து படிக்க ஆரம்பித்து வலமிருந்து இடமா கப் படித்தா ல் பழங்கா லப் பிரிவுகள் எளிமையா க விளங்கும். இப்பேச்சு வழக்கு மொ ழியின் பெயர்கள் அனைத்தும் நிலம் அல்லது திசையின் பெயரைக் கொ ண்டுள்ளதை மனதில் கொ ள்க.

பேச்சு வழக்கு மா றா மல் இருக்கும் பல மொ ழிகளில் ஸௌரா ஷ்ட்ரா மொ ழியும் ஒன்று என்பதை அட்டவணையின் மூலம் அறியலா ம். “விரஜ பா ஷை” என்பது சமஸ்கிருத மொ ழியின் 3வது பிரிவா ன பிரா கிருதம் என்ற பிரிவில் வருகிறது சமஸ்கிருதத்தின் பிரா கிருத மொ ழி வழக்கின் கா லம் சுமா ர் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டது அட்டவணையில் பிரா கிருதத்தின் அங்க மொ ழியா க சௌரா ஷ்ட்ரம் என்ற மொ ழி உள்ளது அது மொ ழி ஆரா ய்ச்சி அறிஞர்களா ல் குறிக்கப்பட்டுள்ளது இந்த அட்டவணயா னது உலகெங்கிலுமுள்ள மொ ழி ஆரா ய்ச்சி வல்லுநர்களா ல் உருவா க்கப்பட்டு, அனைத்து நா டுகளிலும் “மொ ழியியல்” என்ற பட்டப் படிப்பு படிப்பவர்களுக்கு பா டமா கவும் இந்த அட்டவணை இருந்து வருகிறது எனவே இந்த அட்டவணையைப் படித்தா ல், 2500 ஆண்டுகளுக்கு முன்னிருந்து சௌரா ஷ்ட்ர மொ ழி தொ டர்ந்து பேசப்படுகிறது என்ற உண்மை தெரியவரும். சௌரா ஷ்ட்ரம் பல மொ ழிகள் கலந்து பேசப்படும் மொ ழியல்ல என்பதும், சமஸ்கிருதத்தின் பேச்சு வழக்கு வட்டா ர மொ ழிகளில் சிறப்பு பெற்ற ஒரு மொ ழி என்றும் புரியும்.

அச் சௌரா ஷ்ட்ர மொ ழியா னது கா லப்போ க்கில், பிறமொ ழியுடன் கூடி புதிய வட்டா ர மொ ழியா கவும் ஆங்கா ங்கு பல்வேறு ஊர்களில் உருவெடுத்துள்ளது சௌரா ஷ்ட்ர மொ ழியின் பழைய இலக்கணம் சமஸ்கிருதத்தை அடிப்படையா க கொ ண்டது தற்கா லத்தில் ஸௌரா ஷ்ட்ர மொ ழிக்கு வடபா ரதத்தில் குஜரா த்தி எழுத்துருவும், தென் இந்தியா வில் தனியா ரு எழுத்துருவும் உள்ளது

விரஜ பா ஷை என்கிற ஸௌரா ஷ்ட்ரா மொ ழியா னது கி.மு 700இல் விரஜ பா ஷை மற்றும் கோ சலி என்ற இரண்டு பெயர்களில், இரண்டு மொ ழிப் பிரிவா க மக்களிடையே பேச்சு வழக்கில் இருந்தது கோ சலி மொ ழி கி.பி300 இல் மேலும் மூன்று மொ ழிகளா க விரிவடைந்தது

மேலும் விரஜ பாஷையின் மற்றொரு பேச்சு வழக்கான "கரிபோலி' என்ற மொழியானது அரபி, பெர்சிய, துருக்கி ஹிந்துஸ்தானி மொழிகள் கலந்து பேசப்படும் மொழியாகும்.

"புந்தேல்" என்ற மொழி விரஜ பாஷையும் தமிழ் மொழியும் கலந்த கலப்பாகும். விரஜ பாஷை என்கிற ஸௌராஷ்ட்ர மொழி 2500 வருடங்களுக்கு முன்பிருந்தே பேசப்பட்டு வழக்கிலிருந்து வருகிறது

சீன பயணி "யுவாங் சுவாங்" தமது பயண குறிப்பில் "ஹிமாலயாவிலிருந்து மதுரா ராஜ்யம் வரை விரஜ பாஷை (சௌராஷ்ட்ர மொழி) பேசப்பட்டது என குறிப்பிட்டுள்ளார்" சௌரசேனி ராஜ்யத்தில் கலப்பற்ற விரஜ பாஷை பேசப்படுகிறது ஹரியானாவில் பிற மொழி கலந்து "கரிபோலி' என்று பேசப்படுகிறது எனவும் குறிப்பிடுகிறார் யுவாங் சுவாங். (கரிபோலி தற்கால இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட மொழி), தற்காலத்தில் குஜராத்தில் பேசப்படும் பேச்சு வழக்குகள் சௌராஷ்ட்ரா, வாசவி குஜராத்தி, கண்டேசி, கோலி ஆகியவை. இவை இன்று நடப்பிலிருக்கும் சௌராஷ்ட்ர பாஷையின் பேச்சு வழக்குகள். ஆக பல மொழி கலந்த கலப்பு சௌராஷ்ட்ரா அல்ல, பழமையான மொழிதான் என்பது இதிலிருந்து தெளிவாகிறது இடம், காலம் சூழ்நிலைகளுக்கேற்ப பேச்சு வழக்கு சிறிது மாறினாலும் பழமையான மொழி என்பது புலனாகும்.

தமிழ்நாட்டில் சௌராஷ்ட்ரர் வந்த காலம்.

தமிழ்நாட்டிற்கு சௌராஷ்ட்ரர் வந்த காலத்தை கணிப்பது கடினம். எனினும் சௌராஷ்ட்ரர் என்ற பெயரை வைத்துப் பார்க்கும் பொழுது அவர்கள், குப்தர் காலத்தில் அல்லது அதற்கு அடுத்து சௌராஷ்ட்ர நெசவாளர்கள் இடம் பெயர ஆரம்பித்தனர். கி.பி 388ல் குப்தர் ஆட்சி நடந்தது கி.பி 500 வாக்கில் சௌராஷ்ட்ரர்கள் தொழிலைத் தேடி இடம் பெயர ஆரம்பித்தனர். பிற்கால நாயக்கர் ஆட்சிக் காலத்திலும் சௌராஷ்ட்ரர்கள் தமிழகத்திற்கு வந்ததாக மதுரை நாயக்கர் மஹாலில் உள்ள கல்வெட்டு தெரிக்கிறது

உலகின் மிகப் பழமையான நூலான வேதத்தில் ஸௌராஷ்ட்ர மொழி பற்றிய குறிப்புக்கள்

வேதம்: இதற்கு மற்றொரு பெயர் ச்ருதி. ரிஷிகள் தவத்தால் கண்டறிந்தது வேதம். விரும்பியதை அடைவதற்கும், விரும்பாததை தவிர்ப்பதற்கும் வழிகாட்டும் நூல். வேதங்கள் 4. ருக் வேதம். யஜுர் வேதம். ஸாம வேதம். அதர்வண வேதம். யஜுர் வேதம் கிருஷ்ண யஜுர் வேதம், சுக்ல யஜுர் வேதம் என இரண்டாக உள்ளது வேதங்கள் சாகைகள் என்ற பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது ருக் வேதம் 21 சாகைகள். யஜுர் வேதம் 101 சாகைகள். ஸாம வேதம் 1000 சாகைகள். அதர்வண வேதம் 9 சாகைகள். வேதம் 4 முக்கிய பாகங்களால் ஆனது 1)ஸம்ஹிதை 2) ப்ரமாணம் 3) ஆரண்யகம் 4) உபநிஷத். ருக் வேதம் 10,552 மந்திரங்கள், யஜுர் வேதம் 1975 மந்திரங்கள், ஸாம வேதம் 1875 மந்திரங்கள், அதர்வண வேதம் 5977 மந்திரங்கள். வேத மந்திரத்தை கூறும்பொழுது காலையில் இதயத்திலிருந்து புலி உறுமுவது போன்று மந்திரம்

கூற வேண்டும். மதியம் கழுத்திலிருந்தும், மாலையில் வாயின் உதட்டு நுனியிலிருந்தும் கூற வேண்டும் என்பது உச்சரிப்பு விதி.

வேதத்தில் ஸௌராஷ்ட்ரம் - குறிப்புகள்

அதர்வண வேதத்திலுள்ள ஸௌராஷ்ட்ரதேசம் பற்றிய குறிப்பு பின்வருமாறு. மஹாவிஷ்ணு உலகப் படைப்பிற்கு முன் பிரளய காலத்தில் ஆலிலையில் குழந்தையாக படுத்துக்கொண்டு கடலில் மிதந்து கொண்டிருந்தபொழுது கடல் பொங்கியது. அப்பொழுது குழந்தை வடிவான மஹாவிஷ்ணு கடல் பொங்கியதைப் பார்த்து பயந்து அழுதார். அப்போது அவரை சமாதானம் செய்ய லலிதா திரிபுரசுந்தரி தேவியின் அம்சமாக "பகளா முகி" (பீதாம்பரா) என்ற சக்தி, சிறந்த ஸௌராஷ்ட்ர தேசத்தில் மஞ்சள் நிற ஜலம் நிறைந்த ஓடையில் தோன்றி, கடலை அமைதியுறச் செய்தாள்-என்ற செய்தி உள்ளது. இதிலிருந்து பிரளய காலத்திலும் ஸௌராஷ்ட்ர தேசம் அழியாதிருந்தது என்று கொள்ளலாம். (இன்றும் நம் மக்கள் பலர் பீதாம்பரம் என்ற பெயர் வைத்துக்கொள்வதை காணலாம். வல்கா, வகேலா என்ற பெயரும் அச்சக்தியின் பெயரையே குறிக்கும்)

வரலாற்றில் ஸௌராஷ்ட்ரம் - குறிப்புகள்

சாகர சகாப்தம் கி.மு 78 ல் ஆரம்பிக்கிறது.

விக்ரம சகாப்தம் கி.மு 57ல் ஆரம்பிக்கிறது.

1) கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சௌராஷ்டிரம் என்னும் பிரதேசத்தை ஆண்டு வந்த ருத்திரதாமன் என்ற அரசன், சுதர்சனம் என்ற ஏரியை அரசாங்க செலவில் பழுதுபார்க்க முற்பட்டான். இதை அவனுடைய மந்திரிகள் அங்கீகரிக்கவில்லை. எனவே, அவன் தன் சொந்தப் பணத்தைப் போட்டு பழுதுபார்க்கும் வேலையை முடித்தான். இது அந்த மன்னனின் சாசனத்திலிருந்து ஆதாரமாக எடுக்கப்பட்டுள்ளது.

கி.பி 130-150 வரை சௌராஷ்ட்ரத்தை ஆண்ட சகர மன்னர்களுள் முக்கியமானவர் ருத்ரதாமன். அவர் கத்தியவார் (கட்ச்) பகுதியில் ஏரியை பாசனத்திற்காக மேம்படுத்தியதற்கான போற்றப்படுகிறார். ருத்திரதாமன்-1 என்ற (கி.பி 130-150) சாதவாகனர்களை இரு முறை போரிட்டு தோற்கடித்து தனது ஆட்சிப் பிரதேசத்தைத் தக்க வைத்துக் கொண்டார். தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டாலும், சாதவாகனர்களுக்கும், ருத்ரதாமன் வம்சமான, சகர வம்சத்திற்கும் திருமண உறவு இருந்தது.

பின்னர் உஜ்ஜயினி மன்னர் விக்ரமாதித்யர் சகரர்களை வெற்றி கொண்டார். விக்ரம சகாப்தம் என்ற காலண்டர் உருவாக்கப்படுகிறது.

கி.பி 200 ல் கிரேக்க மன்னன் அலெக்சாண்டர் படையெடுப்பு பின்னர் பார்த்தியர்கள் ஆட்சி

பார்த்தியருக்குப்பின் குஷானர் ஆட்சி

குஷானர் ராஜ்ஜியம் மத்திய ஆசியாவின் பல பகுதிகள், ரஷ்யா, ஈரானின் ஒரு பகுதி, ஆப்கானிஸ்தானின் ஒரு பகுதி, பாகிஸ்தான், மற்றும் வட இந்தியா முழுவதும் குஷானர் ஆட்சி நடைபெற்றது.

பின்னர் குப்தர் ஆட்சி

சந்திர குப்தர் சௌராஷ்ட்ரத்தை 4 நூற்றாண்டாக ஆண்டு வந்த ஷாகா சத்ரபாஸ் என்ற மன்னர் வம்சத்தை வென்றார். ஆனாலும் சௌராஷ்ட்ரத்தின் ஒரு பகுதி அவர் ஆட்சியில் இல்லை. இவர் காலத்தில் ஹுணர் என்ற கூட்டத்தாரின் படையெடுப்பு நடந்தது. ஹுணர் படையெடுத்த சமயம் சௌராஷ்ட்ரத்தில் தஞ்சமடைந்த "குஜ்ஜர்" என்ற பெயர் கொண்ட இந்து மக்களின் பெயரால் தற்போது சௌராஷ்ட்ரத்தின் ஒரு பகுதி குஜராத் என்று அழைக்கப்படுகிறது.

2) சந்திரகுப்த மௌரியனுடைய ஏகாதிபத்திய ஆட்சி நடந்த காலத்தில், ஸௌராஷ்ட்ர ராஜ்யம் ஜனநாயக குடியரசாக இருந்தது என்பதும், மௌரியருக்கு அடங்கியது அல்ல என்பதையும் சாணக்கியரின் அர்த்த சாஸ்திரத்திலிருந்து அறியலாம்.

அந்த ஜனநாயக குடியரசில் கடைப்பிடிக்கப் பட்ட வாழ்க்கை முறை என்ன? மக்கள் அனைவரும் ராணுப் பயிற்சி கட்டாயமாக இருந்தது. அதாவது மக்கள் அனைவருமே போர்வீரர்களாயிருந்தார்கள். இதனால் மக்கள் விவசாயத்தையோ, மற்ற தொழில்களையோ புறக்கணித்துவிட வில்லை. அவற்றிலும் வல்லவர்களாயிருந்தார்கள். எனவே ராஜ்யத்தில் செல்வம் கொழித்திருந்தது என்பதைச் சொல்லத் தேவையில்லை. செல்வம், கலை, அறிவு ஆண்மை இவை ஒன்றொடொன்று போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து செழுமையுடன் திகழ்ந்தன.

பின்னர் மால்வா மன்னர் யசோதர்மன் ஹுணர்களை வென்றார்.

குப்தர் காலத்தில் நெசவாளர் குடிபெயர்தல்

சௌராஷ்ட்ரத்திலிருந்து கி.பி 473ல் மால்வாவிற்கு நெசவாளர்கள் இடம் பெயர்ந்தனர். நெசவாளர்களின் வருவாயை பெரிதும் குப்தப் பேரரசு நம்பி இருந்தது. அவர்கள் இடம் பெயர்ந்து வேறு ஊர்களுக்குச் சென்றதால், அவர்கள் மூலம் கிடைத்த வருவாய் நின்றது. தனது ராணுச் செலவைக் கூட செய்ய இயலாமல் போனதால் குப்த சாம்ராஜ்யம் சரிந்தது.

ஆனாலும் குப்தர் காலம் பொற்காலம் என போற்றப்படுகிறது.

நெசவாளர் இடப் பெயர்ச்சிக்கான காரணம்

குப்தர்கள் சௌராஷ்ட்ரத்திலிருந்து ஐரோப்பிய நாடான ரோமனுக்கு பட்டு ஏற்றுமதி செய்தனர்

கி.பி 550 வரை இந்த ஏற்றுமதி தொடர்ந்தது. அதன் பிறகு சைனாவிலிருந்து ரோமானியர்கள் பட்டு தயாரிப்பைக் கற்றுக் கொண்டதால் ஏற்றுமதி வீழ்ச்சி அடைந்தது. சௌராஷ்ட்ரத்திலிருந்த நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு மிக மிகக் குறைந்துவிட்டது.

இச்சூழ்நிலையில் பல நெசவாளர்கள் கூட்டாக சௌராஷ்ட்ரத்திலிருந்து மாண்டசோர் என்ற இடத்திற்கு இடம் பெயர்ந்து வாழத் துவங்கினர். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் பாரதம் முழுவதும் சௌராஷ்ட்ர தேச நெசவாளர்கள் குடி பெயர்ந்து வாழத் துவங்கினர். (காலப்போக்கில் சில இடங்களில் குடிபெயர்ந்த ஊரில் உள்ள மக்களோடு

கலந்து விட்டனர். சில இடங்களில் சௌராஷ்ட்ரர் என்ற பெயரோடு வாழ்கின்றனர். சில இடங்களில் சௌராஷ்ட்ரர் என்ற அடையாளப் பெயர்கூட இல்லாமல், படிப்பறிவற்று, ஏழ்மை நிலையில் வாழ்ந்து கொண்டுள்ளனர். இந்த இருபதாம் நூற்றாண்டிலும் கர்நாடக, மகாராஷ்ட்ர எல்லையில் இவ்வாறான சௌராஷ்ட்ரர் என்ற அடையாளப் பெயரில்லாத, ஆனால் சௌராஷ்ட்ர மொழி பேசும் மக்கள் பல கிராமங்களில் நெசவையே தொழிலாகக் கொண்டு இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.)

நெசவாளர் இடப் பெயர்ச்சி, ஏற்றுமதி வீழ்ச்சி, பகைவர் தொல்லை ஆகியவை காரணமாக குப்தர் பேரரசு வீழ்ச்சி அடைந்தது குப்தர்களின் அரசாங்க மொழி சமஸ்கிருதம். காமசூத்திரம் என்ற புத்தகம், குப்தர் காலத்தில் எழுதப்பட்டது அது சௌராஷ்ட்ரத்தைச் சேர்ந்த வாத்சாயனரால் எழுதப்பட்டது குஜராத்தில் வாலாபி வம்சத்தவர் குப்த பேரரசை வெற்றி கொண்டனர்.

உலகம் பரவிய ஸௌராஷ்ட்ரம் - குறிப்புகள்

பழைய பாரதத்திலிருந்து ஒரு சௌராஷ்ட்ர தேச ஞானி பாரசீக நாட்டின் ஒரு பகுதியான, தற்கால ஈரான் நாட்டிற்குச் சென்று நெருப்பை வைத்து கடவுளை வழிபடும் சம்பிரதாயத்தை அங்குள்ள மக்களுக்கு கற்றுக்கொடுத்து அவர்களை நல்வழிப்படுத்தினார். அவர் வழி வந்தவர்கள் ஜொராஷ்ட்டிரர்கள் (பார்சி) என்று அழைக்கப்படுகின்றனர். அவர்களின் வரலாறு தான் ஈரானின் பண்டைய வரலாறு. அதை இன்றும் ஈரானின் பல்வேறு தொல்பொருள்காட்சிச் சாலைகளில் காணலாம். காலப்போக்கில் ஜொராஷ்ட்ரர்கள் இஸ்லாமிய மதத்தின் ஆதிக்கத்தால் மதம் மாற்றப்பட்டனர், நாடு கடத்தப்பட்டனர். இன்றும் ஜொராஷ்ட்ரர்களின் மன்னர் லண்டனில் வசித்து வருகிறார் .

இதிலிருந்து சௌராஷ்ட்ரம் என்பது மிகப் பழமையான வாழ்க்கை முறை என்பதும், மக்களிடைய நன்கு பரவியிருந்தது என்றும் வேதத்தை அடிப்படையாகக் கொண்டது என்றும் தெளிவாகிறது இன்றைய ஜொராஷ்ட்ரர்களின் நிலை என்ன? ஈரானில், தங்கள் மதத்திற்க்கு சுதந்திரம் இல்லாததாலும், இஸ்லாமிய அரசால் அடக்கி வைக்கப்பட்டுள்ளதாலும், தனி நாடு கேட்டு போராடிக்கொண்டுள்ளனர்.... (இதற்கு மேல் இவ்விஷயத்தை விளக்கினால் இந்நூலின் நோக்கம் மாறிவிடும் என்பதால் அடுத்துச் செல்வோம்.)

கஜினி முகம்மது இந்தியாவை நோக்கி படையெடுத்த படையெடுப்புகளில் முக்கியமானது ஸௌராஷ்ட்ர தேசத்தில் உள்ள சோமநாதபுர சிவ ஆலயத்தை நோக்கியதாகும். 18 முறை நடந்த இப்போரில் இறந்த ஸௌராஷ்ட்ர போர்வீரர்களும், ஆலயத்தை வழிபட வந்த, பாதுகாக்க வந்தவர்களின் எண்ணிக்கையும் எண்ணில் அடங்காது லட்சக்கணக்கானோர் மாண்டனர். <u>மாண்டவர்களின் பூணூல் எடையே டன் கணக்கில் அங்கிருந்த கடற்கரையில் சேர்ந்தது என்றால் இறந்தோரின் எண்ணிக்கையை கணக்கிட்டுக்கொள்ளலாம். தொடர்ந்த அன்னிய படையெடுப்புகளால் ஸௌராஷ்ட்ர மக்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்தது அதனால் முஸ்லீம்களுக்கும், பிறகு ஆங்கிலேயர்களுக்கும் நாடு அடிமைப்பட்டது</u> ஆயிரத்தைநூறு ஆண்டுகளாக, அலெக்சாண்டர் முதல் இஸ்லாமியர், ஆங்கிலேயர் வரை எடுத்த படையெடுப்புகளைத்

எதிர்கொண்ட நாடு அடிமைப்பட்டு விட்டது உலகின் வல்லரசாக இருந்த பாரதத்தில், ஆன்மிக குருவாக இருந்த பாரதத்தில், வறுமையும், அறியாமையும் தாண்டவமாடியது இதன் காரணமாக நாடு வீழத் தொடங்கியது கஜினியின் இந்த சூறையாடலை அல்பருனி முதல் ஹபீப் வரை அனைவரும் கண்டித்தனர். அவரின் இந்த சூறையாடலுக்கு காரணம் இஸ்லாமை வளர்ப்பதற்கு என்றில்லாமல், பொன்னாசை காரணமாக உள்ளது என குற்றம் சாட்டினர் அவர்கள். கஜினியின் காலாட்படையில் இருந்தவர்களில் பலரை அவரவர் விருப்பப்படி இந்து கடவுளர்களை வழிபட அனுமதித்திருந்தார். கஜினியின் மகன் அதற்கும் ஒரு படிமேல் போய், தமது படையில் உள்ள முஸ்லீம் கலகக் காரர்களை, இந்துக்களின் படையை அனுப்பியே அடக்கினார்.

நமது ஒற்றுமையின்மையே நம்மை வீழ்த்தியது என்பதில் சந்தேகமென்ன? சின்னச் சின்ன சம்பிரதாய வேற்றுமைகளையும், பிரதேச வேற்றுமைகளையும் ஊதிப் பெரிது படுத்தியதால் வந்த வினை. நாம் அடிமையாகிவிட்டோம்.

ஆனால், வெறும் நானூறே ஆண்டுகளில் அனைவரும் ஆங்கிலேய அடிமைத் தனத்திலிருந்து போராடி மீண்டும் பாரதம் மீண்டது சுதந்திர பாரதம் மீண்டும் பிறந்தது மீண்டும் ஸெளராஷ்ட்ர சோமநாதபுர சிவ ஆலயம் முஸ்லீம் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து சர்தார் வல்லபபாய் படேல் அவர்களால் மீட்கப்பட்டு அங்கு சிவலிங்கம் பிரதிஷ்ட்டை செய்யப்பட்டது மாபெரும் ஆலயம் எழும்பியது அது வெற்றியின் சின்னம். காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாகவும், ஸெளராஷ்ட்ரர்களிடையே போக்குவரத்து தொடர்பு இல்லாததன் காரணமாக வடநாடு மற்றும் தமிழ்நாட்டு ஸெளராஷ்ட்ரர்களிடையே பேச்சு வழக்கு வேறுபாடு மிகுந்துவிட்டது வடக்கில் குஜராத்தி எழுத்து முறையை ஸெளராஷ்ட்ர மக்கள் மேற்கொண்டனர். தென்நாட்டில் ஸெளராஷ்ட்ர மக்களுக்கென வரி வடிவம் புதிதாக ஏற்படுத்தப்பட்டது பழங்கால ஸெளராஷ்ட்ர மக்கள் பயன்படுத்திய ஸமஸ்கிருத மொழியின் வரி வடிவத்தை நாம் மேற்கொள்ளாமல் தனிவரி வடிவத்தை மேற்கொண்டது பலவித காரணங்களால் ஆகும்.

“பிராகிருத மொழி”யானது இலக்கண சுத்தமான சமஸ்கிருதத்தின் பேச்சு வழக்கு மொழியாக இருந்தது (பேச்சுத் தமிழ் என்பது போல). பிராகிருதம் பல நூற்றாண்டு பேசப்பட்டதால் அதுவே தனிமொழியாக தனித்தியங்கத் துவங்கியது

இலக்கணம்

“வரருசி” என்பவர் பிராகிருத சமஸ்கிருதத்திற்கு இலக்கணம் வகுத்தவர்களின் முக்கியமானவர். அவர் ஸமஸ்கிருதத்தின் அங்கமாக 4 பேச்சு மொழிகளைக் குறிப்பிட்டு, அவை தனித்தியங்கி பல லட்சம் மக்களால் பேசப்படுகிறதால் அதற்கும் தனித்தனி இலக்கணம் வகுத்தார். 1) மஹாராஷ்ட்ரீ 2) சௌரசேனி 3) அவந்தீ 4) மாகதி ஆகியவை அம்மொழிகள் சமஸ்கிருதத்தின் பேச்சு வழக்கு மொழியாக இருந்து தனி மொழியாக ஏற்றம் பெற்றவை. இப்பேச்சு வழக்கு மொழிகளின் பெயர்களை கவனித்தால் அவை ஒவ்வொரு பிரதேசத்தின் பெயரைக் குறிப்பிடுவது தெரியும்.

தவறான ஆரியர் படையெடுப்பு கோட்பாடு :

ஆங்கிலேய அறிஞர்களின் கண்டுபிடிப்பின்படி ரஷ்யாவில் வாழ்ந்த ஆரிய இனத்தார், பேசிய மொழிக்கு வேத மொழி (சமஸ்கிருதம்) என்று பெயர். உலக மொழிப் பிரிவுகளின்படி அதன் தற்காலப் பெயர் "இந்தோ-ஐரோப்பியன்" எனப்படும். ரஷ்யாவிலிருந்து சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் இந்தியாவிற்கு வந்ததாகவும், அவர்கள் சமஸ்கிருத மொழி பேசியதாகவும், அந்நாளில் இருந்த முக்கிய நாடான ஈரானில் இருந்த ஜொராஷ்ட்ர மக்களால் பேசப்பட்ட "ஜெண்ட் அவஸ்தா" மொழிக்கும் சமஸ்கிருதத்திற்கும் நெருங்கிய மொழித் தொடர்பு இருந்தது என்றும் ஆங்கில வரலாற்று அறிஞர்கள் பாடுபட்டு கண்டறிந்துள்ளனர். ("ஜெண்ட் அவஸ்தா" என்பது ஈரானில் உள்ள ஜொராஷ்ட்ரர்கள் என்பார் பேசிய மொழியின் பெயராகும். அதுவும் சமஸ்கிருத மொழியின் ஒரு பேச்சு வழக்குப் பிரிவே)

சமஸ்கிருதமே மூல மொழியாக இருப்பதால், சௌராஷ்ட்ர மொழிக்கு சமஸ்கிருத இலக்கணம் பெரிதும் பொருந்தி வரும். ஆயினும் சௌராஷ்ட்ர மொழிக்கு தனி இலக்கணம் பல நெடுங்காலத்திற்கு முன்பே "வரருசி" என்பவரால் வகுக்கப்பட்டது

ஸௌராஷ்ட்ர இலக்கண நூல்கள்: (பெயர், நூல் எழுதியவர், காலம் போன்ற விரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.: (ஸௌராஷ்ட்ரா, மராட்டி, அவந்தி, மாகதீ, ஆகிய மொழிக்கான இலக்கணம் இந்நூல்களில் அடக்கம்)

1) "பிராகிருத சர்வஸ்வ" - நூலாசிரியர் : மார்கண்டேயர்

2) 'பிராகிருத லவண" - நூலாசிரியர் : "சண்ட", காலம் 3-4ஆம் நூற்றாண்டு

3) 'பிராகிருத காமதேனு (அ.) பிராகிருத லங்கேஸ்வர ராவண"

- நூலாசிரியர் : லங்கேஸ்வர் (எ) ராவணன்

4) "சம்க்ஷித சார" - நூலாசிரியர் : கிரமதீஸ்வரர் 12ம் நூற்றாண்டு

5) 'பிராகிருதானு சாசனம்" - நூலாசிரியர் : புருஷோத்தமர்.

6) "பிராகிருத கல்பதரு' - நூலாசிரியர் : தர்க்க வாகீச பட்டாச்சாரியர் ராமசர்மா 17ஆம் நூற்றாண்டு

7) 'சித்த ஹேம சப்தானுசாசனம்" - நூலாசிரியர் : ஆசார்ய ஹேமசந்திரர்11ஆம் நூற்றாண்டு

8) "பிராகிருத சப்தானுசாசனம்" - நூலாசிரியர் திரிவிக்ரமர் 13ம் நூற்றாண்டு

9) 'ஷட்பாஷா சந்திரிகா" - நூலாசிரியர் லக்ஷ்மிதரர். ஆந்திராவைச் சேர்ந்தவர். இவர் பிராகிருதம், சௌரசேனி (சௌராஷ்ட்ரம்) மாகதி, பைசாசீ, சூளி கா பைசாசம், அபப்பிரம்சம் ஆகிய சமஸ்கிருத பேச்சு வழக்கு மொழிகளுக்கு ஒரே புத்தகமான (சுவடியில்) இலக்கணம் எழுதியவர். (இதிலிருந்து மொழிக்கு வடக்கு, தெற்கு என்ற பேதம் அக்காலத்தில் இல்லை என்பது தெளிவாகிறதல்லவா ?)

ஸௌராஷ்ட்ர இலக்கிய நூல்கள் :

“காதா சப்தசதி” என்ற நூல். தமிழில் உள்ள “அகநானுறு” என்ற இலக்கிய நூலைப் போன்றதாகும். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள இதன் தமிழாக்கத்தை படித்து ரசிக்கலாம். இதன் மற்றோர் தமிழாக்கம் “ஆந்திரநாட்டு அகநானூறு” என்கிற நூல். இதையும் தமிழில் படித்து பயன்பெறலாம். (புத்தகத்தின் பெயரைப் பார்த்து ஆந்திர பிரதேசத்தைப் பற்றியது என்று நினைத்து விட வேண்டாம். ஆந்திராவை வடநாடு என்று தமிழ்நாட்டில் ஒதுக்கி வைத்து விட்டதால், இப்புத்தகத்திற்கு இப் பெயர் வந்தது உண்மையில் ஆந்திரநாட்டைப் பற்றியல்ல, பொதுவாக வடபகுதியில் வாழும் மக்களின் சமூக வாழ்க்கையைப் பற்றியது)

“லீலாவதி” என்ற நூல் “கோஹல” என்பவரால் 10ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலக்கிய நூலாகும்.

சிங்கள அரசன் சிலாமேகன் - ஸ்ரீசாரதா ஆகியோரது மகள் லீலாவதி. லீலாவதிக்கும் சாலிவாஹன மன்னர் ஹாலன் என்பவருக்கும் இடையேயான காதல் காவியம் இந்நூல்.

“ஸ்ரீ கீஷ்ணுகாவிம்” என்ற நூல் கிருஷ்ண லீலா சாகர் என்பவர் எழுதியது 13ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இந்நூல் கிருஷ்ணரின் திருவிளையாடல்கள் பற்றியது

7ஆம் நூற்றாண்டில் தண்டி என்பவரால் எழுதப்பட்ட “காவியா தரிசனம்” என்ற இலக்கியத்தில், மொழி பற்றிய விவரங்கள் உள்ளது அதில் குறிப்பிட்டுள்ளது என்னவெனில், சமஸ்கிருதம், பிராகிருதமொழி அபப்பிரம்சம் மொழி (பேச்சு வழக்கு சமஸ்கிருதம்) பிராகிருதத்தின் மற்றைய பிரிவுகள் சௌரசேனி மொழியானது (சௌராஷ்ட்ரம், கௌடீ, லாடீ என 3 மொழிப் பெயர்களில் பேசியதைக் குறிப்பிடுகிறது

இதிலிருந்து மிகப்பழமையான காலத்தில் பேசப்பட்ட சமஸ்கிருதம் எவ்வாறு பிரிகிறது எனவும், அதன் அங்க மொழியாக ஆதியிலிருந்தே ஸௌராஷ்ட்ரமும் பேசப்பட்டு வருகிறது எனவும், இதன் வயதைக் கணிப்பது கடினம் எனவும், உலகின் மிகப் பழமையான மொழிகளில் ஒன்று எனவும் புரியும்.

“வாசுதேவ ஹிண்டி” என்ற நூல் கிருஷ்ணரின் தந்தை வசுதேவரைப் பற்றியது இது இரண்டு பாகம் கொண்டது இந்நூலின் 1ஆம் பாகம் “சங்கதா சகணி என்பவராலும், 2ஆம் பாகம் “தர்மசேனகணி என்பவராலும் எழுதப்பட்டது சங்கதாச கணி எழுதிய 1ஆம் பாகம் 26 லம்பகம், 11,000 ஸ்லோகங்களைக் கொண்டது 2ம் பாகம் 71 லம்பகம், 17,000 ஸ்லோகங்களைக் கொண்டது

முக்கியமாக “வாசுதேவ ஹிண்டி” மற்றும் “பவுமசரிய” புத்தகங்கள் சிறந்த இலக்கிய நூல்களாகும். “பவுமசரிய” புத்தகத்தை எழுதியவர் விமல சூரி. இதனை 4ஆம் நூற்றாண்டில் எழுதினார். “காதா சப்தசதி” மற்றும் “விஜ்ஜாலக்கம்” ஆகியவை சிறந்த தொகை நூல்களாகும். “சேது பந்தனம்” மற்றும் “கௌடவதம்” ஆகியவை சிறந்த காவிய நூல்களாகும்.

மேலும் வரருசி எழுதிய “பிராகிருத பிரகாசம்” என்ற இலக்கண புத்தகத்திற்கு உரைகள் எழுதியவர்கள் : மார்க்கண்டேயர், பரதர், கோஹல ஆகியோர்.

மேலும் 6ஆம் நூற்றாண்டில் "காத்யாயனர்" எழுதிய உரை நூல் "பிராகிரு மஞ்சரி" உரைநூலும், 7ஆம் நூற்றாண்டில் பாமஹர் எழுதிய "மனோரமா" உரைநூலும், 14ஆம் நூற்றாண்டில் வசந்தராஜர் எழுதிய "பிராகிரு சஞ்சீவனீ உரைநூலும் அனைவராலும் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்ட சௌராஷ்ட்ர இலக்கண உரை நூல்கள் ஆகும்.

இன்றுள்ள நிலைப்படி, தமிழின் பிற பேச்சு வழக்குகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகியவை எவ்வாறு தனித்து இயங்கி தனி இலக்கணம் கொண்டு உள்ளதோ அதே போல் சமஸ்கிருதம் பலப்பல பிரிவுகளாக பிரிந்து பல லட்சம் மக்களால் பேசப்படுகிற தனித்தனி மொழியாகி விட்டது. அதிலும் சௌரசேனி என்கிற சௌராஷ்ட்ர மொழி சமஸ்கிருத மொழியின் ஆரம்ப காலத்திலிருந்தே பேச்சு வழக்கிலிருந்து இன்றும் இருந்து வருகிறது.

நாம் முன்பு பார்த்தபடி ரஷ்யாவில் இருந்து வந்த ஆரியர் படையெடுப்பு என்பது ஒரு மிகைப்படுத்தப்பட்ட கற்பனை. ஒரு விவாதத்திற்காக ஆரியப் படையெடுப்பு என்பது உண்மை என்றே வைத்துக் கொள்வோம். ரஷ்யாவின் ஆரியருக்கும் இரானுக்கும் நெருங்கிய மொழித் தொடர்புண்டு என்பதையும் முன்பு பார்த்தோம். அப்படியிருக்க இந்தியாவின் மீது முஸ்லீம்கள் படையெடுக்க அவசியம் இல்லையே? இந்தியாவிலும் ஆரிய ஆட்சிதான் நடக்கிறது என சும்மா இருந்திருக்கலாமே?

மற்றொரு வாதம் : லெமூரியா கண்டத்தில் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்ததாகச் சொல்கிறார்களே? அவர்கள் லெமூரியா கண்டம் கடலில் அமிழ்ந்த போது உயிர் பிழைத்தவர்கள் ஆரியர்களின் பகுதியில் குடியேறினார்கள் என்றும் கேட்கலாமே? திராவிடர்கள்தான் ஆக்கிரமிப்பு செய்தவர்கள் என வாதிடலாமே?

அலைமோதும் கடல் அருகே அலைமோதும் உள்ளத்தினராக சுவாமிஜி அலைந்தார். அலைந்து திரிந்தார். அந்த அலைகடலின் சோக ஒலியில் அவரது கேள்விக்கு விடை கிடைக்கும். நம் மக்களின் ஒற்றுமைக் குறைவினால்தான் ஸோமநாதபுரத்திற்கு – ஏன் நாடு முழுவதற்குமே – வீழ்ச்சி ஏற்பட்டது என்று சமுத்திர ஒலி அவருக்குக் கூறும். இந்த ஒன்றுமையின்மை இன்று நேற்று ஏற்பட்டதா? என்ன? ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன் இதே பிரபாஸ க்ஷேத்திரத்தில், சுவாமிஜி உலவும் இதே கடற்கரையில் யாதவர்கள் தங்களுக்குள் ஒற்றுமை குன்றி தாங்களே ஒருவரை ஒருவர் மாய்த்துக் கொண்டதாக மகாபாரதம் கூறுகிறதே? இதைச் சரி செய்வது எப்படி? சுவாமிஜி துடித்தார்

இந்தூர் ராணி அகல்யா பாய் ஸோம நாதத்தில் கட்டியிருந்த புதுக் கோயிலுக்கு சுவாமிஜி சென்று தரிசனம் செய்தார். மூன்று தீர்த்தங்கள் புனித சங்கம ஸ்தானத்தில் ஸ்நானம் செய்தார். பிரபாஸ க்ஷேத்திரத்தில் மீண்டும் கட்ச் மன்னரைக் கண்டார். “உங்களுடைய இத்தனை ஆற்றலையும் நீங்கள் எப்படி பயன் செய்யப் போகிறீர்கள்? அற்புத சாதனைகளை செய்து முடிக்கும் வரையில் உங்களால் நிம்மதி பெற முடியாது’ என்று கட்ச் மகாராஜா கூறினார். நம்முடைய முன்னோர் செய்த நல்வினைப் பயனாக அத்தகைய அற்புதங்களை பிற்காலத்தில் சுவாமிஜி சாதித்தே விட்டார்.

மீண்டும் ஜுனாகாட் வந்தார் சுவாமிஜி

ஜுனாகாட்லிருந்து கத்தியவாரிலும் (சூரத்) கட்சிலும் பல இடங்களுக்குச் சென்று வந்தார் சுவாமிஜி

கட்சில் பாதசாரியாக கால் சோர நடந்து கொண்டிருந்தார் சுவாமிஜி கதிரவன் கருணையின்றி அனல் மழையில் அவரைத் தீய்த்துக் கொண்டிருந்தான். சுவாமிஜியின் தொண்டை ஓரேயடியாக வரண்டு விட்டது தவித்த வாய்க்கு தண்ணீர் கேட்க ஒரு வீடு இருக்க வேண்டுமே! அவரது கால்கள் தம்மையே சுமந்துகொள்ள முடியாத தளர்ச்சியில் அவரை மிகவும் சிரமத்துடன் தாங்கிச் சென்று கொண்டிருந்தது நாவு ஒட்டிக் கொள்ளும் தாகத்துடன் சுவாமிஜி சூனியப் பொட்டலில் கடும் வெய்யிலில் சென்று கொண்டேயிருந்தார். கடையில் அவரது கண்களுக்கு இனிக்க இனிக்க ஒரு காட்சி தெரிந்தது வரவேற்பு கூறும் குளிர் பூந்தடாகங்கள் அவரது பார்வையில் பட்டது உற்சாகத்துடன் அவற்றை நோக்கி நடந்தார். தளர்வுற்ற கால்களுக்குத் தெம்பூட்டிக் கொண்டு நடந்தார். இதென்ன ஆச்சரியம்! அவர் செல்லச் செல்ல அந்த தடாகங்களும், அவரிடமிருந்து விலகிச் சென்று கொண்டேயிருந்தன! ஆகா வெறும் கானல் நீரைக் கண்டா ஏமாறிப் போனோமே? என்று சோர்ந்து போய் மணலில் அமர்ந்து விட்டார். இந்த பேய்த் தேர் மட்டும் தானா மாயமானது? உலகமே இதில் காணும் சகல சுக துக்கங்களுமே மாயை தானே? என்று சிந்தித்தார் சுவாமிஜி மேலே நடக்கலானார். அப்போதும் அவர் கண்களுக்கு பேய்த் தேர் தெரிந்து கொண்டேதானிருந்தது ஆனால் அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. ஞானிக்கும், மாய உலகம் கண்ணுக்குத் தெரியும். எனினும் அது மாயை என்ற ஞானத்தால் அதில் மயங்காமலிருப்பான் அவன். மேல்நாடுகளில் மாயைப் பற்றி சொற்பொழிவு செய்யும்போது மாயையைக் கானல் நீருக்கு ஒப்பிடும்போது இந்தச் சம்பவத்தை சுவாமிஜி கூறியிருக்கிறார்

போர்பந்தர் சமஸ்தானத்திற்கு சென்றார் சுவாமிஜி (காந்தியடிகள் பிறந்த அதே ஊர்தான்) பண்டித சங்கர பாண்டுரங்கர் என்ற பேரறிஞர் அங்கு திவானாக இருந்தார். அரசருக்கு வயது வராததால் அவரே நிர்வாகத் தலைவராக இருந்தார். சுவாமிஜி சென்ற போது அவர் வேதங்களை மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். சுவாமிஜியை தமது விருந்தினராக வரவேற்று உபசரித்த திவான் அவரது கல்வி சிறப்பை நன்குணர்ந்தபடியால் வேதத்தின் சிக்கலான பகுதிகளில் சுவாமிஜியின் விளக்கத்தைக் கோருவார். சுவாமிஜியும் அதிலாகவமாகச் சிக்கலை அவிழ்த்துக் கொட்டுவார். வேதத்தைப் பரப்பும் பணிான் சுவாமிஜிக்கு மிகவும் உவந்த ஒன்றாயிற்றே. எனவே வள்ளிசாக பதினோரு மாதங்கள் போர்பந்தரிலேயே தங்கி சங்கர பாண்டுரங்கரின் மொழிபெயர்ப்புக்கு பெரும் உதவி செய்தார். வேத அநுவாதத்தோடு பதஞ்சலியின் மஹா பாஷ்யத்தையும் படித்துக் கொண்டிருந்தார் சுவாமிஜி ஜெய்ப்பூரில் தொடங்கி, கேத்ரியில் தொடர்ந்த மஹாபாஷ்யப் படிப்பு இப்போது தான் முடிவடைந்தது

இதன் பின்னர் திவான் பாண்டுரங்கரின் யோசனைப்படி பிரெஞ்சு மொழி கற்கலானார் சுவாமிஜி இது உங்களுக்கு உதவியாயிருக்கும் சுவாமிஜி என்று அவர் கூறினார். அவர் வாயில் சர்க்கரை போடவேண்டியதுதான் என்று இந்தச் சரிதையில் பின்னால் ஓரிடத்தில் எண்ணுவோம்.

சுவாமிஜி தாங்கள் இந்த தேசத்தில் அதிகமாக எதுவும் செய்ய முடியாது என்றே எனக்குத் தோன்றுகிறது இங்கே சிலரே உங்களைப் புரிந்து கொண்டு மகிழ்வார்கள்.

நீங்கள் மேல் நாடுகளுக்குச் செல்ல வேண்டும். அங்கே உள்ளவர்கள் உங்களையும், உங்கள் பெருமைகளையும் புரிந்து கொள்வார்கள். பாரதத்தின் சனாதன தர்மத்தை பிரசாரம் செய்வதன் மூலம் நீங்கள் மேல்நாட்டு நாகரீகங்களுக்குப் புது மெருகு ஊட்ட முடியும் என்று அந்தரங்க பூர்வமாக கூறினார் திவான் சங்கர பாண்டுரங்கர். முன்பு காசீர்பூரில் மாவட்ட நீதிபதி பென்னிடனும் சுவாமிஜியிடம் இதேபோலக் கூறியிருந்தார். பாரதத்தின் ஆன்மிகத்தால் மேல் நாடுகளின் உலகாயதத்தைப் போக்கடிப்பதோடு, இன்னொரு முக்கிய காரணத்துக்காகவும் மேல் நாடு செல்ல விரும்பினார் விவேகானந்தர். 'இந்து மதம் எப்படிப் பட்டது என்பதைப் பாருங்கள் எங்களிடம் இவ்வளவு கற்றுக் கொள்ள வேண்டிய நீங்கள் தான் எங்கள் நாட்டிலேயே வந்து புகுந்து கொண்டு எங்கள் மதத்தைக் கேலி செய்கிறீர்கள். எங்கள் மக்களை உங்கள் மதத்துக்கு மாற்றுகிறீர்கள். இது அடுக்குமா? என்று மேல் நாட்டாரிடம் கேட்க வேண்டுமென்று அவருக்கு ஒரு கொதிப்பு உண்டு'

அப்போது அமெரிக்காவில் சிகாகோவில் சர்வமத மகாசபை ஒன்று கூட்டுவதற்கு ஏறபாடாகி வந்தது இதனைப் பற்றி ஜூனாகாட் அல்லது போர்பந்தரிலோ தான் சுவாமிஜி அறிந்திருக்க வேண்டுமென்று அநுமாநிக்கப்படுகிறது ஒருகால் சங்கர பாண்டுரங்கரே இது பற்றிக் கூறி சுவாமிஜி அதில் கலந்து கொண்டு இந்து தர்மத்தின் பெருமையை உலக அரங்கில் இயம்ப வேண்டுமென யோசனை தெரிவித்திருக்கக் கூடும்.

எப்படியானாலும் இச்சமயத்தில் சுவாமிஜியின் உள்ளம் பூகம்பமாக கொந்தளித்துக் கொண்டிருந்தது உலகத்தையே ஒரு புரட்டு புரட்டி விடுவான் நரேன் என்று பெருமிதத்துடன் கூறிய குருநாதனை அடிக்கடி எண்ணி கொண்டார் சுவாமிஜி இந்தியாவில் ஒரு பெரும் பகுதியை பார்க்கப் பார்க்க அதனை மேம்படுத்தாமல் தாம் சும்மாயிருக்கிறோமே என்ற எண்ணம் அவரை வாளாய் அறுத்துக் கொண்டிருந்தது. அரசர் அவையில் அறிவுரை கூறியபோதும், அறிஞர் அவையில் ஆராய்ச்சி செய்த போதும், இவை அல்ல தம் பணி இன்னும் ஏதேதோ காரியங்களை தாம் எங்கெங்கோ செய்ய வேண்டியிருக்கிறது என்றும் அவருள் உறுத்திக் கொண்டேயிருக்கும். அவை என்ன காரியங்கள்? அவற்றைத் தாம் எங்கெங்கு செய்ய வேண்டும்?

இந்தியாவைப் பொறுத்த மட்டில் தமக்கு இன்னின்ன காரியங்கள் உள்ளன. உலக அரங்கத்தில் தமக்கு இன்னின்ன காரியங்கள் உள்ளன என்று அவருக்கு காலக் கிரமத்தில் மெல்ல மெல்ல விளங்கலாயிற்று. விளங்கியவை மேலும் தெளிவு பெற்றன. இந்திய மக்களின் வறுமைத் துயரும், அறியாமையும் தீரத் தாம், தமது சக்தியை பயன்படுத்த வேண்டும், மத உணர்வு குன்றி வருபவர்களுக்கு அந்த உணர்வை ஊட்ட வேண்டும்; மத உணர்வு குன்றாமலே இந்து மதம் தவறானது என்று மட்டும் கருதி பிற சமயம் தழுவ முற்படுவர்களைத் தடுத்து சனாதன தர்மத்தில் அவர்களை மீண்டும சேர்க்க வேண்டும் என்றெல்லாம் குமுறியது அவர் உள்ளம். இந்து மதத்தின் அழிவுக்கு முக்கியமான காரணம் சனாதனிகளின் வீம்புதான், மதத்தின் சாரமான அம்சங்களை விட்டுவிட்டு இன்றைய நடைமுறைக்கு ஒவ்வாத புறத் தோற்றங்களை வற்புறுத்தி மக்களை உயர்வு-தாழ்வு மனப் போக்குகளுக்கு ஆளாக்கி வருபவர்கள் அவர்களே என்று சுவாமிஜி

கருதினார். அதே சமயத்தில் சனாதனிகளை விட சீர்திருத்தவாதிகளை மேலும் வெறுத்தார் அவர். மேல்நாட்டுப் பாணியில் நமது இந்து மதத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்ற அவர்களின் உத்தேசத்தை சுவாமிஜியால் ஒருபோதும் ஒப்புக் கொள்ள முடியவில்லை. இவ்விராருக்குமிடையே நாட்டின் புராதனமாக ஆன்மிக உயர்வுகள் நசிந்து வருவதைக் கண்டு வேதனையில் வெதும்பினார் சுவாமிஜி நன்னடத்தை அற்றவர்கள், தர்ம போதனை செய்யும் விசித்திரத்தைக் கண்டு வாடினார். தம்மிடம் எவ்வித ஆன்மிக அனுபவமும் இல்லாதவர்கள் வேதாந்தங்களைக் கூறுவதால் அது ஒருகாலும் பலனளிக்காது என்று கண்டார். அனுபவம் பெற்றவர்களோ மக்களுக்குப் போதிக்காமல், ஏகாந்தமாக வாழத் தலைப்பட்டிருந்தார்கள். ஆத்ம சாதனைகளைப் புரிந்து அவைகளை மக்களுக்கு உபதேசிக்கக் கூடியவர்கள்தான் நாட்டை நல்வழியில் திருப்ப முடியும் என்று சுவாமிஜி எண்ணினார். இதனால் தான் மக்கள் சங்கத்தையும், ஏகாந்த தியானத்தையும் மாறி மாறி கைக்கொண்டார் சுவாமிஜி

இப்படி ஓர் ஒழுங்கான விதாசாரம் நாட்டு வாழ்க்கையிலேயே பல அம்சங்களில் ஏற்பட வேண்டும் என விரும்பினார் சுவாமிஜி மேல் நாட்டு நாகரிகம், விஞ்ஞானம், பொருளாதார உணர்வு வேதாந்த தத்துவம், தர்ம சாஸ்திர ஆசார முறைகள், புராணங்களின் பக்தி இவையாவும் பாங்கான விகிதத்தில் கலந்து நாட்டை உயர்த்த வேண்டும் என எண்ணினார். ஆனால் அவர் நடைமுறையில் கண்டது என்ன? ஒரேயடியாக மேல்நாட்டு மோகம் கொண்டவர்கள் அல்லது ஒரே கட்டுப் பெட்டியாக இருந்தவர்கள். ஒரேயடியாகத் தத்துவம் பேசியவர்கள், அல்லது வெறும் உணர்ச்சி மாத்திரமாகப் பிரார்த்தித்தவர்கள், பொருளாதாரம்தான் வாழ்க்கை என்றவர்கள், அல்லது மக்களின் இழிநிலைக்கு சற்றும் இரங்காமல் வறட்டு வேதாந்தம் பேசியவர்கள்-இப்படியாக தனித்தனி சாராரிடம் தத்தளித்துக் கொண்டிருந்தது இத்தனை கோஷ்டிகள் நாட்டில் இருக்கும்போது பேத உணர்ச்சியும், பூசலும், சச்சரவும், வாதப் பிரதிவாதமும் கொஞ்சமாகவா இருக்கும்????? பாமர மக்களின் அறியாமையையும், வறுமையையும் கண்டு சுவாமிஜி எவ்வளவு இதய நோவு கொண்டாரோ, அந்த அளவுக்கு மேன் மக்களின் பிளவுகளைக் கண்டு நோவுற்றார்.

தேசத்தைப் புனர் நிர்மாணிக்க வேண்டிய நாள் மிக மிக அருகில் வந்துவிட்டது என்று பரபரப்புக் கொண்டார் சுவாமிஜி ஆனால் இந்த தேசத்தைத் திருத்துவதென்றால் அதற்கு முதலில் உலக அரங்கிலேயே பணிதொடங்க வேண்டும் என்றும் அவர் கண்டார். இப்படிச் சொல்வதில் சிறிது முரணாகத் தோன்றும். உள்நாட்டில் செய்ய வேண்டிய பணிக்கு உலகப்பணி எப்படி பூர்வாங்கமாக இருக்க முடியும்? அந்த உள் நாட்டினரில் செல்வாக்குள்ள எந்த பெரும் பகுதியினரை சுவாமிஜி திருத்த முயன்றாரோ அந்த மேநாட்டு மோகிகள், மேல்நாடுகளே பாரத தர்மத்தின் பெருமையை உணர்ந்து போற்றினால் ஒழிய தங்கள் கொள்கைகளை கைவிட மாட்டார்கள் எனத் தெளிவாகக் கண்டார் சுவாமிஜி எனவே யாரை முன்மாதியாகக் கொண்டு இந்தியர்கள் தங்கள் வாழ்முறையை மாற்றிக் கொள்ள நினைத்தார்களோ, அந்த மாநாட்டினரிடமே வேதாந்த சமயத்தை விளக்கி அவர்கள் அதனை மதிக்குமாறு செய்ய வேண்டும் என்று அவர் ஆர்வம் கொண்டார். இதனாலேயே தாம் உலகுக்காக ஆற்ற வேண்டிய பணியும்

பூர்த்தியாகும் என்று கண்டார். அதாவது இந்தியாவில் இந்து மதத்தை மீண்டும் நிலைநாட்டுவதுடன், விஞ்ஞான-பொருளாதாரத் துறைகளில் மட்டும் கவனம் செலுத்திவரும் மேல்நாடுகளுக்கு ஆன்மிக உணர்வை உசுப்ப வேண்டிய தமது பணியும் நிறைவும் எனறு கருதினார்.

ராஜஸ்தானத்திலும், பம்பாய் ராஜதானியிலும் தாம் கண்ட பல மன்னர்களிடமும், மந்திரிகளிடமும், இதையே சுவாமிஜி கூறி வந்தார்.

பின்னர் பரமபதத்தில் பாம்பணைச் சிம்மாசனத்தில் மீதமர்ந்து பிரபஞ்சம் முழுவதையும் பரிபாலிக்கும் ஸ்ரீ விஷ்ணு கிருஷ்ணராக அவதரித்து ஆட்சி செலுத்திய துவாரகா சென்றார் விவேகானந்தர். அங்கு ஆண்டவன் ஆண்டதன் அடையாளச் சுவடுகள் எதையும் அவர் கண்டாரில்லை. சமுத்திர ராஜனின் தீனக் குரல் மட்டும் தான் அங்கு ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நிறைந்திருக்கிறது அந்த தீனக் குரல் சுவாமிஜியின் நெஞ்சை நெகிழ்த்தியது 'புராதன பாரதத்தின் நினைவாக இன்று இருப்பது என்ன? எங்கேனும் சில இடிபாடுகள் காண்கின்றன. அவ்வளவுதான். அன்றைய தத்துவங்களும் இன்று இதே கதியில் கிடக்கின்றன. ' என்ற எண்ணங்கள் சுவாமிஜியின் இமைகளை ஈரமாக்கின. கடற்கரையில் நீண்ட நேரம் அமர்ந்து அந்தக் கடலினும் ஆழமான நினைவுகளின் அடிவாரம் வரை குடைந்து குடைந்து சென்று கொண்டிருந்தார் விவேகானந்தர்.

பிறகு எழுந்திருந்தார். இதே போல பாரத தர்மம் இடிந்திருந்த ஒரு காலத்தில் அவதரித்து அதனை சீர் செய்த செம்மல் சங்கர பகவத் பாதர் துவாரகையில் ஸ்தாபித்த திருமடத்துக்குச் சென்றார். அதன் மஹந்து சுவாமிஜிக்கு ஒரு அறையில் தங்க வசதி அளித்தார். பாழடைந்த துவாரகாபதியில் சின்னஞ்சிறு அறையொன்றில் சுவாமிஜி தங்கிருந்த போது அவருடைய மன அறையில் கூட்டம் கூட்டமாக எண்ணற்ற மின் மினிகள் பறந்தன. மின் மினிகளின் மந்த வெளிச்சம் பெருகிக் கொண்டே சென்றது ஒளித்தூண் ஒன்றினையே தம் எதிரே கண்டார் சுவாமிஜி தாம் எதிரே காணும் அந்த ஒளியே இந்தியாவின் எதிர்காலம் என்று தெளிந்தார்.

கேக்வார் எனப்படும் பரோடா மகாராஜாவின் ஆளுகையில் இருந்த பகுதிகளில் சுவாமிஜியின் தேச சஞ்சாரம் நடைபெற்றது பிறகு மத்திய இந்தியாவில் காண்ட்வாலா சுவாமிகளின் பாதத்தினை தரித்தது அங்குதான் அமெரிக்காவில் சிகாகோவில் சர்வமத மகாசபையில் அவர் கலந்து கொள்ள தம் வாய்மொழி மூலமாகவே விருப்பம் தெரிவித்தார். யாரேனும் பிரயாணச் செலவு கொடுத்து உதவ முடியுமா?

அங்கிருந்து மத்திய பாரதம் வந்தார். பின்னர் மகாலேஷ்வர் வந்தார். அங்கு சௌராஷ்ட்ர சமஸ்தானத்தில் முன்பே பழக்கமான லிம்டி மன்னரை கண்டார். அவர் தமது சமஸ்தானத்திலேயே வந்து தங்குமாறு வேண்டினார். வருவதற்கில்லை மகராஜ். நான் ஒரு பணியை செய்தாக வேண்டியிருக்கிறது இப்போது நான் ஓய்வெடுத்துக் கொள்வதற்கில்லை. எனினும் எனக்கு ஓய்வு கால வாழ்க்கை என்று ஒன்று இருக்குமானால் அது உங்கள் இடத்திலேயே இருக்கும் என்றார் விவேகானந்தர் உணர்ச்சியுடன்

சுவா மிஜிக்கு ஓய்வுகா ல வா ழ்க்கை என்ற ஒன்று இருக்கவேயில்லை. எனவே அவர் லிம்டிக்கு மீண்டும் வரவே இல்லை. அயரா த உழைப்பின் மத்தியிலேயே அல்லவா சுவா மிஜி மகா சமா தி யடைந்துவிட்டா ர்!.............."

இதுவரை சுவா மி விவேகா னந்தர் வா ழ்க்கை வரலா ற்றுப் புத்தகத்தில் உள்ளதைப் படித்தோ ம். அவர் இந்து மதத்தை உலக அரங்கில் உயர்த்த வேண்டும். பா ரதம் உயர வேண்டும், சுதந்திரம் பெற வேண்டும் என்று கா ந்தி, படேல் முதலிய தலைவர்கள் உருவா வதற்கு பல கா லம் முன்னரே சிந்தித்து செயல்பட்டவர். அவருக்கு இத்தகைய சுதந்திர எண்ணம், இந்து மதத்தை புனரமைத்து உலகில் சிறந்ததென எடுத்துக் கா ட்ட வேண்டும் என்ற தீவிர சிந்தனை சௌரா ஷ்ட்ர சமஸ்தா னமா கிய லிம்டி, புஜ், கத்தியவா ர், கட்ச், சோ மநா த் (எ) பிரபா ச பட்டணம், ஜூ னா கா ட், கேத்ரி மற்றும் பல பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்து தவம் மேற்கொ ண்டபோ து கிடைத்து.

இதன் பின்னரே அவர் அதற்கா ன வழிகளை சௌரா ஷ்ட்ர தேசத்தில் தங்கியிருந்து யோ சித்தா ர். பலரின் ஆலோ சனைகளைப் பெற்றா ர். அந்த ஆலோ சனையின் பேரில் அமெரிக்கா வில் நடந்த சர்வமத மகா நா ட்டில் கலந்து கொ ள்ள முடிவெடுத்தா ர். அந்த முடிவுதா ன் இந்து மதத்தை உலகில் சிறந்த மதமா க அனைத்து உலக மதத் தலைவர்களா லும் ஒப்புக் கொ ள்ள வைத்த சிறந்த முடிவா க இருந்தது நமக்குத் தெரியுமே!

அவருக்கு சிறந்த முடிவை எடுக்க உதவிய சௌரா ஷ்ட்ர தேசத்தின் சோ மநா தபுரத்தின் பெருமையை அளவிட இயலுமோ ? ஜெய் சோ ம்நா த்! ஜெய் துவா ரகா நா த்!!

விவேகா னந்தரின் வா ழ்க்கை வரலா ற்றிலிருந்து திரும்பி இனி நமது சௌரா ஷ்ட்ர பிரதேச வரலா ற்றைத் தொ டருவோ ம்.

அதர்வண வேதத்தில் பகளா முகி என்ற சக்தியின் சகஸ்ர நா மத்தில் 'பிரபா சா யை நம' என்று போ ற்றப்படுகிற ஒரு வரி உள்ளது. இந்த வரிக்கு பிரபா ச பட்டினம் என்று போ ற்றப்படும் சோ மநா த்புரம் என்ற சௌரா ஷ்ட்ர தேசத்தில் வா சம் செய்பவள் என்று பொ ருள்.

வேத கா லத்திலிருந்தே பிரபா ச க்ஷேத்திரம் எனப்படும் சோ மநா தபுர பட்டினம் சௌரா ஷ்ட்ர மக்களா ல் வணங்கப்பட்டு, வா ழ்ந்து வரும் முக்கிய நகரங்களில் ஒன்றா க உள்ளது.

பகளா முகீ என்ற சக்தி தா ன் அவதா ரம் செய்ய சௌரா ஷ்ட்ரத்தை தேர்ந்தெடுத்தா ள்.

சோ மநா தர் வா சம் செய்ய சௌரா ஷ்ட்ரத்தை ஜோ திர்லிங்கமா க அமர தேர்ந்தெடுத்தா ர்.

பகவா ன் கிருஷ்ணர் தமது துவா ரகை நகரை சௌரா ஷ்ட்ர கடற்கரையில் அமைத்து ஆட்சி செய்ய தேர்ந்தெடுத்தா ர்.

என்னே சௌரா ஷ்ட்ர தேசம் செய்த புண்ணியம்!

கடவுளர்களின் வா சஸ்தலமா க சௌரா ஷ்ட்ரம் விளங்குகிறதே!

மேலும் தொ டருவோ ம்...

சௌரா ஷ்ட்ரமா னது பழங்கா லத்தில் சௌரா ஷ்ட்ரம் ஈரா ன் வரை விா பித்திருந்தது என்பதையும், சௌரா ஷ்ட்ர மொ ழி பின்னர் பல்வேறு வட்டா ர வழக்கு மொ ழிகளா க மா றியதையும், பின்னர் அவ்வட்டா ர மொ ழிகள் தனித்தனி மொ ழிகள் என்ற அந்தஸ்தை இன்று பெற்றிருக்கிறது என்பதா ல், சமஸ்கிருதத்தின் மொ ழியின் வட்டா ர மொ ழிகள் அனைத்தும் இந்தோ -ஐரோ ப்பியன் மொ ழிகள் என்ற பொ துத் தலைப்பின் கீழ் வருகின்றன.

மேற்கண்ட இச்செய்தியின் ஆதா ரத்தை இந்திய அரசா ங்கம் வெளியிட்ட பல்வேறு எல்லை வரைபடங்களில் வா யிலா க நிரூபிக்கப்படுகிறது பல்வேறு குழுக்களின் குடியேற்றங்கள், அக்குழுவினரின் பெயரா ல் அழைக்கப்பட்ட பிரதேசங்கள் ஆகியவை சௌரா ஷ்ட்ரத்தின் எல்லையை திடீர் திடீரென பெரிதும், சிறிதுமா க மா றும் படிச் செய்து விட்டது எனினும் பரந்த நோ க்கில் பா ர்த்தா ல் அனைத்து குழுக்களும் சௌரா ஷ்ட்ர மொ ழியையே உபயோ கப் படுத்தினர். வரைபடத்தில் எவ்வா று சௌரா ஷ்ட்ரம் என்ற பேரெல்லை பிரிந்து சிற்றெல்லையா க, இந்த இருபதா ம் நூ ற்றா ண்டில் குஜரா த்தின் ஒரு சிறு பகுதியா க எல்லை சுருங்கிவிட்டதை வரலா று சா ட்சி கூறுகிறது




அசோ கர் கா ல சா ம்ரா ஜ்ய எல்லையை குறிக்கும் வரைபடம்.

இந்த எல்லை வரைபடத்தில் சௌரா ஷ்ட்ரம் என்று தற்கா ல குஜரா த் மா நிலம் இருக்கும் இடத்தை குறித்துள்ளா ர்கள். விரஜ பா ஷா என்ற சௌரா ஷ்ட்ர மொ ழி மதுரா ரா ஜ்யத்திலிருந்து ஹிமா லயா வரை பேசப்பட்டது என்பது யுவா ங் சுவா ங் எழுதிய பயணக்

கட்டுரையிலிருந்து அறியப்படுகிறது மேற்கண்ட வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள "சௌரா ஷ்ட்ரம்" அசோ கர் கா லத்தில் சௌரா ஷ்ட்ரம் என்று அழைக்கப்பட்ட எல்லையைக் குறிக்கிறது




குப்தர் கா லத்தில் சௌரா ஷ்ட்ரத்தின் ஒரு பகுதி குஜ்ஜர் அகதிகளின் ரா ஷ்ட்ரமா க மா றிவிட்டது "குஜ்ஜா ர்" என்ற பழங்குடி மக்கள் அகதிகளா க வந்து சௌரா ஷ்ட்ரத்தில் குடியேறி நா ளடைவில் "குஜ்ஜர் ரா ஷ்ட்ரா " என்ற பெயரில் தமது எல்லையை நிர்ணயித்து வா ழ்ந்து வந்தனர். அதுவே இன்று குஜரா த் என்று அழைக்கப்படுகிறது மேற்கண்ட குப்தர் கா ல சௌரா ஷ்ட்ர தேச எல்லைரய இந்திய அரசு வெளியிட்ட வரைபடத்திலிருந்து

அறியலா ம். குப்தர் கா லத்தில்தா ன் சௌரா ஷ்ட்ரத்திலிருந்து நெசவா ளர்கள் தொ ழிலைத் தேடி அருகிலிருக்கும் “மா ளவம்” என்ற ரா ஜ்யத்திற்கு கூட்டம் கூட்டமா க இடம் பெயர்ந்தனர். மா ளவம் தற்கா ல மத்தியபிரதேசத்தை குறிக்கும்.




கி.பி 150 இல் பா ரத ரா ஜ்ஜியங்களை குறிக்கும் வரைபடம்.

மேற்கண்ட வரைபடத்தில் சௌராஷ்ட்ரமானது ஷாகா சத்ரபாஸ் வம்ச அரசர்களால் ஆளப்பட்டது என்று குறிக்கப்பட்டுள்ளது ஷாகா சத்ரபாஸ் வம்ச அரசர்களால் ஆளப்பட்ட எல்லை தற்கால குஜராத், பாகிஸ்தான் ஆகியவற்றை அடக்கியது




ஹர்ஷர் காலத்தில் சௌராஷ்ட்ரமானது ஹர்ஷரின் ஆட்சி எல்லைக்குட்பட்டு இருந்ததை குறிக்கிறது இருப்பினும் சௌராஷ்ட்ர பகுதியில் சில சிற்றரசர்களின் ஆதிக்கமும் இருந்தது அவர் காலத்தில் கூர்ஜரம் என்பது சௌராஷ்ட்ரத்தின் அருகில் குறிக்கப்பட்டுள்ளது என்பதை காணலாம். ஆனால் தற்காலத்தில் குஜராத் மாநிலமே கூர்ஜரத்தின் பெயரால் குறிக்கப்படுகிறது இதிலிருந்து கூர்ஜரர்கள் ஹூணர் படையெடுத்த சமயத்திலிருந்து அகதிகளாக சிறிது சிறிதாக இடம் பெயர்ந்து குஜராத்தில் குடியேறியதை அறியலாம். அப்பொழுதிலிருந்து சௌராஷ்ட்ரமானது குஜராத் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது மேலும் சௌராஷ்ட்ரமானது சௌராஷ்ட்ரம், மஹாராஷ்ட்ரம் என இரு பிரிவாக பிரிந்து பெரிய எல்லையான சௌராஷ்ட்ரமானது மகாராஷ்ட்ரம் என்ற பெயரிலும், சிறிய எல்லையான குஜராத் சௌராஷ்ட்ரம் என்ற பெயரில் வழங்க ஆரம்பித்தது




21. கஜ்னி மஹ்முது காலத்து இந்தியா

கஜினி முகமது காலத்திய பாரத நாட்டு எல்லை வரைபடம். கஜ்னி என்ற ஊரைச் சேர்ந்த முஸ்லீமாக மதம் மாறிய முகமது என்பவன் சௌராஷ்ட்ரத்திலுள்ள சோமநாதபுரத்தின் மீது படையெடுத்து சிவ ஆலயத்தை கொள்ளையடித்தான். கஜினி முகமது காலத்தில் பாரதம் முஸ்லீம் படையெடுப்புக்கு உள்ளாகியதே அன்றி முஸ்லீம் ஆட்சிக்குள் வரவில்லை. தற்கால பாகிஸ்தான், காஷ்மீர் ஆகிய பாரதத்தின் பகுதிகளே கஜினி முகமது ஆட்சிக்குள் வந்தவை.




சோ மநா தபுர படையெடுப்பிற்குப் பின் சௌரா ஷ்ட்ரமா னது குஜரா த், மஹா ரா ஷ்ட்ரம் என்ற இரண்டு எல்லையா க இரண்டு பெயர்களில் குறிப்பிடப்படுவதை மேற்கண்ட எல்லை வரைபடத்திலிருந்து கா ணலா ம்.




ஔரங்கசீப் காலத்தில் தென்பாரதம் தவிர வட பாரதம் முழுவதும் அவரது ஆட்சியிலிருந்தது அவர் காலத்தில் தான் இந்துக்களுக்கு மற்ற எல்லா முஸ்லீம் அரசர்களை விடவும் பல கொடுமைகள் நடந்தன.




தக்காண முஸ்லீம் ராஜ்யம், விஜய நகர பேரரசு என்ற இந்துக்களின் பாரத தேச மீட்புப் படையானது ஆட்சி செய்த எல்லைகளை மேற்கண்ட வரைபடத்தில் காணலாம்.




மஹாராஷ்ட்ர மாமன்னர் சத்ரபதி சிவாஜி ஔரங்கசீபின் முஸ்லீம் ஆட்சியை எதிர்த்து இந்து ஸ்வராஜ்யத்தை நிறுவியவர். அவர் காலத்திய ஆட்சி எல்லை வரைபடத்தை மேலே காணலாம்.




*63. இந்தியா : அரசியல் பிரிவுகள்*

சுதந்திரம் அடைந்த பின் பாரத அரசாங்கம் பாரதத்தை நிர்வாக வசதிகளுக்காக மொழிவாரி மாகாணங்களாகப் பிரித்தது அந்த வரைபடத்தை மேலே காணலாம். 1953ம் வருடம் வெளியிடப்பட்ட இந்த வரைபடத்தில் சௌராஷ்ட்ரம் என்பது தற்போதைய குஜராத், மஹாராஷ்ட்ரா என்ற இரு மாநிலங்களும் சேர்த்து ஒரே மாநிலமாக இருந்ததை காணலாம். குஜராத்தில் பேசப்படும் குஜராத்தி மொழிக்கும், மஹாராஷ்ட்ராவில் பேசப்படும் மராட்டி மொழிக்கும் அதிக வித்தியாசம் ஏதுமில்லை. ஏனெனில் அவை இரண்டும் சௌராஷ்ட்ர மொழியின் பேச்சு வழக்குகளே. அவை இரண்டிற்கும் அதிக வித்தியாசமில்லை. தமிழுக்கும், மலையாளத்திற்கும் உள்ள வித்தியாசம் கூட குஜராத்தில் பேசப்படும் சௌராஷ்ட்ர மொழிக்கும், மஹாராஷ்ட்ரத்தில் பேசப்படும் மஹாராஷ்ட்ரி என்ற சௌராஷ்ட்ர மொழியின் பேச்சு வழக்கிற்கும் இடையே கிடையாது எனவே அக்காலத்தில் இயற்கையாகவே மஹாராஷ்ட்ரா, குஜராத் ஒரே மாநிலமாக இருந்தது

1864ல் சௌராஷ்ட்ர மாநிலத்தின் பெயரில் வெளியிடப்பட்ட சில தபால் தலைகளை கீழே காணலாம்



அதற்கு சற்று பிந்தைய தபால் தலை கீழே.



.

(United States of Saurashtra included 217 State of India and was formed in 1948. It issued and used other state stamps with an overprint for postage.  U.S.S. Revenue & Postage SAURASHTRA overprint)



சில பழங்கால சௌராஷ்ட்ர நாணயங்கள் மற்றும் உருவங்களை மேலே காணலாம்.

## வரலாற்று நிகழ்வுகள்

### சூரத் (சௌரத்)

சூரத் "லாட பிரதேசம்" என பெயர் பெறுகிறது லாடி என்பது இப்பகுதியில் பேசப்படும் சௌராஷ்ட்ர வட்டார வழக்கின் பெயர்.

யுவான் சுவாங் சௌ-ர-தா என்று சூரத் நகரை குறிப்பிடுகிறார்.

குரானில் உள்ளபடி சூரஜ் (சூர்யபூர்) என்ற பெயரை முஸ்லீம்கள் கலாசாரப்படி இந்து தெய்வங்களை வெறுத்தால், சூரியனின் பெயரில் உள்ள சூரஜ் நகரின் பெயரை சூரத் என மாற்றி அழைத்தனர். முஸ்லீம்கள் ஆட்சி ஏற்பட்டதால் அப்பெயரே நிலைத்துவிட்டது.

பார்சிகளின் போக்குவரத்து துறைமுகமாக இருந்ததால் சூரஜ்-இ-கூப்சூரத் என்ற பெயரில் சூரத் அழைக்கப்பட்டு, பின்னர் சூரத் என மாறியதாக குறிப்பிடப்படுகிறது.

### சௌராஷ்ட்ரத்தின் விளையாட்டுக்கள்

ஜீலா, பந்து விளையாட்டு, சத் தாலி (ஓடி பிடித்தல்) லங்கடி (நொண்டி) ஹுடுடுடு (கபடி), சந்தா-குக்கடி (ஒளிந்து கண்டுபிடி), கோலி, பம்பரம், பட்டம் விடுதல், கில்லி-தண்டா, அப்பாலி-பிப்பி (மரத்தின் மேல் விளையாடுதல்) சதுரங்கம், மலையேற்றம் ஆகியவை.

### அனர்த்தா

வட சௌராஷ்ட்ர பகுதியானது ஷர்யாதியின் மகன் அனர்த்தாவின் பெயரால் அழைக்கப்பட்டது. அனர்த்தாவின் மகள் ரேவதா குஷஸ்தலியை ஆண்டார். குஷஸ்தலி என்பது தற்போதைய துவாரகையின் பழைய பெயர். நர்மதை நதி ரேவதா அரசரின் பெயரால் ரேவா என்றும் அழைக்கப்பட்டது. கிர்நார் மலை ரேக்வத் என்றும் அழைக்கப்பட்டது.

பகவான் க்ருஷ்ணர் மதுராவிலிருந்து அவரது பாட்டனாரான உக்ரசேனர், மற்றும் யாதவ வீரர்களுடன் சௌராஷ்ட்ரத்தின்கடற்கரையில் குடியேறினார். பகவான் க்ருஷ்ணரின் சகோதரர் பலராமர், ரேவத வம்சத்தைச் சேர்ந்த குக்குட்மி என்பவரின் மகளான ரேவதி என்பவளை மணந்தார். மகாபாரதப் போர் நடந்தது.

அனிருத்தனின் மகனும், க்ருஷ்ணரின் பேரனுமான வஜ்ரா என்பவனே யாதவர் கலகத்தில் எஞ்சிய ஒரே ஆள். மகாபாரத அர்ஜுனர் அவருக்கு மதுராவின் மகுடத்தைச் சூட்டினார். வட சௌராஷ்ட்ரத்திற்கு அனந்த், லாட, சௌராஷ்ட்ரா, கட்ச், அபரந்தா என்ற வேறு பெயர்களும் உண்டு. மேற்கண்ட சௌராஷ்ட்ர பிரதேசத்தின் "எல்லையின் பெயர்கள்" மாறுபட்டுக் கொண்டிருந்தது. ஆனாலும் சௌராஷ்ட்ரா என்ற பொதுப் பெயர் எல்லா எல்லைக்கும் சேர்த்தே இருந்தது.

மௌரியர் காலத்தில் குஜராத்தின் ஒரு பகுதி மௌரிய ஆட்சியில் ஒரு மாநிலமாக இருந்தது. புஷ்யமித்ரர் என்பவர் சௌராஷ்ட்ரத்தின் ஆட்சியாளராக நியமிக்கப்பட்டார். அவர் கி.மு 322 முதல் 294 வரை ஆண்டார். ஜுனாகாட்-ல் சுதர்சன ஏரியில் அணையைக் கட்டினார்.

சந்திர குப்த மௌரியரின் பேரனான அசோகர், ஜுனாகாட்-ல் உள்ள கிர்நார் மலையில் புத்தமத கல்வெட்டுகளை செதுக்கினார். மேலும் சுதர்சன ஏரியில் கட்டப்பட்ட அணையிலிருந்து கால்வாய்களை வெட்டினார்.

மௌரியர்களின் உட்பூசலினால் சம்ப்ரதி மௌரியர் என்ற உஜ்ஜயினியைச் சேர்ந்த குழுவிடம் சௌராஷ்ட்ர ஆட்சி இருந்தது டெமிடிரையிஸ் என்பவர் தலைமையில் கிரேக்கர்கள் சௌராஷ்ட்ரத்திற்கு வந்தனர்.

முதல் நூற்றாண்டிலிருந்து 400 வருடங்கள் சாகா சத்ரப் ஆட்சியாளர்கள் சௌராஷ்ட்ரத்தை ஆண்டனர். அவர்களின் ராஜ்யத்தை ஸ்தாபித்தவர் மஹா சத்ரப் எனப்படும் ருத்ரதாமன்-1. சாகா சத்ரப் எனப்படும் ருத்ரதாமன் (கி.பி.100)ன் கல்வெட்டுக்கள் ஜுனாகாட்டில் உள்ளது

சத்ரப் வம்சத்தை வீழ்த்தி குப்தர்கள் ஆட்சியை கைப்பற்றினர்.

சந்திர குப்த விக்ரமாதித்யர், அவருக்குப் பின் ஸ்கந்த குப்தர் ஆண்டனர்.

குப்தர் பேரரசு 5ஆம் நூற்றாண்டில் வீழத் துவங்கியது

எனவே குப்தர்களின் சேனாதிபதியான ப4தர்கா என்பவர் மைத்ரேக வம்ச ஆட்சியை கி.,பி 470ல் நிறுவினார் அவர் தமது தலைநகரை கிர்நாரிலிருந்து பவநகர் அருகே உள்ள சௌராஷ்ட்ர கிழக்கு கடற்கரையின் நகரமான வாலாபூருக்கு மாற்றினார்.

துருவசேன மைத்ரேக் (கி.பி.640) காலத்தில் யுவான் சுவாங் அங்கு வந்து சென்றார்.

மைத்ரேகருக்குப் பின் த3த்தா என்பவர் பிரதிஹார் வம்ச ஆட்சியை நிறுவினார். நந்திபூர் (நந்தோல்) என்ற ஊரில் அவரது குஜ்ஜார் வம்ச ஆட்சி துவங்கியது இச்சமயத்தில்தான் குஜராத்தில், குஜ்ஜர், சாளுக்கியர், மைத்ரேகர் மூவரின் ஆட்சியும் நடந்தது

பின் சவடா என்ற வம்ச ஆட்சி முக்கியத்துவம் பெற்றது அவர்களின் சின்ஹ்பூர் படன் என்ற தலைநகரை வன்ராஜ் வருவாக்கினார்.

சமந்த்சின்ஹ் என்ற சவடாவின் இறுதி அரசர் முல்ராஜ் என்பவரிடம் தோற்றார். கி.பி 942ல் சோலங்கி வம்சம் ஆட்சி செய்தது அவர்கள், சௌராஷ்ட்ராவின் பகுதிகளான, சௌராஷ்ட்ரா, கட்ச், க்ரஹரிபு, ஜுனாகாட், வாசோ2, பு2லணிகட்சி ஆகிய பகுதிகளை ஆண்டனர். இவரது காலத்தில் தான் சௌராஷ்ட்ரத்தின் ஒரு பகுதிக்கு குஜராத் என்ற பெயர் பிரபலமாக ஆரம்பித்தது

சோலங்கி வம்ச சிந்த்ராஜ் ஜெயசின்ஹ் 47 வருடம் ஆண்டார். குமாரபாலா 31 வருடம் ஆண்டார். (1143-1174.)

இவர் சௌராஷ்ட்ரத்தின் ஜுனாகாட் கோட்டையை கைப்பற்றி ராணகா தேவி என்ற ராகே2ங்கா4 என்ற வம்ச அரசியையும்கைப்பற்றினார். அவர் ராஜபுத் வம்சத்தைச் சேர்ந்தவர். அவள் உடன்கட்டை ஏறிய வதாவன் ஊரில் அவளுக்கு கோவில் உள்ளது

சோலங்கி வம்சத்தவரின் குலதெய்வமான பிரபாஸ்-ல் உள்ள சோம்நாத் கோவில் பீம்தேவ்-1 என்பவரின் பாதுகாப்பில் இருந்தபோது தான் கஜினி முகமதால் கொள்ளையடிக்கப்பட்டது அவருக்குப் பின் கர்ணதேவ் "கர்ணாவதி" (தற்போதைய அஹமதாபாத்) நகரை உருவாக்கினார். கர்ணதேவ் மினல்தேவி என்பவரை மணந்தார்.

பின் சித்ராஜ் என்பவரும், அவருக்குப் பின் குமாரபாலா என்பவரும் ஆண்டனர். குமாரபாலா ஜைன சமயத்தை தழுவினார். பின்னர் பால் மூல்ராஜ் என்பவர் முகமது கோரியை தோற்கடித்து சோமநாதர் கோவிலை காப்பாற்றினார்.

சோலங்கி வம்சத்திற்குப் பின் வகேலா என்ற வம்சம் தோன்றியது அவர்கள் சோலங்கி வம்சத்தில் பணியாட்களாக இருந்தவர்கள். அவர்களில் விதாவல், விஷால்தேவ் என்ற இரு அரசர்கள் முக்கியமானவர்கள்.

விஷால்தேவ் டா₃போய் என்ற பிரபல கோவிலைக் கட்டினார்.

வகேலா வம்ச கர்ணதேவ்தான் சௌராஷ்ட்ர குஜராத்தின் கடைசி ஹிந்து அரசர். அவர் அலாவுதீன் கில்ஜியால் தோற்கடிக்கப்பட்டார். (1297ல்)

1298ல் முஸ்லீம்கள் சௌராஷ்ட்ரத்தை கைப்பற்று முன் வியாபாரத்திற்காக வந்து சென்று கொண்டிருந்தனர். காம்பே, பரூச் ஆகிய பகுதிகளில் சிறிய குடியிருப்புகளையும் ஏற்படுத்தியிருந்தனர்.

அப்துல்லா என்ற எகிப்தியர், மதப் பிரச்சாரம் செய்ய அனுமதிக்கப்பட்டார். அவர் ஹிந்துக்களை போரா என்ற பிரிவு முஸ்லீமாக மதம் மாற்றினார். ஆனால் அலாவுதீன் கில்ஜியின் ஆட்சி ஆரம்பித்த பிறகு 400 ஆண்டுகள் டெல்லி சுல்தான்களின் பிடியில் சௌராஷ்ட்ரம் இருந்தது பின் 1758ல் மோமின்கான் தோற்கடிக்கப்பட்டு மராட்டியர் வெற்றி பெற்றனர். கர்ணாவதி நகரை(அஹமதாபாத்) கைப்பற்றினர்.

கி.பி 1664, 1672ல் சத்ரபதி சிவாஜி சூரத் நகரை கைப்பற்ற முயற்சித்தார். பின்னர் 1758ல்தான் மராட்டியருக்கு வெற்றி கிடைத்தது பின்னர் மராட்டிய பேஷ்வாக்கள் ஆட்சி. தாமாஜி காக்வத், கதம் பந்தே ஆகியோர் ஆண்டனர். இக்காலத்தில் போர்ச்சுகல், இங்கிலாந்து டச்சு ஆகிய நாட்டவர் துறைமுகம் வழியாக நுழைந்தனர்.

துணைப்படைத் திட்டத்தின் கீழ் பிரிட்டிஷ் படையினர் பல இடங்களை கைப்பற்றினர். அவர்களுடன் ஆனந்தராவ் கேக்வாட் உடன்படிக்கை செய்து கொண்டு சூரத்தை ஒப்படைத்தார் (1802) 1819ல் மராட்டிய ஆட்சி முடிவுக்கு வந்தது

பின்னர் சௌராஷ்ட்ரத்தை ஆங்கிலேயர் ஆண்டனர்.

குஜராத்தில் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து தாதா பாய் நௌரோஜி பெரோஷ் ஷா மேத்தா, பத்ருதீன் த்யாப்ஜி விட்டல் பாய் படேல், சர்தார் வல்லப் பாய் படேல், மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி ஆகியோர் போரிட்டனர். சமூக சிந்தனையாளரான ஸ்வாமி தயானந்த சரஸ்வதி சௌராஷ்ட்ரத்தைச் சேர்ந்தவர். அவர் சமுதாய சீர்திருத்தங்களைச் செய்தார்.

1947ல் சுதந்திர பாரதம் உருவானது முஸ்லீம்கள் மதத்தின் பெயரால் தனி நாடு கோரியதால் பாகிஸ்தான் பிரிக்கப்பட்டு பாகிஸ்தான் உருவானது சௌராஷ்ட்ரத்தின் ஒரு பக்க எல்லையான பாகிஸ்தானில் சிந்து மாநிலம் உள்ளது சிந்து சௌராஷ்ட்ரத்தின் ஒரு அங்கமாக இருந்தது அது பாகிஸ்தானுக்குச் சென்றது சிந்துவில் வாழ்ந்த இந்துக்கள் பாரதத்திற்கு துரத்தியடிக்கப்பட்டனர்.

பாரதத்தின் வசமுள்ள சௌராஷ்ட்ரமானது 1960ம் ஆண்டு மே 1ம் தேதி குஜராத், மஹாராஷ்ட்ரா என்ற இரு மாநிலமாகப் பிரிக்கப்பட்டது

ஆங்கிலேயர் பொதுவாக குஜராத் பகுதி மக்களை இந்திக், திராவிட என்ற இரு பிரிவாக பிரித்தாளும் சூழ்ச்சியின் கொள்கைப்படி பிரித்தனர். நாகர பிராமணர், பா4ட்டியா, ப4டேலா, ராபார், மினா, பார்சி ஆகியோர் இந்திக் எனவும், பா4ங்கி3, கோலி, டுப்லா, ஹைக்தா, மச்சி-கர்வா, பில் ஆகியோர் திராவிட மக்கள் எனவும் பிரித்து ஆண்டனர். ஆயினும் பழங்குடியினர் மற்ற மக்களோடு சேர்ந்தே வாழ்கின்றனர்.

பழங்குடியினர் மக்கள் தொகை மாநிலத்தின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு டாங்கா மாவட்டம் முழுவதும் பழங்குடியினரே வசித்து வருகின்றனர்

இந்து மதத்தின் ஆறு பிரிவுகளுள் ஒன்று சௌரம். சூரியனை முதல் கடவுளாகக் கொண்டு வழிபடப்படுவது ஐரோப்பா, தென் அமெரிக்கா, சீனா முதலிய நாடுகளில் அழிபாடுற்ற நிலைகளில் சூரியன் கோவில்கள் காணப்படுகின்றன. ஜப்பான் நாட்டுச் சக்ரவர்த்தி சூரிய வம்சத்தவன். காஷ்மீரத்தில் எட்டாம் நூற்றாண்டில் மார்த்தாண்டர் கோவில் உள்ளது ஒரிசாவில் பூரிக்கு அருகில் கொனர்க் என்ற இடத்தில் சூரியன் கோவில் உள்ளது ரிக் வேதத்தில் சூரியனின் துதிகள் காணப்படுகின்றன.

சாஸ்த்ரீய சங்கீதத்தில் சௌராஷ்ட்ர ராகம் என்ற ராகம் உண்டு சௌராஷ்ட்ர ராகத்தில் சூரிய கீர்த்தனைகள் பாடி பிரார்த்தனை செய்தால் சூரிய பகவானுக்கு பிடித்தமானது என்று சாஸ்திரங்களில் உள்ளது

சௌராஷ்ட்ரம் என்பது சூரியனின் தேசம் என்ற பொருளில் சௌரத், சௌ-ர-தா என்ற பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்படுகிறது

## மதுரையில் சௌராஷ்ட்ரர் குடியேறிய வரலாறு

இதிகாசங்களில் உள்ள 56 தேசங்களில் ஒன்று சௌராஷ்ட்ர ராஜ்யம். இந்த ராஜ்யம் மிக செல்வம் பொருந்தியதும், செழிப்பு உடையதும், பரந்ததாகவும் இருந்தது பின்னர் குஜராத்தி, ஸிந்து மார்வாரி, ராஜஸ்தானம், மாளவம் ஆகிய தேசங்களாக ஆகியது

இந்தேசம் ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது 1) காம்பேயம், காத்ரேயம், விந்தியா, மிதிலா, ஆரியா ஆகியவை. சௌராஷ்ட்ரத்தின் முக்கியமான நகரங்கள், வலபிபுர், கோஹிவாரி, சௌராஷ்ட்ர நகரி, அனஹல்நகரி, மிதிலாநகரி, சம்பாநகரி, தேவகிரி, உஜ்ஜயந்தகிரி, நந்தி, துவாரகா, கம்புவாரி, கத்தியவாரி ஆகியவை.

இதில் செல்வம் வளம் பொருந்திய கடற்கரை நகரமான சௌராஷ்ட்ர நகரியில் அடிக்கடி படையெடுப்பு நிகழ்ந்தது இதனால் மற்ற சௌராஷ்ட்ர பகுதிகளான பாஞ்சாலம், மிதிலா, ஸிந்து மாளவம், மஹாராஷ்ட்ரம், கூர்ஜரம் முதலிய பகுதிகளில் பலர் குடியேறி வசித்து வந்தனர்.

பின்னர் விஜய நகர பேரரசில் குடியேறினர். பின்னர் தமிழக மதுரைக்கு குடியேறினர்.

மதுரையில் 1627ல் பார்திப வருடம் ஆவணி மாதம் பௌர்ணமியில் சௌராஷ்ட்ரர்கள் காயத்ரி ஜபம் செய்து பூணூல் அணிந்தனர். தமிழக வழக்கப்படி பிராமணர்களே பூணூல் அணிய வேண்டுமாதலால், மதுரை அரசி மங்கம்மாளின் கோட்டை அதிகாரி ஜோஸ்யம் வெங்கட்ரங்கய்யர் சௌராஷ்ட்ரர்களை கைது செய்தார்.

வெங்கட்ரங்கய்யரின் குற்றத்தைக் கேட்ட மங்கம்மாள், பாபன்ன ஸோமயாஜியை அழைத்து தீர்வு காணும்படி பணித்தார். பல பெரியோர்களை அழைத்து இப்பிரச்சனைக்கு தீர்வு காண ஸ்ரீரங்கம் ரகுநாத ஸ்வாமி தேவஸ்தானத்தில் கூடி விவாதித்தனர்.

அங்கு கவிதார்க்க ஸிம்ம ஆசாரி சுவாமிகள், தம்டம் வெங்கட கிருஷ்ணய்யங்கார், அனந்தய்யங்கார், சடகோபாலாச்சாரி சுவாமிகள், சிங்கபிரான் தீக்ஷிதர், ஸ்மிருதி அய்யனங்கார் சாஸ்திரி, நித்யானந்த சாஸ்திரி, திருமல சாஸ்திரி, ராம சாஸ்திரி ஆகியோர் சௌராஷ்ட்ரர்களை அழைத்து விசாரித்தனர்.

இவ்விசாரணையின் முடிவில் சௌராஷ்ட்ர தேச வழக்கப்படி அனைவரும் பூணூல் அணியலாம் என தெரிவிக்கப்பட்டது தமிழ்நாட்டைப் போல் சில ஜாதிகளே அணியலாம் என்ற கட்டுப்பாடு எங்களுக்குக் கிடையாது நாங்கள் நெசவுத் தொழில் செய்யும் ஜாதி எனினும் பூணூல் அணிய தடை கிடையாது என வலியுறுத்தினர்.

இதன் முடிவில் மங்கம்மாள் சௌராஷ்ட்ரர்களுக்கு பாதுகாப்பு அளித்து நல்லபடியாக வாழுங்கள் என விடுதலையும் கொடுத்தார்.

மேலும், மனு, போதாயனர், காத்யாயனர், தேவலர் ஸ்மிரிதிகள், ஸாஸ்த்ர புராணங்களில் உள்ளபடி

"சௌராஷ்ட்ர தேஸே ஜீவம்தி-பத நிர்மாய வைத்விஜ

ஸாலிஹோத்ரான் வயோத்பூதா - விசித்ர படகாரிண:

த்விஜா ஜீவம்தி பஹவ - சதுஸ்ஷஷ்டி குலோத்பவா :

தத்தத் தேஸேஷு விராணாம் - வ்ருத்தயோ விவிதாஸ் ததா :"

என்ற ஸ்லோகங்களின் படி தங்களுக்குண்டான தர்மத்தை அனுசரித்து வரலாம் என சாசனமும் எழுதிக் கொடுத்தார்.

இந்த சாசனத்தை நகரி தினசரி வெங்கடபதய்யா எழுதினார்.

சாட்சிகளாக, வெங்கடனாரணப்பா, பாலய்யா, ஸ்ரீனிவாஸபராஸர பட்டர், ஸ்ரீரங்க நாராயண ஜீயர் க்ரந்தம், ஸ்ரீ வேதவியாஸ பட்டர் க்ரந்தம், வெங்கடகிருஷ்ணாசார்லு

வெங்ககிருஷ்ணா ச்சா ரி க்ரந்தம், சடகோ பர், அனந்தய்யங்கா ர், ஜகந்னா தா சா ர்லு ரா மலிங்க சா ஸ்திரி, கோ பா லகிருஷ்ண சா ஸ்திரி, நா ரஹிமா சா ர்லு தேவரா ஜர், முத்து வெங்கய்யா , தேவோ த்தமய்ய, ப்ரதா னி ரா கவய்ய, திம்மப்பய்ய, அச்சய்ய, வெங்கட்ரா மய்ய, வெங்கட்ரமணய்ய, தீக்ஷப்பய்ய, ஸ்ரீரங்கம் தா தா ச்சா ரியா ர், நல்லா ன் சக்ரவர்த்தி கோ பா லா ச்சா ரியா ர், கோ டீஸ்வரய்ய, நா ரா ணப்பய்ய ஆகியோ ர் சா சனத்தில் கையெழுத்திட்டனர்.

மங்கம்மா ள் அபய பிரதா ன சா ஸனம்

ஸௌரா ஷ்ட்ர பிரா ம்மணர்களுடைய பூர்வீக உற்பத்தியைப் பற்றி வேத சா ஸ்திர புரா ண இதிஹா சங்களில் சொ ல்லப்பட்டிருக்கிறது

பிரம்மா ண்ட புரா ணம் பூர்வோ க்தம், முதல் கா ண்டம், 1,2ல் ஸ்ரீ பரமேஸ்வரர் பிரம்ஹ கபா லத்திலிருந்து ஓர் குழந்தையை சிருஷ்டித்து தா ந்தீக பிரம்மா விடம் கொ டுத்தா ர். அம்முனிவர் அக்குழந்தைக்கு தந்துவந்தன் என்று பெயரிட்டு வளர்த்தா ர். சூரிய பகவா ன் புத்ரி சா யா தேவி குமா ர்தியா ன குஸுமேலிகா என்ற கன்னிகையை தந்துவந்தனர் மணந்தா ர்.

குஹுமேலிகா தெய்வ லோ கத்திலிருந்து கா ர்பலா என்ற பருத்தி விதையும், வெற்றிலைக் கொ டியும், பா ரிஜா த புஷ்பமும் கொ ண்டு வந்து பூலோ கத்தில் பயிர் உண்டா க்கினா ள். இவள் வா ழ்ந்த பிரதேசம் குஷஸ்தலி என்று அழைக்கப்பட்டது குஷஸ்தலி ஸௌரா ஷ்ட்ரா வில் உள்ளது

க்ருதயுகத்தின் அந்திய பா கத்தில் ரா க்ஷசர்களா ல் துன்பப்பட்ட பிரா மணர்கள் பா ஞ்சா ல தேசத்தின் பஞ்சநதிக் கரையில் வசித்தனர். இக்கா லத்தில் வா ழ்க்கை கடினமா னதா க இருந்தது எனவே பரத்வா ஜ முனிவர் இப்பிரா மணர்களுக்கு வஸ்திரம் தயா ரிக்க கற்றுக் கொ டுத்தா ர். அந்த வஸ்திரத்தை திரிமூர்த்திகளும், மஹரிஷிகளும் மற்றும் அனைவரும் அணிந்து கொ ண்டனர்.

பின்னர் மா ந்தா தா சக்ரவர்த்தி அரசா ண்ட கா லத்தில் பிரம்மா வின் வா க்கின்படி கண்வமுனிவர் தன்னுடைய சிஷ்யரா ன கா லவரிஷியை அழைத்து நீ ஸௌரா ஷ்ட்ர தேசத்திற்கு சென்று 18,000 பிரா மணர்களை அழைத்துக் கொ ண்டு வரவேண்டுமென ஆணையிட்டா ர். அம் முனிவர் 18,000 பேரை அழைத்துக் கொ ண்டு கண்வ முனிவர் ஆசிரமம் வந்தா ர். அப்போ து கண்வ முனி பஹுலா ர்க்கம் என்னும் பட்டணத்தை உண்டா க்கி அப் பிரா மணர்களை அதில் வா ஸம் செய்யும் படி செய்தா ர். இதனா ல் கா ண்டலோ லா பிரா மணர்கள் என அவர்களுக்குப் பெயர் வந்தது

பிரா மண உற்பத்தி மா ர்த்தா ண்டா வில் உள்ளபடி, பூர்வத்தில்சந்திரன் தன்னுடைய பா ப பரிஹா ரங்கள் நிவர்த்தி செய்து கொ ள்ள ஸோ மநா த் கோ விலில் யா கம் நடத்தி பின் அந்த ஊரை பிரா மணர்களுக்கு தா னம் செய்து விட்டா ர். அது முதல் ஸௌரா ஷ்ட்ர பிரா மணர்கள் என்ற பெயர் உண்டா கியது

நாகர காண்டவாணையின்படி, சௌராஷ்ட்ர பிராமணர்கள், ஜுநாகாட், ஜுமாங்கருல், புராமந்தர், நவாகட், புஜ், ஹுனா, டெலவாடா, பிரபாஸ பட்டணம், மாஹிவாஸா, கோக, சித்தோட் ஊர்களில் வாசம் செய்து கொண்டிருந்தனர்.

செமத்கார புரத்தில் அத்தேச அரசன் 72 கோத்திரங்களை உடைய சௌராஷ்ட்ர பிராமணர்களை தன்னுடைய தேசத்தில் வசிக்கும்படி கிராமங்களை தானம் செய்தார். அவற்றுள் 8 கோத்திரஸ்தர்கள் சில காரணங்களால் ஹிமாலயம் சென்று விட்டனர். இதன் காரணமாக நாகர பிராமணர்கள் என்ற பெயர் வந்தது

துர்வாஸமுனி சௌராஷ்ட்ர தேசத்தில், தேவஸ்தானம் கட்டுவதற்கு இடம் வேண்டுமெனக் கேட்டார். இதற்கு அங்கிருந்த பிராமணர்கள் பதில் கூறாததால், உங்கள் வம்சம் கீழடைந்து போகட்டும் என சாபமிட்டார்.

இந்திரன் ஏகோதிஷ்டம் என்னும் யாகம் நடத்தி பின்னர், யாக முடிவில் சௌராஷ்டர தேச பிராமணர்களுக்கு தானம் பெற்றுக் கொள்ளும் படி கூறினார். அதை அவர்கள் ஏற்கவில்லை. எனவே இந்திரன் நீங்கள் கீழடைந்து போவீகள் என சாபமிட்டார்.

பரசுராமர் க்ஷத்திரியர்களை ஹம்ஸாரம் செய்து சௌராஷ்ட்ர தேசத்தில் திரிகோத்ரம் என்ற பட்டணத்தில் பிதுர் சிரார்த்தம் நடத்தி வைப்பதற்காக சௌராஷ்ட்ர பிராமணர்களை அழைத்தார். ஒருவரும் வரவில்லை. எனவே பரசுராமர் நீங்கள் தேசப் பிரஷ்டர்களாய் நாடிழந்து போவீகள் என சாபமிட்டார்.

மேற்கூறிய இவ்வாதாரங்களின்படி மதுரை ராணிமங்கம்மாள் புராணங்களில் கூட சௌராஷ்ட்ரர்களைப் பற்றி குறிப்பு வருவதால், நீங்கள் உங்கள் விருப்பப்படி வாழலாம் எனக் கூறி கைது செய்தவர்களையும் விடுதலை செய்து உத்தரவிட்டார். அனைத்து சௌராஷ்ட்ர மக்களுக்கும் பாதுகாப்பளிக்க வழிவகை செய்தார்.

சிந்து

வேதகாலம் முதல் புகழ் பெற்றது சௌராஷ்ட்ரத்தின்
சிந்து சௌராஷ்ட்ர தேசத்தில் தபஸ்விகளுக்கு தவம்
செய்யும் சாலையாக சிந்து நதிக் கரை இருந்தது
சிந்து நதிக்கரையில்தான் ரிக், யஜுர், சாம, அதர்வண
வேதங்கள் பிறந்தது

சிந்து நதிப் பகுதி இராமாயண காலத்தில் ராமரின் ஆட்சியில் இருந்தது பின்னர், அவர் தன் மகன் லவனுக்கு கொடுத்துவிட்டார். பின் மகாபாரத காலத்தில்தான் சிந்து பிரதேச அரசன் தனியாக உருவாக்கினார். சிந்து அரசன் ஜெயத்ரதன் துரியோதனனுக்கு ஆதரவாகப் போரிட்டான்.

சிந்து பகுதியில் உள்ளவர்கள் சௌராஷ்ட்ரத்தின் தயாரிப்புகளை உலகெங்கிலும் விற்பனை செய்யும் வர்த்தகர்களாகத் திகழ்ந்தார்கள். முதன் முதலில் சிந்துபதி என்பவனே

சிந்துவின் அரசனாக அறியப்படுகிறான். அவரே பின்னர் கங்காபதி என்ற அரசனுக்கு ஆட்சி உரிமை கொடுத்ததாக குறிப்புகள் உள்ளது

ஆற்றங்கரை நாகரிகங்கள் தோன்றியதற்கு அடையாளங்களே மேற்கண்ட பெயர்கள்.

சிந்துவின் வளமை மற்ற எல்லா பகுதி மக்களையும் ஈர்த்தது பின்னர் முஸ்லீம் மதம் தலையெடுத்த போது ஜொராஷ்ட்ர, யூத மக்கள் முஸ்லீம்களாக மதம் மாற்றம் செய்யப்பட்டனர். இஸ்லாமிய மதம், பிற மதங்களை வெறுத்ததால், மதத்தின் பெயரால் படையெடுப்புகள் நிகழ்ந்தன. அவ்வாறான படையெடுப்புகளில் மிகவும் பாதிக்கப்பட்டது சிந்து. சிந்துவில் ஏராளமானோர் முஸ்லீமாக மதமாற்றம் செய்யப்பட்டனர்.

அவர்கள் அரசுக்கு அடங்கி இஸ்லாமை ஏற்றுக் கொண்டதால், தக்க சமயத்தில் இந்து மதம் திரும்பினர். ஆயினும் இஸ்லாமிய ஆட்சியே நீடித்ததில், சிக்கல் எழுந்தது எனவே சூஃபி என்ற புதிய முஸ்லீம் பிரிவு சிந்துவில் தோன்றிது

சூஃபி பிரிவானது பார்வைக்கு முஸ்லீம்களைப் போல தோற்றமளித்தாலும், கொள்கைகள் அனைத்தும் இந்து மதத்தைச் சேர்ந்தவையே. இவ்வாறு இஸ்லாமின் போர்வையில் இந்து மதம் ஒருவாறு பாதுகாக்கப்பட்டது

பின்னர் பக்தி இயக்கம் தோன்றியது. மீராபாய் மிகச் சிறந்த பக்தி கொண்டவர். இவரது தாக்கம் சிந்துவில் ஏற்பட்டது இதனால் மீண்டும் இந்து மதம் புத்துயிர் பெற்றது ஜோகியர் என்ற யோகிகள் இந்து மதம் புத்துயிர் பெற பணியாற்றினர்.

சிந்து பிரதேச ஜுலேலால் என்ற அரசரின் வரலாறு மகத்தானது சிந்து மக்கள் தங்களை பிற மதத்தினர் வென்றதால், சிந்துவின் ஆற்றில் வருண யாகம் செய்தனர். யாகத்தின் முடிவில் ஜுலேலால் பிறந்தார். அவர் பிறந்தவுடன் பிற மத அரசர்கள் அழிக்கப்பட்டனர். சில காலம் அமைதியான வாழ்க்கை தொடர்ந்தது

எனினும் நியாய தர்மம், அகிம்சை பார்க்கும் இந்துக்களுக்கு துரதிர்ஷ்ட்டமானது நியாய தர்மமற்ற, வெறிகொண்ட முஸ்லீம்கள் வழியாக தொடர்ந்தது எனவே சிந்துவில் பாதிக்கும் மேற்பட்டோர் முஸ்லீம்களாக வாழத் தலைப்பட்டனர்.

சுதந்திர போராட்ட காலத்தில் சிந்துவாழ் இந்துக்கள் பாரதத்துடன் சேர முடிவெடுத்தனர். ஆனால் சிந்து பகுதி முஸ்லீம்களோ, பாகிஸ்தானுடன் சேர்வது பாகிஸ்தானத்திற்கு தலைநகராக சிந்துவை ஆக்குவது என காட்டுமிராண்டித்தனம் செய்ய ஆரம்பித்தனர்.

இதனால் பாகிஸ்தான் பிரிவினையில் சிந்து பாகிஸ்தானுக்குப் போய் சேர்ந்தது அங்கிருந்த இந்துக்கள் நிலைமை மோசமானது அப்போது நடந்த இந்து முஸ்லீம் கலவரத்தில் பல இந்துக்கள்அகதிகளாக பாரதம் வந்தனர். அவர்கள் சிந்தி-இந்துக்கள் என அறியப்படுகின்றனர்.

சௌராஷ்ட்ரத்தின் பல பகுதிகள் செல்வச் செழிப்பு காரணமாக அராபியர், கிரேக்கர் போன்றவர்களின் தாக்குதலுக்கு உள்ளானது இத்தாக்குதலுக்கு முக்கிய காரணம், அவர்கள்

முஸ்லீம்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் மதமாற்றம் செய்யப்பட்டு தாம் பிறந்த கலாச்சாரத்திலிருந்து துண்டிக்கப்பட்டதுதான். அவர்களின் பூர்வீகம் சௌராஷ்ட்ரமாக இருந்த போதிலும், தமது இந்து கலாசாரத்துடன் மதமாற்றத்தால் தொடர்பிழந்தனர். எனவே அவர்களின் வருங்கால சந்ததியினர் தமது வம்சாவளியை மறந்து பாரதத்தின் இந்துக்கள் மீதே தாக்குதல் நடத்தத் துவங்கினர்.

இத்தாக்குதல்களும் இஸ்லாம் பிறந்தபின்புதான் துவங்கியது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இஸ்லாம் வருமுன் இதே அராபியர்கள் வியாபாரத்திற்காக வந்து சென்று கொண்டிருந்தனர். சுற்றுலாவாகவும், பாரத பல்கலைக் கழகங்களிலும் படிக்கவும் வந்து சென்று கொண்டுதான் இருந்தனர். அப்போதெல்லாம் அவர்கள் பாரத நாட்டை கொள்ளை அடிக்க வேண்டும், தாக்குதல் நடத்த வேண்டும் என நினைக்கவில்லை.

மதமாற்றம் என்பது உலகை மிகப் பெரிய பிரிவாகப் பிரித்தது. பிற மத மக்களை வெறுக்கும்படிச் செய்தது. பிற மத மக்களை வெறுத்து தன் மதம் வளர கிறிஸ்துவும், முகமதுவும் முயற்சிகள் மேற்கொண்டனர். அப்படி இந்து மதத்தில் இல்லாதது எது இஸ்லாத்திலும், கிறிஸ்தவத்திலும் இருக்கிறது? எதுவுமில்லை.

பார்க்கப் போனால் இந்து மதத்தில் உள்ள கருத்துக்களில் சிறிய பகுதிகூட மற்ற மதங்களில் இல்லை என்பது ஒரு கருதுகோள். இவ்வாறான கருதுகோள்கள் அக்கால மக்காவில் வாழ்ந்த இந்துக்கள் முகமது நபியிடம் தந்தனர். கருத்தால் இந்து மதத்தை வெல்ல முடியாது என உணர்ந்து அரசியல் சார்ந்து ஆட்சியைச் சார்ந்து அவர்கள் இஸ்லாமை வளர்க்கத் தலைப்பட்டனர்.

## சௌராஷ்ட்ர நாடோடிக் கதைகள்

குஜராத்தில் உள்ள கட்ச் மாவட்டதில் இருக்கும் சிறு ஊர் அஞ்ஜார். இவ்வூரிலுள்ள ஒரு நினைவாலயம் ஒரு ராணியிடம், கொள்ளையன் மனந்திருந்தி துறவியானதை நினைவுபடுத்துகிறது

1957லிருந்து 2001 வரை கட்ச் பகுதியில் நடந்த பூகம்பங்கள் இந்த நினைவாலயத்தின் கூரையை பாதித்ததே தவிர இதற்குள் இருக்கும் சமாதியை பாதிக்கவில்லை!

2001 பூகம்பத்தின் போது இந்த நினைவாயலத்தில் உள்ள யாரும் சிறிதளவும் காயமடையவில்லை! ஆனால் நினைவாயலத்தை சுற்றி உள்ள இடங்களில் பலர் பூகம்பத்தால் இறந்தனர். இந்த இரு சமாதிகளுக்கிடையே சில மீட்டர் இடைவெளி உள்ளது. ஆனால் பூகம்பம் ஏற்படும்போது சமாதிகள் இரண்டும் ஒன்றை ஒன்று தொட்டுப் பிரிவதுடன், நாளுக்கு நாள் இடைவெளி குறைகிறது. இந்த மண்ணிலிருந்து சாபம் விலகும்போது இரு சமாதிகளும் ஒன்று சேரும் என மக்கள் நம்புகிறார்கள்.

இது ஒரு நாட்டுப்புறக் கதையாக இருந்தாலும், 1526ம் ஆண்டில் நடந்த அசல் கதையாக வரலாற்றில் பதிவாகி இருக்கிறது என்கிறார் புஜ்-ல் இருக்கும் லாலன் கல்லூரியின் விரிவுரையாளர் தர்ஷனா டோலாக்கியா. சௌராஷ்ட்ர மன்னர் இருந்தார். அவர் யார் என்ன கேட்டாலும் கொடுக்கத் தயங்காத தாராள மனம் கொண்டவர். அவரது மனைவி டோரல். அவரது பட்டத்து குதிரையின் பெயரும் டோரல்தான்.

அதே ஊரில் ரஜபுத்ர இனத்தை சேர்ந்த ஜேசல் என்ற திருடன் வாழ்ந்து வந்தான். திருடனது தம்பி மணைவி ஜேசலைப் பார்த்து டோரலை திருடி வர கையாலாகுமா உனக்கு? என்று கேட்டாள். தன்மானத்தை தூண்டி விட்டதால், ஜேசல் என்ற திருடன் அரண்மணைக்கு திருடப் புகுந்தான். குதிரையை திருடும்பொழுதுமாட்டிக் கொண்டான். மன்னர் ஜேசலைப் பார்த்து எதற்காக வந்தாய் என கேட்டார்? அவன் டோரலை திருட வந்தேன் என்றார். மன்னரும் மணைவி டோரலை கூப்பிட்டு திருடனுடன் போகும்படி கூறினார். கூடவே பட்டத்து குதிரை டோரல், டோரல் என்ற பெயர் கொண்ட பட்டத்து வாளையும் கொடுத்து அனுப்பி வைத்தார். மன்னர் கூறியதற்கு அப்படியே தலை வணங்கி ராணிடோரல், திருடனுடன் சென்றார்.

செல்லும் வழியில் திருடனுக்கு மனம் உறுத்தத் துவங்கியது தன் கணவர் “செல்” என்று கூறியதும் மறுமொழி எதுவும் கூறாமல் புறப்பட்டாளே ராணி என்று ஆச்சரியம் கலந்த மரியாதையை அவன் அடைந்தான். இதன் பிறகு ராணி ஆசிரமம் அமைத்து ஜேசலுக்கு உபதேசம் செய்தாள். பின்னர் இருவரும் துறவி வாழ்க்கை நடத்தினர். பலகாலம் கழிந்து திருடன் ஜேசல் சமாதி அடைந்தான்.

சுற்றுப் பயணத்திலிருந்த ராணி டோரலும் திருடன் ஜேசல் சமாதி அடைந்ததை உணர்ந்து அவரது சமாதிக்குப் பக்கத்திலேயே தானும் சமாதி அடைந்தாள்.

டோரலின் பக்திக் கவிதைகள் அங்கு பிரபலமாக உள்ளது அவளுடன் இருந்த ஜேசலும் முற்றிலுமாக மாறி அப்பகுதியில் பக்தியைப் பரப்பியதாக சொல்லப்படுகிறது அங்கு கூட்டம் அலைமோதுகிறது அங்கு வரும் யாத்ரீகர்கள், டோரல்-ஜேசல் சமாதியின் அற்புதங்கள் பலவற்றை கூறுகிறார்கள்.

பூகம்பத்தினால் விழுந்த சமாதியின் கூரை கட்டப்படாமல் உள்ளது அஸ்பெடாஸ் கூரை போடப்பட்டுள்ளது அங்கிருக்கும் மக்கள் இந்த கோவில் கவனிப்பாரின்றி கிடந்தால் சாமிக்கு கோபம் வந்து மறுபடி பூகம்பம் உண்டாகலாம் என கூறுகிறார்கள்.

## சௌராஷ்ட்ர பழமொழிகள்

சௌராஷ்ட்ர மொழியில் வழங்கும் பழ மொழிகளை அறிவதால், சமுதாய நிலையும், பழக்க வழக்கங்களும் அறியப்படுகிறது மேலும் தமிழுக்கு புதிதான சில பழமொழிகள் இதில் உள்ளதால், படிப்போர்க்கு ஆர்வத்தையும் தூண்டும் வகையில் உள்ளது சௌராஷ்ட்ர மொழியில் பழமொழியும், கீழே அதன் பொருளும் தரப்பட்டுள்ளது

1) ஹண்டீ3ம் ரே2த் ஹப்காம் அவய்

சட்டியிலிருந்தால் அகப்பையில் வரும் என்ற தமிழ் பழமொழிக்கு ஈடான பொருள் தருகிறது இப் பழமொழி

2) ரஜா கொ4ம்மா ஹூன்ன பா4துக் அம் கொ4ம்மா சிள்ளபாத் அமுர்த்து

ரா ஜா வீட்டு விருந்தை விட நம் வீட்டில் கிடைக்கும் பழைய சோறே அமிர்தம். அதாவது ராஜாவின் விருந்தை சாப்பிட காத்திருக்க வேண்டும். நம் வீட்டில் அவ்வாறு இல்லையே.

3) தெக₃ தெக₃ ஆங்கு₃ பா₄ர் தென்தென துக்குனொ

அவரவர் சுமையை அவரவரே சுமக்க வேண்டும். அவரவர் வாழ்க்கையை வாழ அவரவரே வழி செய்து கொள்ள வேண்டும்.

4) தே₃ஞ்சுக் ஹன்னவ் நீ மெனத் தெவ்காஸ் கெங்கே?

திருமணத்திற்கு முன் 49 ரூபாய் பெண் வீட்டாருக்குத் தருவது சம்பிரதாயம். நகை நட்டு போடாவிட்டாலும் அதைக் கூட தர முடியாதவன் திருமணத்தை எப்படி நடத்த முடியும் என்பது இதன் பொருள்.

5) வத்த கெரி ப₂டுகொ₃ ஜா₄க், சுட்டு பிரி விக்கி தா₃க்

பேச்சுத் திறமையால் துணியில் உள்ள சிறிய கிழிசல் தெரியாதவாறு சமாளிக்க வேண்டும். ஊரெங்கும் சுற்றி விற்பனை செய்ய வேண்டும் என்பது இதன் பொருள்.

6) நி₂னாவ் வத்த கேர்; நீ₂த்தெ வத்த கெரூங்கொ₃.

சுமுகமாகவும், திறமையாகவும் பேசு. ஆனால் இல்லாததைப் பேசி பிரச்சனையில் அகப்பட்டுக் கொள்ளாதே.

7) ஹொள்டோர் பி₃சி₂ரெ ஜெமோனுக்₃ ஒத்தட்டிகி கா₂ரிஸ் ஓரி

'ஓரி' என்றால் எச்சில் கையால் ஈ ஓட்டாதவன். திண்ணையில் விருந்தாளியை வைத்துக் கொண்டு விருந்தாளிக்குத் தெரியாமல் வீட்டினுள் சாப்பிடுகிறான் என்பது இதன் பொருள். விருந்தோம்பலை உணர்த்துகிறது

8) சகடா₃ம் கொ₄டொ₃ சொ₂ம்மர் பஸ்கட்₃ ஜாஹொனா.

சகடம் = வண்டி வண்டியில் உள்ள குதிரைகள் முன் பின்னாக ஓடக் கூடாது என்பது பொருள். குடும்ப வாழ்க்கையில் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒரே மாதியாக இருக்க வேண்டும், பாடுபட வேண்டும் என உணர்த்துகிறது

9) மொரே விஞ்சு மிட்டுனா!

இறந்த தேள் கடிக்காது அதே போல் கையாலாகாதவனைப் பார்த்து அவனால் எதுவும் முடியாது என்ற பொருளில் அமைந்துள்ளது

10) மொள்டாம் தந்து₃ பொ₄ன்னாக்₃ அவேன்

மூட்டையில் உள்ள அரிசி பானைக்கு வரவில்லை. அதாவது இடைத் தரகர்கள், வேலையாட்கள், மற்றும் பலரால் காரியத்தின் பலன் மக்களை அடைவது தடுக்கப்படுகிறது என்பதை புலப்படுத்துகிறது. மேலும் பல பொருளிலும் இப்பழமொழி உபயோகப்படுத்தப் படுகிறது

11) க₃ங்கா₃ம் பு₃டே₃த்துனுக் கெருங்குனா பாப்

கங்கையில் முழுகினாலும் கரையாது பாவம் என்பது பொருள். அதாவது அவ்வளவு பாவங்களைச் செய்தவன் என்று ஒருவனை குறிக்க இது உதவுகிறது

12) சுஉனொ, சுஉனா க்3 மரி கா உனா

நாய், தன் இனமான மற்றொரு நாயை கடித்துத் தின்னாது அதே போல் கேவலமான ஆளாக இருந்தாலும், அவன் தன்னைச் சார்ந்தவர்களை அழிக்க மாட்டான். ஏனெனில் அவன் அவர்களைச் சார்ந்தே இருக்கிறான் என்பது பொருள். தற்கால அரசியலுக்கு இது மிகவும் பொருந்தும்.

13) வராம் அய்கே3 உபதே3ஸ் வராமூசொ உட்டிகீஸ்

காற்று வாக்கில் கேட்ட உபதேசம், காற்றிலேயே போய்விட்டது என்பது இதன் பொருள். இந்த காதில் வாங்கி அந்த காதில் விட்டான் என்று கூறுவது போல.

14) கான் தெ3னாருக்3 கெ3த்தி க2தொ சங்கி

காதைக் கொடுத்து கேட்பவனுக்கு மட்டும் கதை சொல் என்பது இதன் பொருள். அதாவது ஆலோசனை கேட்பவனுக்கு மட்டுமே கூற வேண்டும். தானாக முன்வந்து ஆலோசனை சொல்லப்படும் இடங்களில் பெரும்பாலும் அந்த ஆலோசனை அலட்சியப்படுத்தப் படுவதைக் காணலாம்.

15) பாஞ்சி தொ3ளொ கெரெ பாஞ்சி கேட்3 சா2ய்

ஐந்து கண்ணுடையவன் ஐந்து பக்கம் பார்ப்பான் என்பது இதன் பொருள். அதாவது எச்சரிக்கையாக இருப்பவன், தன் பின், முன் நடப்பவைகளை உடனே அறிந்து அதற்கு தக்க நடவடிக்கை எடுத்து தனக்கு எதிரானவைகளைத் தடுப்பவன் என்று பொருள்.

16) சொ2ன்னா தா3த் வத்த, சொ2ர்கு3ம் மெள்ள செ2ரஸ்

தங்கப் பல் கட்டினவனின் வார்த்தைகள், சொர்க்கத்திலும் செல்லுபடியாகும் என்பது இதன் பொருள். அதாவது செல்வமுடையவனின் வார்த்தைகளுக்கே எங்கும் மதிப்பு இருக்கிறது என்று கூறவருகிறது

17) தெக3 தெக3 கே4ருக்3 தென தென ரஜொ

அவனவன் வீட்டிற்கு அவனவன் ராஜா. அதாவது ஒவ்வொருவருக்கும் அவரவர் இடத்தில் ஒரு பலம், அதிகாரம் இருக்குமல்லவா? எனவே எவ்வளவு சிறியவனாயினும், அவனுக்கெ அதிகாரம் இருக்கவே செய்கிறது

18) சார் கேட்3 பு4ய்க் சா2ச2ன் கெத்3தி3க்3 வெகு3ளொ, வெகு3ளொ

நான்கு பக்கங்களிலும் நிலமே இருக்கிறது ஆனால் ஆட்சி மட்டும் வேறு வேறாக இருக்கிறது என்பது இதன் பொருள். அதாவது மனிதன் சமுதாய நலத்திற்காகவே நிலத்தை பங்கிட்டு ஆள்கிறான் என்பது இதன் பொருள்.

19) சொட்3டா3க் சொக்கட்3 வத்த தெ4ர்ன

கெட்டவனுக்கு நல்ல வா ர்த்தைகள் பிடிக்கா து

20) பா ட் போ 4ர் க2ஜ்ஜு கெரி கா 3ம் கெரா னுக் வெய்த்3து் கெரேஸ்மெனா

முதுகு முழுவதும் சொ றி சிரங்கு உடையவன், ஊருக்கெல்லா ம் வைத்தியம் பா ர்த்தா னா ம் என்பது இதன் பொ ருள். தன் வியா தியை சரி செய்ய முடியா த வியா திக்கா ரன் மற்றவருக்கு வைத்தியம் பா ர்த்த கதையா க.

21) தெக3 தெக3 கா 3ண் கா 2ல் பனிஅவேத் தென தென ஹு டோ ய்

அவனவன் உட்கா ர்ந்த இடத்தில் தண்ணீ வந்தா ல் அவனவன் எழுந்திருந்துக் கொ ள்வா ன். அதா வது அவனவனுக்குப் பிரச்சனை வந்தா ல்தா ல் அவனவன் தா னா க எழுந்திருந்துக் கொ ள்வா ன். நா ம் பிறருக்கு வந்த பிரச்சனை உனக்கும் வருமே என்று என்னதா ன் சங்கு ஊதினா லும் கேட்கமா ட்டதா தவர்களைப் பா ர்த்து இப்பழமொ ழி கூறப்படுகிறது

22) ரவா லா ப் ரவ கெ4டீ3ம் க3ம்டா 3ய்

குறைந்த லா பமா னது குறைந்த கா லப் பொ ழுதில் கரை ந்துவிடும். இறுதியில் பற்றா க்குறையே இருக்கும் என்பது இதன் பொ ருள்.

23) சொ ட்3டா 3 தோ ண் சொ ட்3டா 3க் களா ய்

திருடனின் முகத்தை திருடன் அறிவா ன் என்பது இதன் பொ ருள். அதா வது இனம் இனத்தோ டு சேரும் என்ற தமிழ்ப் பழமொ ழிக் நிகர்

24) செ2ந்தூ 3ர் அலா க் மெஜ்வி முஸ்னா

கடலின் அலைகளை எண்ணிமுடியா து என்பது இதன் பொ ருள். கடினமா ன கா ரியத்தை இவ்வா று கூறுவது வழக்கம்.

25) அகா 3சு2ர் து2கே3த் தோ ணு பொ ட3ய்

ஆகா யத்தை நோ க்கி துப்பினா ல் துப்பினவன் முகத்திலேயே விழும். என்பது இதன் பொ ருள். தேவையில்லா மல் உயர்ந்தவர்களை இகழக்கூடா து என்பதும் இதன் பொ ருள்.

26) ஜித்ரோ ப், ஜிவி சி2க்கிலே.

வா ழ்க்கையை வா ழ்ந்து கற்றுக் கொ ள்.

27) கோ 3 அவே சொ 2ன்னா க் ஜோ க் சொ வ்ங்கொ , ப4ந்திலே பை3லுக் உன்ன உபீ3ர் சொ 2வ்ங்கொ 3

தா னமா கக் கிடைத்த தங்கத்தையும், கட்டிய மனைவியிலும் குறைகள் இருந்தா ல் பொ ருட்படுத்தக் கூடா து என்பது இதன் பொ ருள்.

28) சென்ன கீ2 ஹா த் து4வே சொ 2க3ன்

பொ ட்டுக்கடலையை தின்று கையைக் கழுவுவது போ ல், தன் பொ றுப்பை தட்டிக் கழித்தலைக் குறிக்கிறது

29) நெளிலம்ப2 வின்திகி தெ3ண்ட3 லம்ப3 கா2த்தெ சொ2க3ன்

தறிநாடா நீளத்திற்கு துணிய நெய்துவிட்டு, கழுத்தில் உள்ள தண்டம் என்ற முத்துமாலையின் நீளத்திற்கு சாப்பிடுவது அதாவது குறைந்தஉழைப்பு, அதிக செலவு என்ற வாழ்க்கையை வாழ்பவனை குறிக்க இது பயன்படுகிறது

30) திகுடொ கா மெனேத் புடுகொ மெஜ்ஹுங்கொ

தோசையைச் சாப்பிடச் சொன்னால், அதில் உள்ள ஓட்டைகளை எண்ணிக் கொண்டிருந்தானாம் ஒருவன். அதாவது செய்ய வேண்டியதைச் செய்யாமல், தேவையில்லாத செயல்களைச் செய்வதை இது நையாண்டி செய்கிறது

சமஸ்கிருத சௌராஷ்ட்ர வார்த்தை ஒப்பீடு

சௌராஷ்ட்ர மொழி சமஸ்கிருதத்தின் ஒரு வட்டார வழக்கே என்று பார்த்தோமல்லவா ? சமஸ்கிருத மொழி வார்த்தைகளிலிருந்து சௌராஷ்ட்ர மொழி வார்த்தைகள் சற்றே திரிந்து வந்திருக்கும். அவ்வாறான சில உதாரணங்களைப் பார்த்தால் ஐயந்திரிபற சௌராஷ்ட்ரமானது சமஸ்கிருத மொழியின் பேச்சு வழக்கே என்று புலனாகும்.

| சமஸ்கிருதம் | சௌராஷ்ட்ரா | தமிழ் |
|---|---|---|
| ஹஸ்தம் | ஹாத் | கை |
| சூ2ர்ய | சூ2ரீத் | சூரியன் |
| சந்த்3ர | சாந்து3 | சந்திரன் |
| தி3வா | தி3வொ | விளக்கு |
| பிதா | பா3ப் | தந்தை |
| மாதா | மாய் | தாய் |
| கீ3தம் | கீ3த் | பாட்டு |
| நியாய் | நியாவ் | நியாயம் |
| டபாஸ் | படாஸ் | பட்டாசு |
| அக்ஷர் | அச்சேர் | எழுத்து |
| பாத்3 | பாய் | கால் |
| ருப்யம் | ருபா3ய் | ரூபாய் |
| சுல்ல: | சுல்லொ | அடுப்பு |
| அங்கு3லீ | அங்கி3ளி | விரல் |
| கர்ணம் | கான் | காது |
| சு2னக: | சு2னொ | நாய் |
| மயூர: | மோர் | மயில் |
| கவாக்ஷ: | கவாட்3 | கதவு |
| வ்யஜனம் | விஜனொ | விசிறி |

| | | |
|---|---|---|
| ப4வா ன் | ப4வா | ஐயா |
| ப4வதீ | பை3 | அம்மா |
| நா ஸ்தி | நா 2 | இல்லை |
| த3த் | தே3 | கொ டு |
| கிம்? | கா ய்? | என்ன? |
| குத்ர? | கோ ட்? | எங்கே? |
| கதி? | கித்கொ | எத்தனை |
| கதா ? | கொ 2ப்ப? | எப்பொ ழுது? |
| கதம்? | கிசொ 2? | எப்படி? |
| மா லா | மா லெ | மா லை |
| ஷா டிகா | ச2வ்லொ | புடவை |
| பேடிகா | பெடி | பெட்டி |
| சா ல்லணீ | ஜெல்லேட்3 | சல்லடை |
| விமா னம் | விமா ன் | விமா னம் |
| து3க்த3ம் | தூ 3த் | பா ல் |
| க்ருஹம் | கே4ர் | வீடு |
| புஷ்பம் | பூ2ல் | பூ |
| பர்ணம் | பா ன் | இலை |
| சத்ரம் | ச2தி | குடை |
| மக்ஷிா | ம2கி | ஈ |
| புச்சம் | புசிடி3 | வா ல் |
| தா த | த3தா 3 | அப்பா |
| அம்பா 3 | அம்பா 3 | அம்மா |
| ஜேமா தா | ஜெமை | மா ப்பிள்ளை |
| நேநா ந்தா 3 | நெநேந்தி3 | கணவரின் சகோ தரி |
| ப4கி3ணீ | பெ4ய்ன் | சகோ தரி |

மேலும் ஆயிக்கணக்கா ன வா ர்த்தைகள் இவ்வா றே சமஸ்கிருத வேர்ச் சொ ல்லில் இருந்து சற்றே திரிந்து விகா ரப்பட்டு சௌரா ஷ்ட்ர மொ ழியில் கையா ளப்படுகிறது மேலும் விபரங்கள் ஆசிரியரின் "சௌரா ஷ்ட்ர-சமஸ்கிருத பத ஐக்யம்" என்ற புத்தகத்தில் கா ணலா ம்.



புதையுண்ட நாகரீகம்

சௌராஷ்ட்ரத்தின் கடலுக்கடியில் ஒரு நகரம் புதையுண்டதை நாம் முன்பே பார்த்தோம். அது பற்றி இன்னும் விரிவாகப் பார்ப்போம்.

சென்னையிலுள்ள இன்ஸ்டிடியூட் ஆப் ஓசன் டெக்னாலஜியின் கடல் ஆய்வாளர்கள், குஜராத் சௌராஷ்ட்ர கடற்கரையிலிருந்து 30 கி.மீ. தொலைவிலிருக்கும் காம்பே வளைகுடாவில் கடல் மாசுபாட்டை அளக்க சோனார் படம் எடுத்தனர். அப்போது கடலுக்கடியில் 40 மீட்டர் ஆழத்தில் புதைந்து போன ஒரு மிகப் பழமையான நகரத்தைக் கண்டுபிடித்தார்கள். பின்னர் அவ்விடத்திலிருந்து 2000த்திற்கும் மேற்பட்ட பொருட்களை சேகரித்தார்கள். இதை வைத்து ஆராய்ந்து பார்த்ததில் நதிக் கரையில் 9 கிமீ. நீளத்திற்கு நீண்டு கிடந்த மிகப் புராதனமான நாகரிகம் என்பதை கண்டார்கள். கற்களையும், சிமெண்டையும் வைத்து ஒரு அணைகட்டு கூட அந்த இடத்தில் இருந்திருக்கிறது. இந்த மூழ்கிப் போன நகரத்திற்கும், சிந்து சமவெளி நாகரிகத்திற்கும் பலவிதங்களில் ஒன்றுமை இருக்கிறது.

நீச்சல் குளம் ஒன்று, படிகளுடன் கூடிய கட்டிட அமைப்புடன் கண்டறியப்பட்டது. இது மொகஞ்சதாரோவில் இருக்கும் குளத்துடன் ஒத்து இருக்கிறது. மேலும் 200 மீட்டர் நீளமும், 45மீட்டர் அகலமும் கொண்ட செவ்வக மேடை கண்டறியப்பட்டுள்ளது. இது ஹரப்பாவில் கண்டறியப்பட்ட மேடைகளோடு ஒத்துப் போகிறது இந்த மேடை 183 மீட்டர் நீளத்தில் களிமண்ணாலான பெரிய தானியக் குதிர் ஒன்றும் தெரிகிறது.



இந்த மிகப் பெரிய கட்டிட அமைப்புகளுக்கு அருகிலேயே கட்டிடங்களின் அஸ்திவாரம் போன்ற சதுர வடிவ அமைப்புகள் தென்படுகின்றன. கழிவு நீரகற்றும் வசதிகளும், களிமண் ரோடுகளும் இருந்ததற்கான தடயங்களும் தெரிகின்றன. இந்த இடங்களிலிருந்து பளபளப்பான கற்கருவிகள், அணிகலன்கள், அணிகலன்களில் பதிக்கும் கற்கள், தந்தங்கள், மனித முதுகெலும்புத் துண்டு, நாடி எலும்பு, ஒரு பல் போன்றவையும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இங்கிருந்து கண்டெடுக்கப்பட்ட உப்புநீரில் ஊறி காலப்போக்கில் கல்லாகிவிட்ட மரத்துண்டு ஒன்று கி.மு 5500 வருடத்தியது என்றும், கி.மு 7500 வருடத்தியது என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் எது உண்மையாக இருந்தாலும் அதற்கான பொருள் ஆச்சரியத்தைத் தரும்.

ஏனெனில் கி.மு 4000 - 3500 வாக்கில் மெசபடோமியாவின் கரைகளில் இருந்த நகரக் குடியிருப்புகள்தான் உலகிலேயே மிகப் பழமையானவை என்று இதுவரை நம்பப்பட்டது இதை அடுத்து உருவானதாக கருதப்படுவது எகிப்தின் நைல் நதிக் கரையில் தோன்றிய பாரோ கலாச்சாரம். இதற்கு 1000 வருடங்களுக்குப் பிறகு அதாவது கி.மு 2500 வாக்கில் சிந்து சமவெளி நாகரீகம் தோன்றியது இவை எல்லாவற்றையும் விட சௌராஷ்ட்ரத்தில் புதையுண்ட இந்த நகரமானது பழமையானது என்று கண்டறியப்பட்டுள்ளது ஏனெனில் இதுவரை பழமையானதாகக் கருதப்பட்ட மெசபடோமியாவை விட 2000 வருடங்கள் பழமையான நகரம் இது

கி.மு 7500 க்கும், கி.மு 5000க்கும் இடைப்பட்ட காலத்தில்(சௌராஷ்ட்ர காம்பே நாகரீகம் இருந்ததாக சொல்லப்படும் காலத்தில்) உலக சமூகங்களில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டதாக இதுவரை நமக்கு வரலாறு சொல்லி வந்திருக்கிறது அகழ்வாராய்சியாளர்களால் "புதிய கற்காலம்" என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது இக்கால கட்டத்தில்தான் வேட்டையாடும் வாழ்க்கை முறையை மட்டும் நம்பி இருப்பதை விட்டு விவசாயத்திற்கு மாறினர். ஏர்க்கலப்பை கண்டுபிடிக்கப்பட்டு விவசாயத்தில் மிகப் பெரிய உற்பத்திகள் ஏற்பட்டது இதை ஆதாரமாகக் கொண்டு மிகப் பெரிய குடியேற்றங்கள் உருவாகி அதுவே நாகரீகங்கள் பிறக்க வழிவகுத்தது

சின்ன சின்ன கண்டுபிடிப்புகள் மூலம் மனித குலமே மாறிக் கொண்டிருந்த இந்த காலகட்டத்தில் தான் பானை செய்தல், பளபளப்பான ஆயுதங்களை பயன்படுத்துதல், விலங்குகளைப் பழக்குதல் போன்றவை அறிமுகமாயின. சக்கரங்கள் கண்டு பிடிக்கப்பட்டது பல கண்டுபிடிப்புகளுக்கு வழி வகுத்தது இந்த கண்டுபிடிப்பு எல்லாமே எகிப்தில் ஆரம்பித்து லெவந்த் வழியாக மெசபடோமியாவை உள்ளடக்கிய ஈரானுக்கும், தெற்க காஸ்பியனுக்கும் இடைப்பகுதியில்தான்.

பாலஸ்தீனத்திலிருக்கும் ஜெரிக்கோவில் கி.மு 7000 ஆண்டைச் சேர்ந்த நான்கு ஹெக்டேர் பரப்பளவுள்ள ஒரு குடியிருப்பு இருந்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. கி.மு 6000 வாக்கில் கற்களால் ஆன ஆயுதங்களுக்குப் பதிலாக உலோகங்களைப் பயன்படுத்தும் வழக்கம் நடை முறைக்கு வந்தது

பாரத நாட்டில் மிகப் பெரிய விவசாயக் குடியிருப்பு கி.மு 7500 வாக்கில் இருந்ததற்கான தடயங்கள் தற்போது பாகிஸ்தானிலுள்ள மெஹர்கர்-ல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது ஆனால் நாம் மேலே பார்த்த சௌராஷ்ட்ர காம்பே போன்ற ஒரு பெரிய நகரத்தின் வளர்ச்சிக்கு உதவும் விதமாக அதற்கு இணையாக அதே சௌராஷ்ட்ரப் பகுதியில் இது போன்ற நகரம் எதுவும் இல்லை என்பதை சுட்டிக் காட்டுகிறார்

அகழ்வாராய்சி நிபுணர் எஸ்.ஆர்.ராவ். வரலாற்குக்கு முந்தைய குடியிருப்பாக இரு இருக்கலாம் என்கிறார்.

அப்படிப் பார்த்தால் நமக்குத் தெரிந்த வரையில் பாரதத்தில் காம்பேதான் மிகப் பழமையான குடியிருப்பு. இதை ஆராய்ந்தால் பாரத நாட்டு வரலாற்றின் அடிப்படையே

மாறும் என்கிறார்கள் சில நிபுணர்கள். நாகரீகங்கள் மேற்காசியாவிலிருந்து சிந்து சமவெளிக்கும் அங்கிருந்து இந்தியாவின் கீழ்பகுதிக்கும் பரவியது என்று நாம் கொண்டிருக்கும் தியரி மாறிப் போகும் என்கிறார் தில்லி பல்கலைக் கழகத்தின் நயன் ஜோக் லஹிரி.

டாக்டர் கதிரொளி மற்றும் ஆராய்ச்சிக் குழுவினர்



இந்த கண்டுபிடிப்புகளை வைத்துப் பார்த்தால் நமது மூதாதையர் எந்த நாகரீகத்தையும் பார்த்து காப்பியடித்து வளரவில்லை. நமது மண்ணின் மைந்தர்களின் புத்திசாலித்தனத்தினாலேயே வளர்ந்தது என்பது தெளிவு

இன்னும் பல சுவாரசியமான கேள்விகள் உள்ளது அது காம்பே சௌராஷ்ட்ர மக்கள் எங்கிருந்து வந்தனர்? என்ற கேள்விக்கு விடை கண்டால் காலம் காலமாக வரலாற்று நிபுணர்கள் தேடும் சில கேள்விகளுக்கு விடை கிடைக்கும். சில விடுபட்ட தொடர்புகளுக்கு பதிலும் கிடைக்கும் என்கிறார் ஆர்க்கியலாஜிகல் சர்வே ஆப் இந்தியாவின் முன்னாள் டைரக்டர் ஜெனரல் ஜகத் பதி ஜோஷி

என்.ஐ.ஓ.டியின் கண்டுபிடிப்பு உலகெங்கிலும் வரலாற்று நிபுணர்களிடத்தில் சர்ச்சையையும், ஆர்வத்தையும் கிளப்பி விட்டிருக்கிறது அதே கால கட்டதிலிருந்த மெஹர்கர் நகரத்துடன்இந்த காம்பே நகரம் ஒத்துப் போனால்தான் சரியாக இருக்கும் என்கிறார் தெற்காசிய அகழ்வாராய்ச்சி நிபுணரான ரிச்சர்ட் மெடோ.

இதனிடையே அமெரிக்காவின் பென்சில்வேனிய பல்கலைக்கழக நிபுணர் கிரிகோரி போஸல் ஒரு கல்லாகிப் போன மரத்துண்டை வைத்து அந்த நாகரிகத்தின் வயதை எடை போடக் கூடாது அது அலைகளால் வேறு இடத்திலிருந்தும் அடித்து வரப்பட்டிருக்கலாம் என்று எதிர்ப்பு தெரிவித்தார்.

இதனால் என்.ஐ.ஓ.டி தலைவரான் எஸ். கதிரொளி மற்ற எல்லா பொருட்களையும் அனுப்பி அதன் காலத்தை அறியப் போவதாகச் சொல்லி இருக்கிறார்.

2001 மே மாதம் இதே குழு கடலில் நகரம் மூழ்கி இருக்கிறது என்று சொன்னதை அனைவரும் சுத்த பேத்தல் என்றார்கள். ஆனால் அது பொய்யாகியது நீர் மூழ்கி கேமிரா, ரோபோ பொருந்திய நீர் மூழ்கி வாகனம் ஒன்றையும், தோண்டுவதற்கும், மாதிரிகளை சேகரிப்பதற்கும் தேவையான கருவிகளை எடுத்துச் சென்றார்கள். காம்பே நகரம் இருந்ததை நிரூபிக்க தேவையான பொருட்களை மேலே எடுத்துவர முடிவு

செய்தா ர்கள். மேல் பரப்பில் கா ம்பே அமைதியா க கா ட்சியளிக்கும். ஆனா ல் உலகின் மிக மோ சமா ன நீரோ ட்டங்கள் இதன் கடலடியில்தா ன் இருக்கிறது

கடலடி ஒரே களிமண் மயமா க கா ட்சியளித்தது. ரோ போ மூலமா க எடுக்கப்பட்ட படங்கள் தெளிவா கத் தெரியவில்லை. மா திரிகளை சேகரிக்கும் இயந்திரம் அடிக்கடி பழுதா னது. மனித உடலின் மிச்சங்களைப் பா ர்த்து மிரண்டோ ம். ரா த்திரி கனவில் ஆவிகள் வந்து போ னது என்கிறா ர் கடல் நிலவியல் நிபுணர் எஸ். பத்ரி நா ரா யணன்.

அரிய பொ ருட்கள் மேலே வர வர அவர்களின் உற்சா கம் இரு மடங்கா னது நா ள்தோ றும் டன் கணக்கில் அள்ளப்பட்ட சகதியிலிருந்து அந்த கல்லா கிப் போ ன மரத்துண்டைக் கண்டா ர்கள்.

இதனா ல் ஏ.எஸ்.ஐ. கோ வா விலிருக்கும் நேசனல் இன்ஸ்டிடியூட் ஆப் ஓசனோ கிரா பி, ஆமதா பா திலிருக்கும் பிசிகல் ரிசர்ச் லேபரடரி, என்.ஜிஆர்.ஐ.பிஎஸ்.ஐ.பி என பல நிறுவனங்கள் சென்னை என்.ஐ.ஓ.டிக்கு உதவ களத்தில் குதித்திருக்கின்றன.

மேலும் பல தகவல்களை இந்த சௌரா ஷ்ட்ர கடற்கரை நகரத்திலிருந்து நமக்கு தரக் கா த்திருக்கின்றன.

## சௌரா ஷ்ட்ரத்தின் பிரபலங்கள்

கணா தர் கா லம் கி.மு 600 

அணுக் கொ ள்கையின் தந்தை

பா ரதத்தின் ஆறு முதன்மையா ன தத்துவங்களில் ஒன்றா ன 'வைஷேஷிக' தத்துவத்தை நிறுவியர் ஆச்சா ர்யர் கனா தர். மிகச் சிறந்த அணுவா தி, தத்துவஞா னி சௌரா ஷ்ட்ரத்தில் துவா ரகா விற்கு அருகிலுள்ள பிரபா ஸ் படணில் பிறந்தவர்.

இயற்கை தோ ன்றுவதற்கு கா ரணமா யுள்ள பொ ருட்களை ஒன்பது மூலக்கூறுகளா க வகைப்படுத்தினா ர். அவை : நிலம், நீர், ஒளி, கா ற்று, ஈதர், நேரம், ஆகா யம், மனம் மற்றும் ஆன்மா .

"ஒவ்வொ ரு பொ ருட்களும் சின்னஞ்சிறு அணுக்களா ல் ஆனவை. அணுக்கள் எல்லா ம் பிரிக்க முடியா த அணுமூலக்கூறுகளா ல் ஆனவை, ஒவ்வொ ன்றும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டிருக்கும்" என்று தமது கொ ள்கையின் விவரித்தா ர்.

அணுக்களின் இயக்கத்தினைப் பற்றியும், அணுவின் பரிமா ணத்தைப் பற்றியும் கூறியதோ டு, அவற்றின் வேதிவினை விளைவுகளையும் அழகா க எடுத்துரைத்துள்ளா ர்.

புகழ்பெற்ற வரலா ற்றா ளரா ன டிஎன். கோ ல்புரூக் கூறுகையில் 'ஐரோ ப்பிய அறிவியலறிஞர்களை ஒப்பிடுகையில், கனா தர் மற்றும் இந்திய அறிவியலறிஞர்கள், இத்துறையில் மிகுந்த சா தனை புரிந்துள்ள பிரபஞ்ச மேதைகள்' என்று பா ரா ட்டியுள்ளா ர்.



பா ஸ்கரா ச்சா ரியா ர் - II

கா லம் கி.பி 1114-1183

அல்ஜீப்ரா கணித மேதை.

விஜ்ஜதித் என்ற கிரா மத்தில் பிறந்தவர் பா ஸ்கரா ச்சா ரியா ர். அல்ஜீப்ரா , எண்ணியல், வரைகணிதம் போ ன்றவற்றில் இவர் அளித்துள்ள பங்கு புகழ்பெற்றதும், அழிவற்றதுமா கும். இவரது கடின முயற்சியா ல் விளைந்த புத்தகங்களா ன 'லீலா வதி', 'பீஜ கணிதம்' ஈடு இணையற்றவை.

இதன் அறிவா ர்ந்த சிறப்பம்சங்களினா ல், இப்புத்தகங்கள் உலகின் பல்வேறு மொ ழிகளிலும் மொ ழி பெயர்க்கபட்டுள்ளது. மேலும் கோ ள்களின் நிலைகள், அவற்றின் இயக்கம், நட்சத்திரக் கூட்டங்களின் அணிவகுப்பு, கிரகணங்கள் போ ன்றவை கணித ரீதியா கக் கணக்கிட்டு, வா னியலில் புதிய சகா ப்தத்தை தோ ற்றுவித்தது இவரது 'சித்தா ந்த சிரோ மணி'என்ற புத்தகம்.

புவிஈர்ப்பு விசையைப் பற்றி இவரது 'சூர்ய சித்தா ந்தம்' என்னும் புத்தகத் இவ்வா று விவரிக்கிறது. "பொ ருட்கள் புவியின் மேல் விழுவதற்கு பூமியின் ஈர்ப்பு விசையே கா ரணம், பூமி, கோ ள்கள், நட்சத்திர மண்டலங்கள், துணைக்கோ ள்கள், சூரியன் மற்றும் சந்திரன் இத்தகைய புவிஈர்ப்பு விசைகளுக்கு உட்பட்டு, வரைமுறைப்படுத்தப்பட்ட ஒழுங்கா ன சுற்றுப் பா தையில் இயங்குகின்றன"

ஐசக் நியூட்டனுக்கு 500 வருடங்களுக்கு முன்னமேயே புவியீர்ப்பு விசையைப் பற்றி பா ஸ்கரா ச்சா ரியா ர் விளக்கியுள்ளா ர். இவரது பல கொ ள்கைகளே, பெர்ஸிய (பா ரசீக) மற்றும் ஐரோ ப்பிய விஞ்ஞா னிகளின் பல்வேறு சா தனைகளுக்கு தூ ண்டுகோ லா க இருந்துள்ளது.

பரத்வா ஜ்

கா லம் கி.மு 800 விமா னத் தொ ழில் நுட்பக் கலையின் முன்னோ டி

ஆயுர்வேதம் மற்றும் இயந்திர அறிவியலின் முன்னோ டியா கக் கருதப்படும் ஆச்சா ரியர் பரத்வா ஜரின் தன் ஆஸ்ரமத்தை பிரயா க் நதிக்கரையில் அமைத்திருந்தா ர். இவர் 'யந்த்ர சர்வஸ்வ' என்ற புத்தகத்தை எழுதினா ர். இந்நூ ல் வா னியல் உண்மைகளையும், வா ன்வெளி அறிவியலையும் அதில் இயந்திரம் பறக்கும் வழிகளையும், பறக்கும் தொ ழில்நுட்பத்தையும் பல விளக்கங்களுடன் எடுத்துரைக்கிறது.

இதில், பறக்கும் இயந்திரங்களை மூன்று வகையா கப் பிரிக்கிறா ர். 1. பூமியின் ஒரு இடத்திலிருந்து மற்றோ ர் இடத்திற்கு பறப்பது.

2) ஒரு கோளிலிருந்து மற்ற கோள்களுக்குப் பறப்பது 3) பிரபஞ்சங்களுக்கிடையே பறப்பது

இவரது விமான வடிவமைப்பு விளக்கங்கள் இன்றைய விமானப் பொறியாளர்களுக்கும்கூட மிக ஆச்சரியமாக இருப்பதோடு, அவர்களது மனதில் பிரமிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. அவற்றில் சில...

1) பூரணமான ரகசியம் : இத் தொழில்நுட்பம் பறக்கும் இயந்திரத்தை சூரிய ஒளியையும், காற்று விசையையும் பயன்படுத்தி கண்களுக்குப் புலனாகாமல் மறைய வைப்பது. 2) உயிருள்ள ரகசியம் : இத் தொழில்நுட்பம், கண்களுக்குத் தெரியாமல் மறைந்து போயிருக்கும் இயந்திரத்தை மின்விசை கொண்டு தெரிய வைப்பது.

3) ஒட்டுக் கேட்கும் ரகசியம் இத் தொழில்நுட்பம், மற்றொரு விமானத்தில் நடைபெறும் உரையாடலைக் கேட்பது. 4) பார்க்கக்கூடிய ரகசியம் : இந்த தொழில் நுட்பம் மற்றொரு விமானத்திற்குள் நடப்பவைகளைப் பார்ப்பது.

இவரது அறிவார்ந்த இந்த கண்டுபிடிப்புகளால், விமானத் தொழில்நுட்பத்தின் முன்னோடியாகக் கருதப்படுகிறார் பரத்வாஜ்.

பிரம்ம குப்தா

இவர் கி.பி. 598 வருடத்தைச் சேர்ந்தவர்.

முதன் முதலில் பூஜ்ஜியத்தை கையாள வழிமுறைகளை கண்டறிந்தவர்.

$$ax_2 + 1 = y_2$$

என்ற சூத்திரத்தை கண்டறிந்தவர். இவரது பிரம்மஸ்புட சிந்தாந்தா என்ற நூல் மிகப் பிரபலமானது. எனவே இந்த புஸ்தகம் அரபியில் சிந்த் ஹிந்த் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

தக்கர் பாபா



இவர் சௌராஷ்ட்ரத்தில் உள்ள பாவ் நகர் (குஜராத்) மாவட்டத்தில் 29-11-1869ல் பிறந்தார். இவருடைய முழுப் பெயர் அமிர்த விட்டல் தாஸ் தக்கர். இவருடைய அப்பா எளிமையான குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் தன்னுடைய மகனை இன்ஜினியரிங் படிப்பு படிக்க வைத்தார். இவர் தன்னுடைய 45 வயது வரை இன்ஜியரிங் தொழில் செய்த பின்பு நாட்டுக்குச் சேவை செய்ய ஆரம்பித்தார். 1905ல் கோபாலகிருஷ்ண கோகலேவுடன் 'பாரத் சேவா சமாஜ்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். 1914ல் மதுராவிலும், 1918ல் குஜராத்திலும், 1920ல்

ஒரிசாவிலும் பஞ்சம் ஏற்பட்டபோது இந்த அமைப்பின் மூலம் உணவு மற்றும் உடை போன்ற பொருட்களை தன்னுடன் வேலை செய்பவர்களிடம் பெற்று நிவாரணம் செய்தார்.

வனவாசிகள் இவரிடம் கொண்டிருந்த தொடர்பு காரணமாக அம்மக்களுக்குத் தொண்டாற்ற எண்ணம் கொண்டார். இதற்காக இவர் 'பஞ்ச்மஹால் ஜில்லா பீல் சேவா மண்டல்' என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் பீல் மக்களுக்காக ஹாஸ்டல் மற்றும் ஆரம்ப பள்ளியையும் நிறுவினார். இவர் பாரதத்தில் உள்ள வனவாசிகள் வசிக்கும் இடங்களுக்குச் சென்று அவர்களுடைய பிரச்சனைகளை கேட்டறிந்து அவற்றை சீர் செய்தார். இந்த நேரத்தில் இவருக்கு நாகாலாந்தில் உள்ள கிறிஸ்தவர்களின் மதமாற்ற சூழ்ச்சி தெரிய வந்தது. அதில் தன் எண்ணத்தைத் திருப்பி பீல் இன மக்கள் வசிக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் ராமருக்காக ஒரு கோயிலை அமைத்து அவர்களுடைய மனதில் ராம பக்தியை வளர்த்தார். 1930ல் காந்திஜியின் சத்தியாகிரக போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை தண்டனை அனுபவித்தார். விடுதலை அடைந்த பாரதத்தின் அரசியல் சட்டசபை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, வனவாசி மக்கள் மேம்பாட்டிற்கு தேவையான விதிகளை அரசியல் நிர்ணய சட்டத்தில் சேர்ப்பதற்கு வழி வகுத்தார். தன்னுடைய வாழ்நாளை சேவை செய்தே கழித்த இவர் ஜனவரி 21, 1951ல் காலமானார்.

ஸ்ரீ வேங்கட்ரமண பாகவதர்

தியாகராஜ ஸ்வாமிகளின் பிரதம சிஷ்யரான ஸ்ரீ வேங்கட் ரமண பாகவதர் தஞ்சாவூர் அய்யம்பேட்டையைச் சேர்ந்த இராமச்சந்திரபுரத்தில், சௌராஷ்ட்ர வீர குலத்தில் பிறந்தார். இவது தந்தை ஜகுவான். நன்ன ஸ்வாமி, தாயார் நாகலக்ஷ்மி அம்மாள்.

இவர் 18-2-1781 ல் பிறந்தார். கவிகள் கீர்த்தனைகள் பலவற்றை இயற்றினார். இவர், தெலுங்கு, கன்னடம், பைசாகி, ஹிந்தி, பாலி, உத்கலம், தமிழ், சௌராஷ்ட்ரம் மற்றும் பல மொழிகளில் திறமை இருந்ததால் அம்மொழிகளில் கீர்த்தனைகள் இயற்றினார்.

இவர் இயற்றிய பலப்பல கீர்த்தனைகளை தியாகராஜர் என முத்திரையிட்டு தம் குருவிற்கு காணிக்கையாக வழங்கினார். இவருக்கு கிருஷ்ணரின் 'ராஜகோபால ஸ்வாமியின்' வடிவத்தில் கடவுள் தரிசனம் கிடைத்தது. இவர் 1874ம் ஆண்டு மோக்ஷமடைந்தார்.

வரகவி ஸ்ரீ வேங்கடசூரி ஸ்வாமிகள்

வரகவி வேங்கடசூரி ஸ்வாமிகள் தஞ்சாவூர் அய்யம்பேட்டையில் 1818ல்



சௌராஷ்ட்ர வீர குலத்தில் பிறந்தார். இவரது தந்தை பெயர் நாராயண சர்மா, தாயார் பெயர் ரெங்கநாயகி தேவி

இவர் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களுக்குஆஸ்தான கவிஞராக இருந்தார். சத்ரபதி சிவாஜியின் வழித்தோன்றலான மற்றொரு ராஜமாத்தாண்ட சிவாஜி என்ற பெயர் கொண்ட சிவாஜி மன்னர் இவரை தன் ஆஸ்தான கவிஞராக நியமித்தார்.

இவருக்கு தக்ஷின கா ஸிதா ஸ், கவி கேசரி, வித்யா விஸா ரதா , பத்யகேசரி, கவி ஸிரோ மணிபோ ன்ற பல பட்டங்கள் கிடைத்தது

இவர் ஸமஸ்கிருதம், ஹிந்தி, தெலுங்கு, மஹா ரா ஷ்ட்ர, சௌரா ஷ்ட்ர மொ ழிகளில் புலமை இருந்தது

இவருக்கு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்மப் பெருமா ளும், ஸ்ரீ ஆஞ்சநேயரும் தரிசனம் தந்தா ர்கள்.

இவர் பல்வேறு புத்தகங்கனை எழுதியுள்ளா ர். 1) மஹா கா வ்ய இரா மா யண சங்கீத கீர்த்தனைகள், 2) பா ல ரா மா யணம், 3) ஸ்ரீ ரா மா வளி 4) ஸ்ரீ கிருஷ்ணா வளி 5) பக்திரச கீர்த்தனைகள் 6) லா வணிகீதங்கள் 7) தா மரைத் துவஜன் கதை, 8) ருக்மணிகல்யா ணம் 9) ஜக்குபா ய் சரித்திரம் 10) சமஸ்கிருதத்தில் நௌகா கா வ்யம் ஆகியவற்றை எழுதியுள்ளா ர்.

இவர் 1890ல் யமுனா நதிக்கரையில் மூழ்கி ஜலசமா தி அடைந்தா ர்.

ஸ்ரீஸ்ரீ கோ விந்த தா ஸ ஸ்வா மிகள்

இவர் கோ விந்த பீடம் என்ற ஆஸ்ரமத்தை நிறுவி சந்யா சம்



பூண்டவர். இவர் 26-5-1892ல் மதுரையில் சௌரா ஷ்ட்ர விப்ர குலத்தில் பிறந்தவர்.

வருடந்தோ றும் இவ்வா ஸ்ரமத்தில் ஸ்ரீ கா யத்ரீ பிரா ஹ்ம யக்ஞர் நடத்தப்பட்டு வருகிறது

இவர் 7-4-1974ம் ஆண்டு மோ க்ஷமடைந்தா ர்.



மஹா கவி அழகரா ர்யர்

இவர் சேலம் மா வட்டத்தில் சௌரா ஷ்ட்ர விப்ர குலத்தில் நரசிம்மா ர்யருக்கும், ஸ்வர்ண ஜெயந்தி அம்மா ளுக்கும் 1832ம் ஆண்டு பிறந்தவர்.

இவர் வரகவி வேங்கடசூரியின் சிஷ்யரா வா ர். சங்கீதத்தை கற்றறிந்தவர். பிடில் வித்வா ன். மற்றும் எட்டு பா ஷைகளில் புலமை கொ ண்டவர்.

இவர் பல புத்தகங்கள் எழுதியுள்ளா ர். 1) பஞ்சல் சரித்திரம் 2) ஆஸௌஸ விதிகள் 3) விஷ்ணு புரா ணம் 4) சௌரா ஷ்ட்ர விபா கரணம் 5) ந்ருஸிம்ஹ சதகம் 6) ஸிருங்கா ர வர்ண கீதங்கள் 7) பஜனோ ற்சவ கீர்த்தனைகள், லா வணிகள்.

இவர் சௌராஷ்ட்ர மாநாடுகள் நடத்தப்பட்டபொழுது அவைகளில் முக்கிய பங்கு வகித்தார். 1906ம் ஆண்டு மோக்ஷமடைந்தார்.

மேலும் இந்தியவிற்கும் பாகிஸ்தானுக்கும் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, சமஸ்தானங்களை ஒன்றிணைத்த இந்தியாவின் "இரும்பு மனிதர்" சர்தார் வல்லப் பாய் படேல், தக்கர் பாபா, சௌராஷ்ட்ர தேசத்தில் குஜராத்தி மொழியை வடிவமைத்த நரசிம்ஹ மேத்தா, உமா சங்கர் ஜோஷி சுந்தரம், சௌராஷ்ட்ர தேசத்தின் மராட்டி மொழியை வடிவமைத்த துறவி ஸ்ரீஞானேஸ்வர், மற்றும் வாமன், மோரோபந்த், ஏக்நாத், நாம்தேவ், துக்காராம், தற்கால பிரபல தமிழ் திரைப்பட பின்னனி இசைப் பாடகர் திரு டிஎம். சௌந்தரராஜன், பழனி முருகருக்காக நவபாஷாண சிலைச் சித்தர் சக்திதாஸ் நரசிம்மானந்தா, மற்றும் இப்புத்தகத்தில் குறிப்பிடப்படாத பலப்பலர் உள்ளனர். அணைவருக்கும் இந்நாடு நன்றியைச் செலுத்துவதாக.

சௌராஷ்ட்ரத்தில் குஜராத்தி, மராட்டி எப்பொழுது பிறந்தது?

சௌராஷ்ட்ர தேசத்தில் பலப்பல வட்டார வழக்குகளில் பேசப்பட்ட மொழிகள் கி.பி 11ஆம் நூற்றாண்டில் குஜராத்தி என்ற மெல்ல ஓர் உருப் பெறலாயிற்று. இதன் மற்றொரு பகுதியில் துகாராம், நாம்தேவ் போன்றோர்களின் இலக்கியங்களினால் மராட்டி என்ற மொழி உருப்பெற ஆரம்பித்தது அதுவரை படித்த பண்டிதர்கள் சமஸ்கிதத்திலேயே தமது படைப்புகளை எழுதுவர். வெளியிடுவர். கி.பி 11ஆம் நூற்றாண்டில் மக்கள் பேசும் வட்டார வழக்கிலேயே, அதாவது சமஸ்கிருத இலக்கணப்படி இல்லாமல் (புதுக்கவிதைகள் போல்) எழுத ஆரம்பித்தனர். பின்னர் இவற்றிக்கு குஜராத்தி, மராட்டி என்ற பெயர் கிடைக்க ஆரம்பித்தது இலக்கிய படைப்பின் அடிப்படையில் பின்னர் இலக்கணம் உருவாக்கப் பட்டது

இதற்கு ஆதாரமாக வேதங்களில் சௌராஷ்ட்ர தேசம் என்று உள்ளதே தவிர குஜராத்தி, மராட்டி என்று குறிப்பிடப் படவில்லை. வால்மீகி எழுதிய இராமாயணத்திலும் மேற்படி தேசங்கள் குறிப்பிடப்படவில்லை. எனவே சௌராஷ்ட்ரத்தின் பல்வேறு குழுக்கள் ஒருங்கிணைந்து குஜராத்தி, மராட்டி என்ற இரு மொழிகளை உருவாக்கியுள்ளனர்.

இதற்கு ஆதாரமாக பின்வரும் சௌராஷ்ட்ரா, குஜராத்தி, மராட்டி மொழி வார்த்தைகள் சிலவற்றை ஒப்பு நோக்குவோம். இதனால் இவைகள் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவை என்பது தெளிவாகப் புலனாகும்.

| சௌராஷ்ட்ரா | குஜராத்தி | மராட்டி | தமிழ் |
|---|---|---|---|
| பள்ளொ | பள் | பல் | பழம் |
| கேர் | கர் | கர் | வீடு |
| தெஸ் | தஸ் | தஹா | பத்து |
| கமல் | கமல் | கமள் | தாமரை |
| கொவேத் | கவத் | கவத் | புல் |

| | | | |
|---|---|---|---|
| சுன்னொ | சூனொ | சூனா | சுண்ணா ம்பு |
| லீம் | நீம் | நீம் | வேப்பமரம் |
| விகு | விஷ் | விஷ் | விஷம் |
| பட்சி | பக்ஷி | பக்ஷி | பறவை |
| ஆவ் | ஆவ் | ஆவ் | வா |
| ஜா | ஜா | ஜா வ் | போ |
| பீஸ் | பேஸ் | பஸ் | உட்கா ர் |
| கோ ன் | கோ ன் | கோ ண் | யா ர்? |
| பே | பீ | பீ | குடி |
| லா வ் | லா வ் | லா வ் | பற்றவை |
| ஏட் | ஆட் | ஏதே | இங்கே |

இது போ ன்ற பல்வேறு சொ ற்களும் மேற்கண்ட மொ ழிகளில் ஒன்றா கவே இருக்கும். ஆனா ல் வேற்றுமை உருபுகள் மட்டும் மா றுபடும். வேர்ச்சொ ல் மா றுபடா து இதற்கா ன உதா ரணங்களை நா ம் படித்தா ல் இவை ஒரே சௌரா ஷ்ட்ரத்தின் வட்டா ர வழக்குகளே என்று எளிதா கப் புரிந்து கொ ள்ள முடியும். மேலும் குஜரா த்தி மொ ழியில் பா ரசீகச் சொ ற்கள் பல கலந்திருக்கும். அவைகள் வேண்டுமென்றே கலக்கப்பட்டவை. அவைகளை விலக்கினா ல் எஞ்சியிருப்பது சௌரா ஷ்ட்ர வா ர்த்தைகளே. எனவே சௌரா ஷ்ட்ரத்தின் பழமை நமக்கு தெளிவா கப் புலனா கும்

சௌரா ஷ்ட்ர மொ ழியின் எழுத்துருவங்கள்

பழைய எழுத்துமுறை (மரா ட்டி, ஹிந்தி, சமஸ்கிருதம், சௌரா ஷ்ட்ரம்)




தற்போ தைய குஜரா த்தி எழுத்துமுறை



சமஸ்கிருதத்திலிருந்து பிறந்த சௌரா ஷ்ட்ரமும், மரா ட்டியும், ஹிந்தியும் தேவநகரி எழுத்துருவைத்தா ன் உபயோ கிக்கின்றன.

குஜரா த்தி எழுத்துரு தேவநா கரி எழுத்துருவிலிருந்து சில எழுத்துக்களை மட்டும் மா ற்றியும், பெரும்பா லா ன எழுத்துக்கள் தேவநகரி எழுத்துருவின் மேல் உள்ள கோ டு இல்லா மலும் இருக்கும்.

தொ .மு ரா மா ரா யின் வரிவடிவம் (தமிழ்நா டு)



தென் பா ரத சௌரா ஷ்ட்ர எழுத்துரு திரு ரா மா ரா ய் அவர்களா ல் சிலவருடங்களுக்கு முன்பு உருவா க்கப்பட்டது அது தேவநகரி எழுத்துருவில் இல்லா த எ, ஒ என்ற குறில் எழுத்துக்களை உடையதா க இருக்கிறது மேலும் வரி வடிவமும் தேவநகரி எழுத்துருவைப் போ ல இருக்கா து

இப்புத்தத்தில் உள்ள பல விஷயங்கள் தமிழகத்தில் வா ழும் சௌரா ஷ்ட்ர மக்களுக்கு ஆச்சரியமா க இருக்கலா ம். ஏனெனில் படிப்பறிவற்ற ஏழ்மை நிலையில் நெசவு என்ற குலத்தொ ழில் முறையை மட்டுமே நம்பி வா ழும் பலர் இன்னமும் இருக்கவே செய்கிறா ர்கள். அவர்களைப் போ ன்றவர்களுக்கும், மற்றவர்களுக்கும் பயனா க இருக்கும்படி எழுதியுள்ளேன்.

தமது பூர்வீக வரலா ற்றைப் பற்றிய தேடல்களில் சிறிதளவா வது நா ன் கொ ண்ட முயற்சி பலருக்கும் பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை.




தீவா க இருந்த சௌரா ஷ்ட்ரம்!

மேற்கண்ட வரைபடம் மேற்கிந்தியா வின் பழைய வரைபடமா கும். வரைபடத்தில் கட்ச், சௌரா ஷ்ட்ரா ஆகிய பகுதிகள் தீவா க இருப்பதைக் கா ணலா ம். பெரிய ரா ண், சிறிய ரா ண் பகுதிகள் கட்ச் உடன் இணையா மல் தனியா க இருப்பதைக் கா ணலா ம்.

இத்தீவு எப்படி பா ரதத்துடன் நிலமா கச் சேர்ந்தது?

பெரிய ரா ண் பகுதி அக்கா லத்திய இயற்கை வளைகுடா . அங்குள்ள ஜூஞ்ஜூ வா ட் பகுதி கா ம்பே வளைகுடா விற்கு செல்லும் பா தையா க இருந்தது அங்கிருந்து தென்

பாரதத்தின் பல துறைமுகங்களை சென்றடைய பயன்படுத்தப்பட்டது. இக் கடல்வழியானது 13ஆம் நூற்றாண்டு வரை மிகப் பிரபலமாகவும், போக்குவரத்து நிறைந்ததாகவும் இருந்தது.

அதன் பிறகு சிந்து நதியின் நீரோட்டம் மாறியதால் வளைகுடா பகுதி வறண்டு போகத் துவங்கியது. மேலும் சரஸ்வதி நதியானது மணலை நிரப்பியது. மணற் குன்றுகள் உருவானது. பின் சரஸ்வதி நதி மறைந்து போய்விட்டது (சாட்டிலைட் படங்கள் சரஸ்வதி நதியின் பாதையைக் கண்டறிந்துள்ளன). லோனி மற்றும் பனஸ் (பர்னஷா) சிற்றாறுகள் தன் நீரோட்டத்தை மணற்குன்றுகள் தடுத்தால் மாற்றிக் கொண்டன. ப்ராசி சரஸ்வதி நதியும் மணலால் நிரம்பத் துவங்கியது. ரூபா என்ற சிற்றாறும் மழைக்காலத்தில் மட்டுமே நீரோட்டம் உடையதாக ஆகிவிட்டது. தற்போது சபர்மதி பகுதியும் மணற்குன்றுகளால் நிரப்பட்டுவிட்டது. அதிக அளவில் மணலை மேற்கண்ட ஆறுகள் அடிந்து வந்து கடலின் கழிமுகத்தில் சேர்த்ததால் தீவாக இருந்த சௌராஷ்ட்ரப் பகுதி ஏனைய சௌராஷ்ட்ர நிலப் பகுதியுடன் சேர்ந்து விட்டது.

சௌராஷ்ட்ரத்தைச் சேர்ந்த வைஸ்யா என்ற வியாபார சாதிப் பிரிவினைச் சேர்ந்தவர்கள் இம்மணற்குன்றுப் பகுதியில் கர்வா என்ற சாதி மக்களை தமது கப்பல் ஓட்டுநர்களாக நியமித்து வியாபாரம் செய்து கொண்டிருந்தனர். இவ்வாறு கப்பல் வைத்து வியாபாரம் செய்தவர்கள் வாஹனீ அல்லது வானீ என்ற சாதிப் பெயரால் அழைக்கப்படுகின்றனர்.

துவாரகை என்ற தீவும் மேற்கண்ட வரைபடத்தில் உள்ளது. அது தற்போது இல்லை. துவாரகை கடலில் மூழ்கிவிட்டதாக புராணங்கள் கூறுகின்றன. முன்பு இப்புத்தகத்தில் படித்த கடலில் மூழ்கிய நகரம் கிருஷ்ணர் உருவாக்கிய துவாரகை என்றே மக்கள் நம்புகிறார்கள்.

மேலும் ஸ்ரீமாலி சோனி என்ற சாதியைச் சேர்ந்தவர்கள் இப்பகுதியில் வாகேஸ்வரி தேவி என்ற தெய்வத்தை குல தெய்வமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் முக்கியத் தொழில் தங்க நகை செய்தல்.

அனில்வாத் படன், காம்பட், டோல்கா, அஹமதாபாத், வர்தமான்புரி, ஜுனாகாட், ஜாம் நகர், தரங்கதாரா, சூரத், மும்பை ஆகிய இடங்களிலும் ஸ்ரீமாலி சோனி சாதி மக்கள் வசிக்கின்றனர்.

சௌராஷ்ட்ர சமஸ்தானங்கள் வெளியிட்ட ரூபாய், நாணயங்கள்











பிரிட்டிசாருடன் ஒப்பந்தம் செய்து கொண்டபடி சமஸ்தானங்கள் தனி ரூபாய், நாணயங்களை வெளியிடும் அதிகாரம் பெற்றிருந்தன. சௌராஷ்ட்ரமானது இந்தியாவின் மேற்குப் பகுதியை அமைக்கிறது. இந்திய அரசியல் சாசனப்படி குஜராத் மாநிலமாக அழைக்கப்படுகிறது. மிகப் பெரிய சமஸ்தானமாக 1948 வரை சௌராஷ்ட்ரம் இருந்தது. சௌராஷ்ட்ரத்திலுள்ள மோர்வி தாரங்கராதா, நவநகர் ஆகிய சமஸ்தானங்கள் தனியாக ரூபாய் நோட்டுகளை வெளியிட்டது.

கட்ச் சமஸ்தானமும் தனியாக ரூபாய் நோட்டுகளை வெளியிட்டது.

இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஸ் படைகள் தோற்றதால் பிரிட்டிசாருடன் ஒப்பந்தம் செய்து ஆண்டு வந்த சமஸ்தானங்கள் நாணயத்திற்கு பதிலாக காகித கூப்பன்களை வழங்கின. சௌராஷ்ட்ர சமஸ்தானங்கள், ராஜஸ்தான், சிந்து பலுசிஸ்தான், மற்றும் மத்திய பாகிஸ்தானில் இக்கூப்பன்கள் புழங்கின.

போரின் செலவுகளை பிரிட்டிஷ் அரசாங்கம் சமஸ்தானங்களின் மீது ஏற்றியது. இதனால் மிகுந்த பணப்பற்றாக்குறை சமஸ்தானங்களுக்கு ஏற்பட்டது. எனவே காகித ரூபாய், நாணயங்களுக்கு பதிலாக காகித கூப்பன்கள் வழங்கப்பட்டன. தனித்தனி ரூபாய் நோட்டுகளை வெளியிட்ட சௌராஷ்ட்ர சமஸ்தானங்கள் எவை? எவை?

1) அம்பாலியாரா, 2) பஜனா 3) பல்வான் 4) பாம்ரா 5) பான்த்வா பாரமஜ்மு 6) பிகானீர் 7) பில்கா 8) புன்டி 9) சூடா 10) நன்ன தேவல் 11) மட்ட தேவல் 12) தார் 14) துரோல் 15) கோண்டல் 16) இந்தர்கர் 17) ஜெல்சால்மீர் 18) ஜவோரா 19) ஜஸ்தன் 20) ஜுனாகாட் 21) காலட் 22) கடால் 23) கைர்பூர் 24) மஸ்ரோல் 25) மேங்கானி 26) மோர்வி 27) முலி 28) நவல்கர் 29) நவநகர், 30) பாலிதானா 31) போர்பந்தர் 32) ராஜ்கோட் 33) சைலானா 34) சைலா 35) சீதாமாவ் 36) டோங்க் 37) விட்டல்கட்

10) சூடா சமஸ்தானம் :

சூடா சமஸ்தானம் (கிழக்கு கத்தியவார்) மேற்கிந்திய கம்பெனியுடன் இருந்தது.



ஜலவாத் பிராந்தியத்தை சௌராஷ்ட்ர சமஸ்தானத்துடன் இணைந்தது.

22‘ 23’ - 22‘ 32‘ வடக்கு 71‘37‘ - 71‘51’ கிழக்கு அட்ச, தீர்க்க ரேகையில் அமைந்துள்ளது.

இதன் பரப்பளவு 78 சதுர மைல்கள். (1 டவுன், 13 கிராமங்கள்)

இதன் ஆட்சியாளர் தாக்கூர் ஸ்ரீ பஹாதூர் ஜோவர் சிங்ஜி

(1920- 1947)

இச்சமஸ்தானங்கள் சுதந்திரம் அடைய தாங்களும் ஒரு காரணம். முஸ்லீம் ஆதிக்கம் போவதற்கும் நாங்களே காரணம். எனவே நாங்கள் தனியாக ஆண்டு கொள்கிறோம் என்று கூறின. ஆனால் இதனை வல்லபபாய் படேல் நிராகரித்தார்.

சுதந்திரத்திற்குபின் சர்தா ர் வல்லப பா ய் படேல் இச்சமஸ்தா னங்களை பா ரதத்துடன் இணைத்தா ர்.

இது போ ன்று அனைத்து சமஸ்தா ன விபரங்களும் உள்ளன. அவை இங்கு இடமின்மை கா ரணமா க குறிப்பிடப்படவில்லை.

வரலா ற்றில் சற்று முன் செல்வோ ம்.

இரண்டு உலகப் போ ர்களிலும் பிரிட்டீஷ் ஆதிக்கத்திலிருந்த சௌரா ஷ்ட்ர சமஸ்தா னங்கள் பிரிட்டீசுக்கு உதவி செய்தன. இதனா ல் அதன் பொ ருளா தா ரம் மிக மிக குறைந்தது

போ யர் (Boer) போ ர் சமயத்தில் பெல்லா ரி, அஹமதா பா த், திருச்சிரா ப்பள்ளி ஆகிய இடங்களில் போ ர் முகா ம்கள் இருந்தன. திருச்சிரா ப்பள்ளி முகா மின் கிளையா க நீலகிரியிலுள்ள கைட்டி செயல்பட்டது

இச் சமஸ்தா னங்கள் நா ணயத்திற்குப் பதிலா க கா கித கூப்பன்கள் வழங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டன. முஸ்லீம் ஆதிக்கத்தை எதிர்க்கவே சௌரா ஷ்ட்ர சமஸ்தா னங்கள் பிரிட்டீஷ் உடன் சேர்ந்து செயல்பட்டன. அதில் வெற்றியும் கண்டன. பிரிட்டீசா ருடன் நட்புறவுடன் பழகி அவர்களிடமிருந்து ஒருங்கிணைப்பு நிர்வா க முறைகள், பல்வேறு நவீன ஆயுதங்கள் ஆகியவற்றை பா ரதத்திற்கு கொ டுப்பதில் பங்கா ற்றின.

எனினும் ஆங்கிலேயரை வெளியேற்ற வேண்டுமென்ற சுதந்திர போ ரா ட்டத்திற்கும் மறைமுக ஆதரவு கொ டுத்துக் கொ ண்டிருந்தன. இறுதியில் சௌரா ஷ்ட்ரத்தில் பிறந்த மகா த்மா கா ந்தி தலைமையில் பா ரதம் சுதந்திரம் அடைந்தது

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றா ல், சௌரா ஷ்ட்ரத்தில் தற்போ தும் வா ழ்ந்து வரும் சௌரா ஷ்ட்ரர்கள் தங்களை சௌரா ஷ்ட்ரர்கள் என்று அழைத்துக் கொ ள்வதில்லை.! ஆனா ல் பல நூ ற்றா ண்டுகளுக்கு முன் தமிழக மன்னர்களுக்கு சேவை செய்ய வந்த சௌரா ஷ்ட்ரர்கள் மட்டுமே தங்களை சௌரா ஷ்ட்ரர்கள் என்றுஅழைத்துக் கொ ள்கின்றனர். தமிழக சௌரா ஷ்ட்ரர்களின் வறுமை மற்றும் அறியா மை கண்டு தமிழக அரசு சௌரா ஷ்ட்ர சா திக்கு பிற்படுத்தப்பட்டவர் என்று சலுகை அளித்தது. இதனா ல் சமுதா யத்தில் புத்துணர்ச்சி ஏற்பட்டு பலர் நல்ல நிலையில் உள்ளனர். அறியா மையும், ஏழ்மையும் பல குடும்பங்களில் நீங்கி உள்ளது சௌரா ஷ்ட்ர சமுதா யம் தமிழக அரசுக்கு நன்றி தெரிவிப்பதா க!

நன்றியுரை

வேதப் பழமையா ன சௌரா ஷ்ட்ரம் என்ற இந்த புத்தகத்தை எழுத ஊக்கமளித்த அனைவருக்கும், எனது நெஞ்சா ர்ந்த நன்றிகள். இந்நூ லில் உள்ள கருத்துக்களை கோ ர்வையா க்கி பிழை திருத்தம் செய்த அச்சகத்தா ருக்கும், சிறந்த முறையில் அச்சிட்டவருக்கும், சிறந்த முறையில் இந்நூ லிற்கு ஆதரவு தந்த பொ துமக்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொ ள்கிறேன்.

ஆதார நூல்கள் :


1) தமிழும் பிராகிருதமும் - வெளியீடு : உலகத் தமிழாராய்சி நிறுவனம்

2) மொழியியல் II வாழ்வும் வரலாறும் - ஆசிரியர் Dr. ச.அகத்தியலிங்கம், M.A,,P.h.D, Dr. புஷ்பவல்லி P.h.D

3) தமிழ் மொழிச் சிந்தனைகள் - ஆசிரியர் : சாத்தூர் ராஜசேகரன்

4) புராதன இந்தியாவில் அரசியல் - வெ. சாமிநாத சர்மா (பூங்கொடி பதிப்பகம்)

5) தமிழ் நாட்டில் சௌராஷ்ட்ரர் வரலாறு - ஆசிரியர் : சேதுராமன்

6) வேதம் ஓர் அறிமுகம் - ஸ்ரீ சுரபி ஜகத்குரு சதாப்தி பப்ளிகேஷன்ஸ்

7) ஸ்ரீ பகளாமுகி மூலமந்த்ர ஹோம ஞாபகார்த்த வெளியீடு - ஆசிரியர். டிகே. முத்துஸ்வாமி சாஸ்திரி, வெளியீடு ஸ்ரீ ஸ்ரீ ஜட்ஜ் ஸ்வாமிகள் அதிஷ்டானம், புதுக்கோட்டை.

8) www.ethnolug.com

9) பண்டைய இந்தியாவில் ஆட்சி முறை - ஆர்.எஸ். சர்மா

10) இந்தியா டுடே ( பிப்ரவரி 13, 2002)

11) www.1upindia.com

12) www.indiavisit.com

13) www.ahamadabad.com

14) www.jamnagaronnet

15) www.tradewings.com

16) www.insurat.com

17) www.ethnolug.co

18) www.userstotalise.co.uk.com

19) www.eholidays.com

20) www.indiaprifile.com

21) www.webindia123.com

22) www.gujaratplus.com

23) www.garhatours.com

24) www.thebharath.com

25) www.kamat.com

26) www.emotions.com

27) www.chawra.com

28) www.ahamadabad.org

29) www.sourashtra.com

30) www.ethnolug.com

31) சூரியனார் கோவில் தல வரலாற்றுச் சுருக்கம் - வெளியீடு திருவாவடுதுறை ஆதினம்

32) அஜ்வானிஎழுதிய சிந்தி இலக்கிய வரலாறு, சாகித்ய அகாடமி வெளியீடு, தமிழாக்கம் இராம. கோபிநாதன்.

33) 30 நாளில் குஜராத்தி, பாலாஜி பதிப்பகம்.

34) 30 நாளில் மராட்டி, பாலாஜி பதிப்பகம்.

35) சௌராஷ்ட்ர பாட மாலா, நடன கோபால நாயகி ஸ்வாமிகள் ஆன்மீக எழுச்சி இயக்கம்.

36) இந்தியா டுடே டிச 31, 2003.

மற்றும் பல புத்தகங்கள், இணையதளங்கள்.